Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ்அலை

வாரமலர்
TAMILALAI
அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 30-11-2003 ஓசை -35



## பேரினவாத சிலந்திவலைக்குள் தமிழர் வாழ்வு சிதைவதா!

## தனிஅரசுதான் இறுதிவழி

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

வாரமலர் Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
30.11.2003

## மாவீரர் உரையின் வலியுறுத்தல்கள்

சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்கள் இனிமேலும் தமிழினத்தை ஏமாற்றிக்கொண்டு அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முயற்சி மேற் கொன்டால் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற ஆழமான கருத்தினை இம்முறை தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் உணர்த்தியுள்ளார்.

கடந்த கால சிறிலங்கா அரசுகள் தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்க்காது இழுத்தடித்து வருவதையும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கா மேற்கொண்டு வரும் நம்பிக்கையீனமான சம்பவங்கள் குறித்தும் தேசியத் தலைவர் தமது மாவீரர் செய்தியில் தெளிவுற வலியுறுத்தி இருப்பதைக் காணக் கூடியதாய் உள்ளது.

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய போராட்டம் தற்போது ஓய்ந்திருப்பது அரசியல் ரீதியான அணுகு முறைகளை எதிர் பார்த்தே அந்த வழிமுறையில் பள்ளமும் படுகுழியும் காணப் பட்டு இடறி மெல்லமெல்ல முன் னேறிய சமாதான அணுகு முறை கள் ஜனாதிபதியின் புதிய அரசியல் அதிரடி நடவடிக்கையால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்திற்கும் சமாதான முன்னெடுப்புக்கும் தம்மை அற்பணித்தது பலவீனப்பட்டு அல்ல. வலிமையு டன் தான் களத்தில் நிற்கிறோம். ஏமாற்றப்பட்டோம்.

இனியும் ஏமாறமாட்டோம். ஏமாற்றினால் தனியரசு அமைப்பதைவிட வேறுவழியில்லை என்பதை தெளிவுபடுத்தி இருப்பது சிங்களப் பேரினவாதிகளின் காதுகளில் இனிமேலும் விழாது இருந்தால் அதனால் ஏற்படப் போகும் பாரதூரமான விளைவுகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்.

தற்போது சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து அரசிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் மட்டும் உயிருடன் இருக்கும் நிலையில் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையின் ஆழமான கருத்துக்கள் எதிர் காலத்தில் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது உண்மை.

விடுதலைப் புலிகளை சீண்டி விடக் கூடியவகையில் சிங்களப் பேரினவாத சக்திகளின் உணர்வுகளுக்கு ஆட்பட்டு ஆயுதப்படைகள் மிகமோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் விடுதலைப் புலிகள் பொறுமையுடனும் பற்றுறுதியுடனும் செயற்பட்டுவரும் சூழ்நிலையில் இனிமேலும் தமிழ் சமூகத்தை ஏமாற்றக்கூடிய எவ்வித நடவடிக்கையையும் ஜனாதிபதி எடுப்பாரானால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானதாகவே அமையும்.

## மாவீரர் நாள் உரை:
# பன்முகப் பார்வையால் பல் தரப்புக்குமான பதிவு



"எமது இயக்கமும் சரி, மக்களும் சரி போரை விரும்பவில்லை. வன்முறைப்பாதையை விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். சமாதான வழிமுறையில் நாம் ஆழமான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கின்றோம். இதன் காரணமாகவே அமைதி நிலைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாத வண்ணம் போர் நிறுத்தத்தை நாம் இறுக்கமாகவும் உறுதியாகவும் பேணி வருகின்றோம்"

"உலகத் தமிழரின் முகவரியாகவும் ஈழத்தமிழரின் கதைவரியாகவும் வாழும்" (நன்றி-வியாசனின் உலைக்களம்) தமிழீழத் தேசியத் தலைவர் தந்தளித்த மாவீரர் நாள் கொள்கை விளக்கவுரை வரிகளில் ஒரு துளியே இது. சுமார் 25 நிமிடங்கள் ஒலித்த அவ்வுரை, பன்முகப்பார்வையால் பல் தரப்புக்குமான பதிவு என்பதைக் கருத்தூன்றிக் கவனித்தோர் கண்டுணர்வார்கள். முக்காலம் உணர்த் தப்பட்ட கருத்துச் செறிவான உரை, வீரம் விளைநிலத்தின் "தரவை" மாவீரர் துயிலும் இல்லத்தில் முணர்வு சேரக் கேட்டுக் கொண்டிருந்த எமக்கு உறுதி கொள்ள வைத்தது: துயிலும் இல்லப் பாடலில் வரும் வரிகள் மீள மீள "....சாவரும் போதிலும் தணலிடை வேகினும் சந்ததி தூங்காது" என்பதை மனதிற் பதித்தது.

"அன்றைய தமிழர்ராட்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அன்னியருக்கும் அயலவருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. இன்று எமது தாயகத்தின் பெரு நிலப்பரப்பில் எமது தன்னாட்சி நடை பெறுகின்றது" என்று தேசியத் தலைவர் அவர்கள் எமது போராட்டத்தின் வரலாற்றுப் பரிணாமத்தைக் காட்டுகின்றார். நீண்ட தனது உரையின் முற்பகுதியிலேயே சர்வதேசப் பார்வை தொடர்பான தனது பார்வையைத் தலைவர் அவர்கள் பின்வருமாறு கூறுவதிலிருந்து காணுங்கள்.

"எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலகமயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக்கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலக அரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம்."

மேற்கண்டவாறு "உலகமயமாகியுள்ள விடுதலைப் போராட்டம்" தொடர்பாக குறிப்பிட்டுள்ள தேசியத் தலைவர் சர்வதேச சமூகம் தொடர்பாக அவர்கள் இன்னும் பல கருத்துக்களைச் "சொல்லியும் சொல்லாமலும்" ஆக இடித்துரைத்துள்ளதை ஊன்றிப்படித்தறியுங்கள் "....ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ ...:" என்ற பாடல் வரி பொய்த்து விடுவதை அழுத்தந் திருத்தமான மாவீரர் நாள் உரை நிரூபிக்கின்றது. "பணிதல் மறந்தவர்" (நன்றி-சி.சிவசேகரம்) என்பது தமிழீழ தேசத்திற்கு உரித்தான உவமைத் தொடர் அல்லவா?

வலுவிழந்த நிலையில் ரணிலின் அரசாங்கம் இருப்பதையும், சிங்கள தேசத்தின் அரசியல் நெருக்கடி நிலை குழறுபடிகளைப் பற்றியும், அமைதிச் சூழ்நிலைக்கான ஆபத்து சிங்கள தேசத்தினாலேயே மேல் எழுந்திருப்பதையும் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிடத்தக்களவு நேரம் தனது உரையில் குறிப்பிட்டிருக்கத் தவறியிருக்கவில்லை.

"சிங்கள தேசத்தில் இன்றைய அரசாங்கம் என்று கருதக்கூடிய ஓர் ஒழுங்கமைவான கட்டமைப்பு இயங்கவில்லை. அரச அதிகாரமானது, இரு பெரும் சிங்களக் கட்சிகளின் தலைமைகள் மத்தியில் பிளவுபட்டுக் கிடக்கின்றது. பாராளுமன்ற ஆட்சியும் ஜனாதிபதி ஆட்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதும் நிலையில் உள்ளன என்று கவலையுடனான கவனிப்பு கனகச்சிதமாக வெளியாகின்றது.

தேசம் ஒன்றினது மீதான எதிர்பார்ப்பு தராதரமான "நல்லாட்சி" (GOOD GOVERNANCE) வறுமைப்பட்டு நிற்பதையும் முகாமைத்துவ தேவைப்பாடுகளுள் முதன்மையான "கட்டளைச்சங்கிலி" கொழுவுப்பட்டு அறுந்து நிற்பதையும் ஸ்ரீ லங்கா தொடர்பான கள ஆய்வாகவே மேற்படித் தொனி வெளிப்படுத்தியிருக்கின்றது எனக் கருத முடிகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்பானதும், ஆறுசுற்று அமைதிக்கான பேச்சுவார்த்தைகளின் பின்பானதுமான தமிழர் தாயகத்தின் மெய்த்தோற்றத்தைப் பற்றி தேசியத் தலைவர் அவர்கள் பின்வருமாறு உண்மையுரைக்கின்றார். சிங்கள தேசத்துடன் ஒப்பீடும் செய்கின்றார்.

"போருக்கு ஓய்வு ஏற்பட்ட போதும் எமது மக்களுக்கு இன்னும் ஓய்வு கிட்டவில்லை. முழுமையான அமைதியையும் இயல்பான வாழ்வையும் எமது மக்கள் இன்னும் அனுபவிக்க முடியவில்லை. அதே வேளை, போர் நிறுத்தத்தால் சிங்கள தேசத்தில் முழுமையான அமைதியும் இயல்பு நிலையும் நிலவுகின்றன. பொருளாதார வாழ்வும் மேம்பட்டு வருகின்றது. போர்நிறுத்தத்தின் ஆக்க பூர்வமான பயன்களைச் சிங்கள தேசமே அனுபவித்து வருகின்றது. ஆனால் தமிழர்களின் அவல நிலை தொடர்கின்றது. இது தான் இன்றைய யதார்த்த மெய் நிலை" இன்றைய சூழலை "சமாதான வேளை" என்று தப்புத் தப்பாகக் கதைப்பவர்கள் எழுதுபவர்கள் இதைக்கவனிக்க வேண்டும்.

பொருண்மிய நலன் சார்ந்த (ECONOMIC ASCEPT)கருத்துக்களைத் தனது மாவீரர் நாள் உரையில் ஆங்காங்கு சுட்டிக்காட்டியிருக்கும் தேசியத் தலைவர் அவர்கள் சிங்கள தேசத்தின் - குறிப்பாக ரணில் அரசாங்கத்தின் "சமாதான அரிதாரம்" ( PEACE MAKE- UP) தோற்றத்தைப் படம் பிடித்துக்காட்டத் தவறவில்லை. பொருண்மியம், படைத்துறை தொடர்பான சர்வதேச அரங்காற்றுகையைக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சமாதானப் பேச்சுக்களை ஒரு கவர்ச்சிப்பொருளாகக் காட்டி உலகநாடுகளிலிருந்த உதவியையும், கடனையும் பெற்று போரினால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ரணிலின் அரசு அதீத அக்கறை காட்டியது. அத்துடன் உலக நாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஒரு சர்வதேச பாதுகாப்பு வலயத்தை நிறுவிடவும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டது" என்று ரணில் அரசாங்கத்தின் "சமாதான மீட்பு" தொடர்பான கபடத்தை தலைவர் அவர்கள் அடையாளம்காட்டியிருக்கிறார்.

"நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதும், இத்தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக , ஒத்திசைவாக ஒன்று கூடி வாழ்வதே எமது ஆளமான அவா. பெரு நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல நோக்கங்களுக்காக சிங்களப் பேரினவாதக் கட்சிகள் குழப்பிவிட்டால் அது மக்களை தனியரசுப்பாதையால் இட்டுச் செல்லும் என்பது திண்ணம்" என்று கடந்த ஆண்டு மாவீரர் நாள் உரையின்இறுதியில் தெரிவித்த தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், இம்முறை இறுதிப்பகுதியில் தெரிவித்திருப்பது சற்று விசாலமானது. ஆனால் வீரியம் விரிவானது என்பதைக்காணுங்கள்.

**"சமாதானப் பேச்சுக்களை ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டி உலகநாடுகளிலிருந்து உதவியையும், கடனையும் பெற்று போரினால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ரணிலின் அரசு அதீத அக்கறை காட்டியது.**



சிங்களத்தின் குழப்ப நிலை சந்திரிகாவின் கையகப்படுதல்களும் குழப்பியடித்தல்களும், சிங்கள இனவாதத்தின் காட்டுமிராண்டித் தனமான போக்கு, உருப்படியான முன்னேற்றமின்மை, சர்வதேசத் தலையீடுகளின் அதிகரிப்பு எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பான பன்முகப்பார்வையை கொண்டமைந்த தெள்ளத்தெளிவான மாவீரர் நாள் உரையில், 'இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பான ஆழ்ந்த கவனிப்புக்கு உரித்தான .காத்திரமான கருத்துக்களும் கூறப்பட்ட நிலையிலே, இறுதிப் பகுதியில் கூறப்பட்டிருப்பதை அமைதி ஆர்வலர்களே அவதானியுங்கள்.

"சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து, ஒடுக்கு முறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ்நாம் பிரிந்து சென்று

**- துரைமேகநாதன் -**

தனியரசைக்கட்டி எழுப்புவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதி மாற்றத்திற்கு தமிழர்களைத் தள்ளி விடும் புற நிலையை உருவாக்கி விட வேண்டாம் என நாம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

எமது அடிப்படை அபிலாசைகளை திருப்திப் படுத்துகின்றதும் நிரந்தர கௌரவமான சமாதானத்தை (PEACE WITH SUSTAINAVILITY & DIGNITY) தரவல்லதுமான தீர்வை வேண்டி நிற்கும் ஈழத் தமிழர்களின் ஒன்றுபட்டஆதங்க வெளிப்பாடாகவே மாவீரர் நாள் உரை வெளிப்பட்டிருப்பதை அட்சரப்பிசகின்றி முழுமையாகப் படித்தறியுங்கள். எமது செல்நெறிப் போக்கை மீளவும்

(19ம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் மீண்டும் இந்தியாவின் இராணுவத் தலையீடு?



இலங்கையில் இந்தியாவின் மற்றொரு இராணுவத் தலையீடு இடம்பெறக்கூடும் என்பது பற்றி அண்மைக்காலமாக கதைகள் உலாவர ஆரம்பித்துள்ளன.

இந்திய இராணுவத்தின் துணைத்தளபதி கடந்த வாரம் வெளியிட்டிருந்த கருத்துக்கள் இந்தியாவின் தலையீடுகள் பற்றி வெளியான தகவல்கள் தொடர்பான சாத்தியப்பாட்டை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. ''தற்போதைய நிலையில் இலங்கையில் இராணுவத் தலையீடு உட்பட சாத்தியமான அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக இந்திய இராணுவத்தின் துணைத்தளபதி லெப்டினட் ஜெனரல் சந்தனு சௌத்ரி தெரிவித்திருந்தார்.

இலங்கையில் அரசியல் பிரச்சினைகள் முனைப்பு பெற்றதைத் தொடர்ந்து இந்தியாவின் முப்படைகளை உசார் நிலையில் இருக்கும்படியான உத்தரவை இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சு விடுத்திருந்ததும் நோக்கத்தக்கது.

இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் மற்றொரு வடிவம் எடுக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து தனது சமாதான முயற்சிகளில் இருந்து இடைவிலகிக்கொண்ட நோர்வே, திடீரென்று அவசர அவசரமாக இந்தியா சென்றிருந்ததும், அங்கு இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரும் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை முன்மொழிவுகளில் கடல்பிராந்தியம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு அதிருப்தி தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள்:

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பிரதம மத்திரி ரணில் விக்கிரமசிங்க மேற்குலக நாடுகளின் உதவிகளைப் பெற ஆரம்பித்திருந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் எதிர்க் கட்சிகள் இந்தியாவின் உதவிகளைக் கோர ஆரம்பித்திருந்தன. இலங்கையின் ஜனாதிபதி அடிக்கடி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு மேற்குலக அரசியல் நகர்வுகளுக்கு எதிராக இந்தியாவை களம் இறக்கும் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வந்திருந்தார். எதிர்க்கட்சிகளும், அனுரா, மங்கள சமரவீர போன்றவர்கள் தலைமையில் இந்தியாவின் தலைவர்களைச் சந்தித்து மேற்குலக தலையீடுகளை முறியடிப்பதற்கு இந்தியாவின் உதவிகளைக் கோரி வந்திருந்தார்கள். போதாததற்கு இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் இந்தியப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர்களைச் சந்தித்து இலங்கையின் எதிர்காலம் தொடர்பாக இந்தியா உடனடியாகக் கவனமெடுத்தேயாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தார்.




போதாக் குறைக்கு போரியல்வாத அமைப்பான ஜே.வீ.பீ. யும் இந்தியாவின் இராணுவத் தலையீடு உடனடியாக இடம்பெற வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்தியாவின் தலையீட்டை மத்தியஸ்த வடிவில் கோரி இருந்தது.

## இந்தியச் சதி?

இது இவ்வாறு இருக்க இலங்கையில் மேற்குலகின் அனுசரணைகளுடன் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முன்னெடுப்புக்களை முறியடிக்க இந்தியா பல்வேறு வடிவங்களில் சதி முயற்சிகள் மேற்கொண்டு வந்ததாகவும் செய்திகள் வெளியாக இருந்தன.


மிகவும் வறிய உறுப்பினர்களைத் தமதாகக் கொண்ட ஜே.வி.பி. அமைப்பு ஒவ்வொன்றும் சுமார் இருநூறு ரூபாய் பெறுமதியான வர்ணச் சுவரொட்டிகளை ஆயிரக்கணக்கில் அச்சடிப்பதற்கும், தொடர் எதிர்ப்பு போராட்டங்களை நடாத்துவதற்கும் இந்தியாவே நிதி உதவி செய்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

அதேபோன்று இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த சாமாதான நடவடிக்கைகளை எதிர்த்து அத்தாவுல்லா அணியினர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், ஏறாவூரைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் ஊடாக இந்தியாவே பெரும் பணத்தை வழங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

கிழக்கில் தமிழ் முஸ்லிம் கலவரங்களை ஏற்படுத்துவதற்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) மூலம் இந்தியாவே பின்னணியில் இருந்து செயற்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



அதேபோன்று இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஜப்பான் தலையிட ஆரம்பித்த போது அதனை இந்தியா பகிரங்கமாகக் கண்டித்ததும், சமாதான முயற்சிகளுக்குப் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் பல தடைகளைப் போட்டதும் குறிப்பித்தக்கது.



இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இந்தியா இலங்கை விடயத்தில் எந்த ஒரு எல்லைக்கும் செல்வதற்குத் தயாராக இருந்தது தெளிவாக வெளிப்படுகின்றது.

## இராணுவ நடவடிக்கைகள்:

இந்த இடத்தில் இலங்கை விடயத்தில் இந்தியாவின் கடந்த கால அணுகுமுறைகள் பற்றி ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நூற்றாண்டில் இந்தியாவின் இராணுவத் தலையீடுகள் முதன்முதலில் 1971ம் ஆண்டு ஆரம்பமாகி இருந்தது. ஜே.வி.பி.யை அடக்குவதற்கு என்று இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பெயரில் இந்தியப்படைகள் இலங்கைக்கு வந்திருந்தன.

அதன் பின்னர் 1987ம் ஆண்டில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு என்று கூறி இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்திருந்தன.

இந்த இரண்டு நடவடிக்கைளும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அனுமதியுடன் அரசாங்கத்தின் அழைப்பின் பெயரிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதேபோன்று புலிகள் யாழ் குடாவைக் கைப்பற்ற மேற்கொண்டிருந்த ஓயாத அலைகள்-4 நடவடிக்கைகளின் போது, யாழ் குடாவில் முற்றுகைக்கு உள்ளாகி இருந்த ஸ்ரீலங்கா படையினரைக் காப்பாற்ற இந்தியப் படையினர் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராகி இருந்தார்கள். பலாலி தளத்தைக் கைப்பற்றி ஒரு நாள் முழுவதும் அதனைத் தக்கவைத்தவடி ஸ்ரீலங்காப் படையினரை வெளியேற்றுவதற்கு இந்தியப் படையினர் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் இறுதி நேரத்தில் பலவேறு காரணங்களினால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. அந்த நடவடிக்கையும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அழைப்பின் பெயரிலேயே மேற்கொள்ளுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

## இரகசியத் திட்டங்கள்:

இவை எல்லாம் ஒரு புறம் இருக்க, ஸ்ரீலங்கா அரசின் அனுமதி இல்லாமல் இலங்கையில் படைநடவடிக்கைள் எடுப்பதற்கான திட்டங்கள் சிலவற்றையும் இந்தியப் படையினர் முன்னர் வகுத்திருந்தார்கள்.

1987ம் ஆண்டின் நடுப்பகுதியீல் ஸ்ரீலங்காப் படைகள் யாழ்ப்பாணம் வடமாராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையை மேற்கொண்டிருந்த போது, யாழ் மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போடும் 'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கை 04.06.1987 அன்று இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அனுமதி இன்றி இலங்கையில் இந்தியா மேற்கொண்ட ஒரு அதிரடி இராணுவ நடவடிக்கை இது. இது போன்று இலங்கை அரசுக்கு எதிராக இலங்கை மண்ணில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு இந்தியா பல இரகசியத் திட்டங்களை வகுத்திருந்த விடயம் பின்நாட்களிலேயே வெளிவந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

80 களின் ஆரம்பத்தில் ஈழப் போராளிகளை அடக்குவதற்கு என்று ஜே.ஆர். அரசாங்கம் மேற்குலக நாடுகளின் பக்கம் சாய ஆரம்பித்ததைத் தொடர்ந்து இலங்கையை வழிக்குக் கொண்டு வருவதற்கும், இலங்கைமீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கும் இந்தியா பல திட்டங்களை வகுத்திருந்தது. இனப்பிரச்சினையைக் காரணம் காண்பித்து இந்தியாவின் ஜென்ம விரோதிகளான அமெரிக்கா, பாக்கிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் இருந்தெல்லாம் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆயுதம் மற்றும்

(19ம் பக்கம் பார்க்க)

**ஜே.வி.பி. அமைப்பு ஒவ்வொன்றும் சுமார் இருநூறு ரூபாய் பெறுமதியான வர்ணச் சுவரொட்டிகளை ஆயிரக்கணக்கில் அச்சடிப்பதற்கும், தொடர் எதிர்ப்பு போராட்டங்களை நடாத்துவதற்கும் இந்தியாவே நிதி உதவி செய்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.**

- சாத்வீகன் -

## போடியார் பொரிவெடி

அப்போது யுத்த கானம் பாடிய சந்திரிக்கா இப்போது சமாதான கானம் பாடுகிறார்.


- செய்தி



மத்தளம் அடிக்க கதிராமரு இருக்கும் மட்டும் பாட்டு வாச்சா கிழவியும் பாடுவாவுதானே.....

# ஆனந்த சங்கரிக்கு அரோகரா போடும் கூட்டணியினர்

தலைவர் பதவியிலிருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை. தனக்கு எதிராக செயற்படுபவர்களே கட்சியிலிருந்து விலகிச்செல்ல வேண்டும் என வீ.ஆனந்தசங்கரி அறிவித்த நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழு எதிர்வரும் ஞாயிறு 30ம் திகதி கொழும்பில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கூடுகிறது. கூட்டணியின் கடந்த மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்பும் ஆனந்தசங்கரி தொடர்ச்சியாக பிரசாரம் செய்து வந்தார். இனப்பிரச்சினை தொடர்பான முக்கியமான இக்கால கட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி போன்ற பழம்பெரும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. ஆனால் அக்கட்சியில் உள்ள தலைவர்கள் நடந்துகொள்ளும் முறை தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கையை நியமித்தல். மத்திய செயற்குழுவில் ஏற்பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல். பொதுக்குழு மற்றும் மாநாட்டைக் கூட்டுவது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவெடுத்தல். இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகக் கலந்துரையாடி முடிவெடுத்தல். ஆகிய விடயங்கள் ஆராயப்பட இருப்பதாக செயலாளர் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு யிருக்கும் ஆனந்தசங்கரி தனக்கு எதிராக செயற்படுபவர்கள் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயற்படுபவர்கள் என்றும் எனவே அவர்களே கட்சியிலிருந்து விலகிவிட வேண்டும் என்றும் எச்சரித்திருக்கிறார். இப்போது இருக்கும் மத்திய செயற்குழுவுக்கு தன்னை பதவி நீக்கும் அதிகாரம் இல்லை, ஏனெனில் இந்த மத்திய செயற்குழு கட்சியாப்புக்கு அமைவாக தெரிவு செய்யப்படவில்லை. எனவே இந்த மத்தியசெயற்குழு எடுக்கும் முடிவு செல்லுபடியற்றது என ஆனந்தசங்கரிக்கு ஆதரவானவர்கள் கூறிவருகின்றனர். இப்போது இருக்கும் மத்திய செயற்குழு கட்சியாப்புக்கு அமைவாக தெரிவு



செய்யப்படவில்லை என்றால் ஆனந்தசங்கரியை தெரிவு செய்ததும் இந்த மத்திய செயற்குழுதான், எனவே அவரும் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்ல என சில கூட்டணி முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர். விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்கு பக்கபலமாக செயற்படும் தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு தலைமை

(இரா.துரைரத்தினம்)

தாங்கிய கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி. தமிழர் விடுதலைக்கூட்டணி விடுதலைப்புலிகளுடன் நெருங்கி அவர்களுக்கு பக்கபலமாக செயற்படுவதை சில சக்திகள் விரும்பவில்லை. இதன் விளைவாகவே விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல

தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி விலக்கப்படுவாரா? ஆனந்தசங்கரி கூறுவது போல அவருக்கு எதிராக செயற்படும் சம்பந்தன், ஜோசப் , மாவை, போன்றவர்கள் விலகிச் செல்வார்களா? கடந்த மத்திய செயற்குழு கூட்டம் போல எந்த முடிவும் இன்றி கூடிக்கலையுமா? அல்லது கட்சி இரண்டாக உடையுமா என்பது அன்று தெரியவரும். ஏதுஎப்படியோ ஆனந்தசங்கரியும் அவரது ஆதரவாளர்களும் ஒரு திசையிலும், ஏனைய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், ஜோசப், மாவை, ரவிராஜ், சந்திரநேரு ஆகியோர் தலைமையிலான கூட்டணி ஆதரவாளர்கள் மறு திசையிலும் செல்லப் போகிறார்கள் என்பது மட்டும் உறுதியாகியிருக்கிறது. செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன், நிர்வாக செயலாளர் என். ரவிராஜ் ஆகியோர் மத்திய செயற்குழுவில் உள்ள 36 அங்கத்தவர்களுக்கும் அழைப்பு கடிதங்களை அனுப்பியிருக்கிறார்கள். ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப்புலிகள் கூட கூட்டணி தலைமை மீது அதிருப்தி அடைந்தவர்களாகவே காணப்பட்டனர். இந்நிலையிலேயே மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி கிளைகள் தலைவர் பதவியிலிருந்து ஆனந்தசங்கரியை நீக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றின. யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள மத்திய செயற்குழு உறுப்பினர்கள் பலரும் தலைவர் பதவியில் மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டக் கிளை கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது 21உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் மத்திய செயற்குழுவில் அங்கம் வகிக்கும் 9 உறுப்பினர்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என ஏகமனதாக தெரிவித்திருக்கிறார்கள். மாவட்டக் கிளைகள் செயலாளர் நாயகத்திடம் விடுத்த வேண்டு கோளையடுத்து மத்திய செயற்குழுக் அனுப்பிவைத்துள்ள நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரலைப்பார்க்கும் போது பெரும்பாலான விடயங்கள் ஆனந்தசங்கரியின் தலைவர் பதவிக்கு ஆபத்தை ஏற்படுத்துவனவாகவே உள்ளன. ஆனாலும் அக்கூட்டத்திற்கு ஆனந்தசங்கரியே தலைமை வகிக்கப்போகிறார். மத்தியசெயற்குழு உறுப்பினர்கள் 36பேரில் 25பேர் ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என கோரியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக முன்னாள் யாழ் மேயர் செல்லன் கந்தையன், ஆவரங்கால் சின்னத்துரை, முகுந்தன், அரவிந்தன், ஆகியோர் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய 6பேரும் செயற்குழு கூட்டங்களுக்கு சமூகமளிப்பதில்லை. முகுந்தன், அரவிந்தன் ஆகியோர் முன்னாள் புளொட் உறுப்பினர்கள். 1995ம் ஆண்டிற்கு பின் ஆனந்தசங்கரியால் முகுந்தனும், அரவிந்தனும், மத்தியசெயற்குழுவுக்கு நியமிக்கப்பட்டவர்கள். மாவட்ட கிளைகள் எடுத்த தீர்மானங்கள் செல்லுபடியற்றவை. அவை சட்டப்படி தெரிவு செய்யப்பட்டவை அல்ல என்றும் அவை எடுத்த தீர்மானங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் ஆனந்தசங்கரி கூறியிருக்கிறார். ஆனந்தசங்கரி அண்மையில் ஜோசப்

**தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்ற சக்திகள் வெற்றிபெற்றிருக்கின்றன.**

இறுதியாக ஜூன் 6ம் திகதி கூட்டணியின் மத்திய செயற்குழு கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய குழுவில் உள்ள முக்கியஸ்தர்கள் சிலர் தெரிவித்திருந்தனர். அன்றைய கூட்டத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அவர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அன்றைய கூட்டத்தில் நடந்ததோ எதிர்மாறான விடயம். ஆனந்தசங்கரி மீது நம்பிக்கை தெரிவித்து தீர்மானம் கொண்டுவரப்பட்டதுடன் அவரே தொடர்ந்து கட்சியின் தலைவராக இருக்க வேண்டும் என்றும் மத்திய செயற்குழு தீர்மானித்தது. மத்திய செயற்குழு உறுப்பினர்களின் இத்தகைய போக்கினால் அவர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இழக்க வைத்தது. தமிழர் விடுதலைக்கூட்டணி கடந்த பொதுத்தேர்தலில் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு முரணாக விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல என கூட்டத்திற்கான அழைப்பை செயலாளர் நாயகம் விடுத்திருக்கிறார். இக்கூட்டத்தில் முக்கிய விடயமாக கட்சிதலைவர் ஆனந்தசங்கரி மீது மாவட்டக் கிளைகள் வெளிப்படுத்தியிருக்கும் குற்றச்சாட்டுகள், தீர்மானங்கள் தொடர்பாக ஆராயப்பட இருப்பதாக செயலாளர் அறிவித்திருக்கிறார். கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்தல். தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்டக் கிளைகளினாலும் ஆதரவாளர்களினாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருக்கெதிராக அண்மைக் காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் குறித்து ஆராய்தல். 2001ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட மூன்று தமிழ்க் கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் விரோதமாகத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரின் செயற்பாடுகள் அமைந்திருப்பது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத்தல். கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை குழு நியமித்தல். கட்சியின் தேர்தல் நியமனக்குழு




பரராசசிங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் செயலாளர் ஆர். சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராசசிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், அ.சந்திரநேரு ஆகியோரை மிகக்கடுமையாக சாடியிருக்கிறார். யார் எதை சொன்னாலும் தலைவர் பதவியிலிருந்தோ, கட்சியிலிருந்தோ விலகப்போவதில்லை என கூறி என்ற கோஷங்கள் கூட்டணி தலைவரிடமிருந்து எழ ஆரம்பித்தன. நடைபெறப்போகும் மத்திய செயற்குழு கூட்டத்தில் முடிவுகள் எந்த வகையில் அமைந்தாலும் ஒன்றுமட்டும் உண்மை. தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்ற சக்திகள் வெற்றிபெற்றிருக்கின்றன.

# இனவாத வெறிக்குள் தள்ளாடும் சமாதானப் போதி

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குமிடையிலான அதிகாரப் போட்டி முற்றுப் பெறாத நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு இப்போது கைநழுவிப் போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர் உடன்படிக்கை அதன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் இரு தரப்பினரது போர் நிறுத்தத்தை அவதானிக்க நோர்வே அரசின் ஏற்பாட்டில் வருகை தந்த கண்காணிப்புக் குழு நடவடிக்கைகள் சிங்கள இனவாதிகளின் மோசமான விமர்சனங்களுக்கு இரையாகின.

தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த விமர்சனங்கள் அன்னிய



தேசம் ஏன் ஸ்ரீலங்காவில் கைவைக்க வேண்டும் என்ற தொனிப் பொருளில் அமைந்திருந்தன.

குறிப்பிட்டுக் கூறுவதானால் சிங்கள இனவாதிகளின் கண்டனங்களுக்கும் எதிர்ப்புக்கும் நோர்வே அரசு இலக்கானது.

எமது நாட்டில் நோர்வேக்கு என்ன அதீத அக்கறை என்று சாதாரண சிங்கள மக்கள் கூறவில்லை இனவாதத்தைப் பரப்பும்சிஹல உறுமய, ஜே.வி.பி., ஏன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், புத்த பகவானின் போதனையைப் பரப்பிப் பணி செய்ய வேண்டிய புத்த பிக்குகளும் போர்க்கொடி தூக்கினார்கள்.

நோர்வே தூதுவராலயம் வரை இந்த இனவாதிகளின் போராட்டங்கள் நடைபெற்றன. நோர்வே நாட்டுக் கொடிகள் கூட எரிக்கப்பட்டன.

தற்போது எல்லாம்வல்ல சகலகலாவல்லியான சந்திரிகா அம்மையார் ஆட்சி அதிகாரங்களைக் கூறு போட்டு பகிர்ந்தெடுத்த போதும் இனவாதிகள் அன்னிய நாடுகள் மீது காட்டும் வெறுப்புணர்வுகள் தொடர்ந்த வண்ணமிருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்.

தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரங்களுக்கான அதிகாரி கிறிஸ்பெட்டன் மீதும் இனவாதக் கும்பல்கள் தமது எதிர்ப்பினையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடாத்தியிருக்கும் கிறிஸ்பெட்டன் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடக்கி சமாதான வழி முறை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரியிருந்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்கு இந்த இனவாதக் கும்பல்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் அவர் தங்கியிருந்த ஹில்டன் ஹோட்டலுக்கு எதிரே சென்ற




இனவாதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் கிறிஸ் பெட்டனின் கொடும்பாவியையும் எரித்துக் கூக்குரலிட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உள்துறை அமைச்சினைப் பொறுப்பெடுத்த பின்னர் அன்னிய தேசத்து உயர் அதிகாரி மீது கரிபூசிய சம்பவமிது.

**வேணிதன்**

இதே வேளை இந்திய இலங்கை உடன்படிக்கை கடந்த 1987ம் ஆண்டுகைச்சாத்திடப் பட்ட போதும் கூட ஜே.வி.பி. உட்பட இனவாதிகள் இதே எதிர்ப்பலைகளையே தெரிவித்திருந்தனர். தற்போது ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி ஒரு தீர்வுக்கு வந்து விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதே உலக நாடுகளது கோரிக்கையாகும். தற்போது பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான இழுபறி நிலை தீர்க்கமான ஒரு முடிவுக்கு வராததையடுத்து நோர்வே சமாதான முயற்சியின் அனுசரணையாளர் பணியிலிருந்து விலகி நிற்கிறது நோர்வே அப்பணியிலிருந்து விலகி நிற்பதால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியினை மேற்கொள்ள வந்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் தற்போது மந்த கதியை அடைந்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

படைத்துறை, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி தொடர்ந்து வைத்துக் கொண்டு தேசிய நல்லிணக்க அரசு அமைக்க வருமாறு ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குக் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதற்கு ரணில் அரசு இணங்குமானால் தமது அமைச்சுக்களில் மேலும் சில அமைச்சுக்களை எதிரணியினருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிவரும் என ஆளும் தரப்பு கருதுகின்றது. மறு புறம் தீர்க்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினைக்கு இந்த பிரதான சிங்களக் கட்சிகள் இணங்கிப் போவது சிறுபான்மை தமிழ் கட்சிகளின் சில கோரிக்கைகளைப் புறந்தள்ளக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

மலையகக் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் சமூகம் சார்ந்த கட்சிகள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பினரின்



கோரிக்கைகள் கூட புறந்தள்ளப்பட வாய்ப்புண்டு.இவ்வாறான நிலையில் சமாதானப் பேச்சுக்களை முற்றாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பி. கட்சியினருடனும் சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடன் படிக்கையைக் கைச்சாத்திடவுள்ளது.

ஒரு பக்கம் தன்னை சமாதான விரும்பியாகவும்

**எல்லாம் வல்ல சகலகலாவல்லியான சந்திரிகா அம்மையார் ஆட்சிஅதிகாரங்களைக் கூறு போட்டுப் பகிர்ந்தெடுத்த போதும் இனவாதிகள் அன்னிய நாடுகள் மீது காட்டும் வெறுப்புணர்வுகள் தொடர்ந்த வண்ணமிருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்**

விடுதலைப்புலிகளுடன் பேசிப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் ஒரு ஆர்வலராகக் காட்டிகொண்டு மறு முனையில் இனவாதத்தைக் கக்கும் ஜே.வி.பி.யுடன் கை கோர்ப்பது. ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஜனாதிபதி தீர்வுகாணும் சாத்தியப்பாட்டை இல்லாது செய்துள்ளது.

ஒட்டு மொத்தமாக நோக்கினால் தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொ்தி இனவாதவெறிக்குள் அகப்பட்டு அமுங்கிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

## சொன்னாலும் குற்றம்



தென்கிழக்குப் பகுதியின் அக்கரைச் சீமை கல்வி வலயத்திற்குப்பட்ட பொதுவான வில் தோட்ட கந்தோரில சட்டம் பிமாருக்கு வந்த சம்பள நிலுவைப்பணத்தை மொத்தமாகச் சுருட்டி பங்கு போட்டு எடுத்த சங்கதி ஒன்று அம்பாறை மாவட்டத்தில் அம்பலத்துக்கு வந்துள்ளது.

அப்பகுதியில் நிலக்கடலை செய்கைக்குப் பெயர் போன ஊரொன்றின் பாடசாலையில் படிப்பிக்கிற ஆசான் மார்களுக்கு அவர்களின் பதவி நிலை உயர்வுக்கு ஏற்ப கடந்த ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையும் வந்த எட்டு மாதத் தொகையான பல இலட்சம் ரூபாவை அசிப்பில்லாம போலிக் கையொப்பம் போட்டு அந்த அதிபரின் அனுசரணையுடன் அறிவுக்கந்தோரில எழுதிக்கிளிக்கிற சிலரும் சேர்ந்து சுருட்டித்தார்களாம்.

இந்தச் சுருட்டல் அம்பலத்துக்கு வந்த போது அந்த அறிவுக் கந்தோரில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் வேவு செய்யிற ஆனைமுகப் பெருமான் ஒருவர் கண்துடைப்பு விசாரணை ஒன்றை நடாத்தி இதில் சம்பந்த அதிபரான ராஜாவையும் ஏனையவர்களான நாதன், வாதம், சிளகள் என்ற மும் மூர்த்திகளையும் வேறு இடங்களுக்குப் 'பணிஸ்மென்ட்' டாக இடமாற்றியுள்ளார்களாம்.

இதுக்கு முந்தியும் இப்படி பல கில்லாடி வேலைகள் செய்து சம்பந்தப்பட்ட கோவைகளை எரித்த சம்பவங்களும் இங்கு இவர்களுக்கு உண்டு என அறியமுடிகிறது.

மோசடி செய்தவர்களுக்குத் தண்டனை இடமாற்றம்மட்டும் தானா என அப்பகுதி ஆசிரியர்களும், பொது மக்களும் கதைப்பதிலும் தப்பு இல்லைத்தானே.........

# மாணவர்களினை சீரற்ற நடத்தைக்கு இட்டுச் செல்லும் பாடசாலை இடைவிலகல்

இ.வரதராஜன்

இன்றைய காலப்பகுதியில் எம் தமிழீழக் கல்விச் சமூகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளில் எம் எதிர்காலச் சந்ததியினரையும் எம் எதிர்காலச் சமூகத்தினரையும் பாதிக்க வல்ல பிரச்சினையாக உருப்பெற்று வருவது பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் சம்பந்தமான பிரச்சினையாகும். இவ் இடைவிலகல் பரவலாக நாடு பூராகவும் காணப்பட்டாலும் எம் வடக்குக் கிழக்கில் இது ஒரு பிரச்சினையாக களம் அமைத்துள்ளது. அத்தோடு இவ் இடைவிலகல் ஆனது கூடுதலாக வடகிழக்கில் உள்ள கிராமப்புறப் பாடசாலைளில் காணப்படுவது மிகவும் கவலைக்குரியதொன்றாகும். இவ் இடைவிலகல் பிரச்சினையானது நகர்ப்புறப்பாடசாலைகளிலும் நகர்ப்புறத்தினை அண்டிய பாடசாலைகளினையும் பார்க்க கூடுதலாக கிராமப் புற பாடசாலைகளில் காணப்படுவதற்கு பல இன்னோரன்ன காரணங்கள் நிலைக்களமாக அமைகின்றது.

இதில் இவ் மாணவர் இடைவிலகல் ஆனது கூடுதலாக கிராமப்புறப் பாடசாலைகளில் நிலைகொள்ள இக் கிராமப்புற மாணவர்களது பொருளாதாரப் பிரச்சினை, பிள்ளை பெற்றோருக்கு உதவி செய்யப் போதல், பெற்றோர் குடும்பப் பிரச்சினை, பிள்ளை நோய் வாய்ப்படல், பிறவிக்குறைபாடு, பிள்ளைக்கு கல்வியில் ஊக்கம் இன்மை,பிள்ளைக்கு ஆசிரியர் பாடம், பாடசாலை என்பவற்றில் வெறுப்புத் தன்மை, பாடசாலையில் காணப்படும் மிதமிஞ்சிய ஒழுக்கக்கட்டுப்பாடு, சம வயதுக் குழுக்களின் சீரற்ற நெறி பிறல் நடத்தை, இளமைத்திருமணம், பெற்றோர் தூர இடங்களுக்கு வேலைக்குச் செல்லல் (வெளிநாட்டுப்பயணம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு) யுத்த சூழல், பெற்றோர் மட்டத்தில் போதிய அறிவின்மை, பிள்ளை மனதில் ஏற்படும் தாழ்வுச் சிக்கல், சமூக மட்டத்தில் காணப்படும் வெளிநாட்டு மோகம் போன்ற பல இன்னோரன்ன காரணங்களினால் இன்று கிராமமட்டப் பாடசாலைகளில், கூடுதலான மாணவர்கள் இடைவிலகி தமது வாழ்க்கையினை சமூகத்திற்குப் பொருத்தப்பாடற்ற தன்மையுடன் தமது வாழ்வினைச் சூனியமாக்கிக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

**இன்றைய பெற்றோர்களின் மனதிலும் பிள்ளைகளின் மனதிலும் எழுந்துள்ள பிரச்சினை படித்தவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் அரசாங்கத்தில் வேலை இல்லை நமக்கு எப்படிக் கிடைக்கும் என்பதாகும்.**

இதில் மாணவர்கள் பாடசாலையினை விட்டு விலக முக்கியமான காரணமாகக் கொள்ளப்படுவது பிள்ளையின் குடும்பப் பொருளாதாரப் பிரச்சினையாகும். இன்றைய நிலையில் கிராமப் புறங்களிலுள்ள பெற்றோர்களினை எடுத்துக் கொண்டால் இவர்களில் கூடுதலானோர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோராயினும், அன்றாட கூலித் தொழில் செய்து குடும்பத்தை நடத்துபவர்களாகவும் மற்றும் மீன்பிடி, விறகு வெட்டி விற்றல், மேசன்வேலை, பிரம்புத் தொழில், சிறுகடைவியாபாரம் போன்ற மிகக்குறைந்த அளவு வருமானம் பெறக்கூடிய தொழில்களினையே செய்து வருகின்றனர். இதனால் இக்குடும்பத்தில் உள்ள பிள்ளையானது பாடசாலைக்குரிய உபகரணம் வாங்குவதிலோ அல்லது காலாகாலங்களில் பாடசாலைகளில் இடம்பெறும் விழாக்களுக்கும், நிகழ்ச்சிகளிற்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களினால் விதிக்கப்படும் கட்டணங்களினைக் கொடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. அப்படிப் பெற்றோர்கள் கொடுப்பதாயினும் யாரிடமாவது கடனாகப் பெற்றே கொடுக்க வேண்டும். இந்நிலை தொடருமானால் பாடசாலை கல்விச் செலவை எதிர்கொள்ளாமல் பிள்ளை கட்டாயம் இடைவிலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

அடுத்து பிள்ளை இடைவிலகலுக்கு மற்றும் ஒரு காரணம் பெற்றோருக்குத் துணை நிற்கின்ற தன்மை. இன்று கிராமப்புறங்களில் கூடுதலாக உள்ளது. அதாவது பெற்றோர் ஒரு தொழிலைச் செய்யும் போது பிள்ளையினையும் இணைந்து செய்யுமாறு வேண்டல் அல்லது கட்டாயத்தின் பேரில் நிர்ப்பந்தித்தல். அத்தோடு சில இடங்களில் ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளை பெண் பிள்ளையாயின் அப்பிள்ளைக்குப் பின் பிறக்கும் தமது சகோதரர்களினைப் பராமரிப்பதற்கும், தாய் வேலைக்குப் போகின்ற நேரங்களில் பார்ப்பதற்கும் ஆயாவாக தன்பிள்ளையினை பாடசாலைக்குச் செல்ல விடாமல் வைத்திருப்பதனைக் காணலாம். இன்றுகூட இந்நிலை தொடர்கின்றது. இவ்வாறான சம்பவங்களினால் பிள்ளை தனது படிப்பினைத் தொடர முடியாமல் இடையில் விலகித் தமது கல்வி பெறும் உரிமையினை இழந்து தவிப்பதினைக் காணலாம்.




குடும்பப் பிரச்சினைகள் கூட இன்றைய நிலையில் பிள்ளையின் இடைவிலகல் நிகழ்விற்குக் காரணமாய் அமைந்து கொண்டு செல்வதனைக் காணலாம். அதாவது ஒரு குடும்பத்தில் தந்தை ஒவ்வொரு நாளும் குடித்துவிட்டு வந்து தாய்க்கு அடித்தல், ஏசுதல், தாயினையும் பிள்ளையினையும் வீட்டைவிட்டுத் துரத்துதல் மற்றும் பிள்ளை படிப்புச் செலவிற்காக பணம் கேட்டால் பிள்ளைக்கு ஏசுதல், தண்டித்தல் போன்ற காரணங்களால் இன்று அனேகமான பிள்ளைகள் பாடசாலையை விட்டு விலகி கூலி வேலைக்குச் செல்லல், வேளாண்மை காலங்களில் அறுவடைக்குச் செல்லல் போன்ற வேலைகளினைச் செய்து காலப்போக்கில் முற்றாக பாடசாலையினை விட்டு விலகி நிற்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் படுவதினைக் காணலாம்.

மற்றும் சில பிள்ளைகள் ஆசிரியருக்குப் பயந்து பாடசாலைக்குச் சமூகம் கொடுக்காமல் நிற்பதைக் காணலாம். இதற்குக் காரணம் ஆசிரியர்களே. அதாவது இன்றைய சில ஆசிரியர்கள் கல்வி, உளவியல் கருத்துப்படியோ அல்லது கொள்கைப்படியோ நடக்காமல் பிள்ளைகளை அடியாலோ அல்லது தண்டணையாலோ திருத்த வேண்டும் என்பதற்காக எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்பு வைத்து அடித்தல், ஏசுதல் போன்ற நடவடிக்கைகளை ஆசிரியர் எடுப்பதினால் பிள்ளை மனத் தாக்கமுற்று பாடசாலைக் கல்வியினை விட்டு விலகிப்போகும் நிலையினைக் காணக் கூடியதாக உள்ளது. அதாவது சில அதிபர்கள் பிள்ளையினை வகுப்புக்கு வெளியில் கண்டாலே குற்றமாகக் கொண்டு தண்டித்தல், சில ஆசிரியர்கள் பிள்ளை பாதணி போடாமலும் கழுத்துப்பட்டி கட்டாமலும் வந்தால் தண்டித்தல், நேரம் பிந்திப் பாடசாலைக்குச் சமூகம் அளித்தால் பாடசாலைக்கு வெளியே பிள்ளையை நிற்பாட்டி அல்லது வீட்டுக்கு அனுப்புதல், பிள்ளை ஏதாவது சின்னப்பிழை செய்தால் கூட பெற்றோர்களை அழைத்து ஏசுதல் போன்ற நடவடிக்கையினால் இன்று பிள்ளையானது தனது இனிய பாடசாலைக் கல்வியினை விட்டு விலகி அனாதரவாக நிற்பதினைக் காணலாம்.



அத்தோடு இவ்மாணவர்கள் பாடசாலையினை விட்டு விலகுவதற்கு இள வயதுத் திருமணம் ஒரு காரணமாகக் கொள்ளப்படுகிறது. இத்திருமணம் என்பது ஓர் சமூகச் சீரழிவை ஏற்படுத்தும் சம்பவமாகக் கொள்ளப்பட்டாலும் இதனுடைய விளைவுகளினைக் கருத்திற் கொள்ளாமல் சில பெற்றோர்கள் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளையினை பாடசாலையிலிருந்து விலத்தி தான் பேசி வைத்திருக்கும் திருமணத்தை பிள்ளையை வற்புறுத்தியோ அல்லது எவ்வாறோ இணங்க வைத்து திருமணம் நடாத்தி வைக்கின்றனர். இருப்பினும் பிள்ளையின் எதிர்காலம் என்ன? அடுத்து பெற்றோர்கள் வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதினால் அப்பிள்ளையினை யாரும் கவனிக்க முடியாத நிலையில் அப்பிள்ளை மன விரக்தியுடன் காப்புணர்வு அன்பு தேவை அற்ற நிலையில் மனம் உடைந்து காலப்போக்கில் பாடசாலைக்குப் போகும் தன்மையினைக் குறைத்து சகபாடிகளுடன் இணைந்து சில நெறி பிறழ்வான நடத்தைகளில் பங்கேற்று எதிர்காலத்தில் சமூகத்திற்குப் பொருத்தப்பாடற்றவனாய் உருவாவதினை எம்மால் காணக்கூடியனவாய் உள்ளது.

அடுத்து இன்று சமூக மட்டத்தில் காணப்படும் வெளிநாட்டு மோகம் ஒரு பிள்ளையினை பாடசாலையினை விட்டு விலகத் துணை புரிகிறது. அதாவது இன்றைய பெற்றோர்களினது மனதிலும் பிள்ளையினது மனதிலும் எழுந்துள்ள பிரச்சினை படித்தவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் அரசாங்கத்தில் வேலை இல்லை நமக்கு எப்படிக் கிடைக்கும் என்பதாகும். இதனால் பெற்றோர்கள் பிள்ளை 9ம், 10ம் தரங்களில் இருக்கும்போதே பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பி உழைக்க வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர். இதனால் பிள்ளை கல்வியில் ஆர்வம் இல்லாமல் பாடசாலையினை இடைநடுவில் விலகும் தன்மை எம்மால் காணக்கூடியதாய் உள்ளது. மற்றும் எமது வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் பிள்ளைகள் பாடசாலையினை விட்டு விலகக் காரணமாக அமைந்தன. இவ்யுத்தத்தினால் கூடுதலான பிள்ளைகள் இடம்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, அடிக்கடி பாடசாலையினை மாற்றிக் கற்றல், பாடசாலைக்கும் வீட்டிற்கும் அதிகளவு தூரம் காணப்படல், இராணுவ முகாமைத் தாண்டி பாடசாலைக்குச் செல்லுதல் போன்ற துர்ப்பாக்கிய நிலை. இந்நிலையினால் கூட பிள்ளையானது பாடசாலைக் கல்வியினைத் தொடர முடியாமல் பாடசாலையினை விட்டு விலகிச் செல்லும் பாங்கினை உணரலாம்.

இவ்வாறாக எமது கல்விச் சமூகத்தில் இடைவிலகலானது தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டு வருமானால் எமது சமூகம் எதிர்காலத்தில் ஒரு கல்வி அற்ற சமூகத்தினையே நாம் காணமுடியும். இப்பாடசாலையினை விட்டு இடைநடுவில் விலகும் தன்மையானது எமது சமூகத்திலிருந்து அகல வேண்டும்.

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்:- பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே-வி- பியும் கூட்டுச் சேரப் போறாங்களாமே

கலந்தர்:- அப்படியெண்டா சமாதானம் எண்டது இனிசரித்திரத்திலயும் இல்லமச்சான்...

கந்தர்:- கூட்டுப்புக்க கையச்சுடும் எண்டமாதிரி இவங்க கனகாலத்துக்கு இருக்க ஏலாமச்சான்------

கலந்தர்:- எலச்சனில எப்படி வெல்லலாம் எண்டிறத்திலதான் அக்கறயாக இருக்காங்களே தவிர சமாதானத்தில ஒரு அக்கறையையும் காணல்லயே--

கந்தர்:- சண்டயும் வரப் போடா தமிழனுக்கு உரிமயும் கொடுக்கப் போடா எண்டுதான் சந்திரிகாட எண்ணம்---------

கலந்தர்:- இப்படியே காலத்த கடத்தலாம் எண்டுதான் பாக்கிறாங்கபோல---------

கந்தர்:- காலம் கடக்குமா? காலம் பதில் சொல்லுமா? எண்டத பாப்பமே------------




திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியிலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தணிக்கவேண்டிய தேவை இந்திய அரசிற்கு ஏற்பட்டது.

இந்தியா புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் பாதகமான ஏதோ ஒன்றைச் செய்து வருகின்றது என்பது போன்ற ஒரு பேச்சு தமிழ் மக்கள் மனங்களிலும், சர்வதேச நாடுகள் மத்தியிலும் ஏற்பட ஆரம்பித்தன. திலீபனின் மரணம் இப்படியான ஒரு எண்ணத்தையும், சந்தேகத்தையும் அனைத்து மட்டங்களிலும் பரப்பியிருந்தது.

திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து உலகத்தின் பார்வையில் புலிகள் மீது ஏற்பட ஆரம்பித்திருந்த அனுதாபத்தை புலிகளைக் கொண்டே உடைத்து விட்டு, அதன் பின்னரே புலிகள் மீது நடவடிக்கை மேற்கொள்வது நல்லது என்று இந்திய அதிகாரிகள் ஆலோசனை வழங்கினார்கள்.

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உடனடியாக அமைத்து, உலகத்தின் சந்தேகத்தைப் போக்கிவைப்பதற்கு இந்தியா தீர்மானித்தது. ஜே.ஆருடன் கலந்தாலோசித்த இந்தியத் தூதுவர் ஜே.என். தீட்சித் இதற்கான திட்டத்தை வரைந்தார்.

(இந்த இடத்தில் ஜே.ஆர். தனது குள்ள நரித்தனத்தை வெளிப்படுத்தியிருந்தார்.



புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் மற்றும் பிரதித் தலைவர் மகேந்திரராஜா மாத்தையா போன்றோரும் சென்றிருந்தார்கள். மிகவும் காரசாரமாக நடைபெற்ற அந்தச் சந்திப்பில், இடைக்கால

இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் விடுதலைப் புலிகள் வழங்குவார்கள்.

-புலிகள் அமைப்பின் உறுப்பினர்களதும், தலைவர்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் புலிகள் தங்களிடம் மிகுதியாக உள்ள ஆயுதங்களை கையளிப்பார்கள்.

-மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்குப் புலிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

-இந்தியாவும் விடுதலைப் புலிகளும் ஒருவருக்கு எதிராக மற்றவர் மேற்கொண்டு வரும் பிரசார நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

-30ம் திகதிக்கு முன்னர் ஸ்ரீலங்கா அரசாங்கம்

# இடைக்கால நிர்வாக சபையும், அதன் பின்னணியில் வகுக்கப்பட்ட சதிகளும்

### தொடர் உண்ணாவிரதப் போராட்டங்கள்:



இதற்கு மேலாக, தமது 5 அம்சக் கோரிக்கைகளை முன்நிறுத்தி, விடுதலைப் புலிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை, தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து வந்தார்கள்.

திலீபன் முன்வைத்த 5 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, மட்டக்களப்பில் 'மதன்' என்ற இளைஞன் சாகும் வரையிலான தனது உண்ணா விரதத்தை, மட்டக்களப்பு 'வெபர்' மைதானத்தில் ஆரம்பித்திருந்தான். இதேபோன்று தமிழ் பிரதேசங்கள் அனைத்திலும், உண்ணாவிரதப் போராட்டங்கள் மிகுந்த உணர்ச்சியுடன் மேற்கொள்ளப்பட்டன.

இது போன்ற உண்ணாவிரதப் போராட்டங்கள் தமிழ் மக்களை மிகவும் உணர்ச்சிவசப்பட வைத்தன. இந்தியாவின் மீது தமிழ் மக்களை காழ்ப்புணர்வு கொள்ள வைத்தன. ஏற்கனவே திலீபனின் மரணம் இந்தியாவின் 'அமைதிகாக்கும் பணிக்கு'(?) தமிழ் மக்கள் மத்தியிலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தியிருந்த சேதத்தை நிவர்த்தி செய்வதற்கு அவகாசம் வழங்காமல், தொடர்ந்து பல உண்ணாவிரதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன, இந்திய அதிகாரிகளை ஆட்டம் காண வைத்தது. இந்தியப் படை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், இந்த உண்ணாவிரதப் போராட்டங்கள் அவர்களுக்கு பெரிய தலையிடியாகவே அமைந்திருந்தன.

இந்தியப் படை தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கச் சென்ற ஒரு படை என்பது போன்ற எண்ணம் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுவிடக் கூடிய அபாயத்தை, இந்தியா எதிர்கொள்ள ஆரம்பித்தது.

இப்படியான ஒரு எண்ணப்பாடு வேகமாகப் பரவுவதைத் தடுக்க இந்தியா அவசரஅவசரமாக ஒரு திட்டத்தைத் தீட்டியது. புலிகளுக்கு ஏதாவது ஒன்றை வழங்கிவிட்டு, அதன் பின்னரே புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா திட்டம் தீட்டியது.

புலிகளுக்கும் இந்தியாவிற்கும் பகையை வளர்க்கச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்த ஜே.ஆர்., இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதில் மேற்கொண்ட சதியையும், அதற்கு தெரிந்துகொண்டே இந்தியா பலியாகிப் போன விபரத்தையும் அடுத்த வாரம் விரிவாகப் பார்ப்போம்,)

> "எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடு கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றிநடை போட முடிந்தது என்றால், அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன்."
>
> *- விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்.*

வடக்கு கிழக்கை நிர்வகிப்பதற்கென்று 11 பேர் கொண்ட இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது என்றும், அதில் விடுதலைப் புலிகள் 5 உறுப்பினர்களை நியமிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.



### இரகசிய ஒப்பந்தம்:

இதற்கான கலந்துரையாடலை மேற்கொள்வதற்காக செப்டெம்பர் 28ம் திகதி இந்தியத் தூதுவர் ஜே.என்.தீட்ஷித் யாழ்குடாவிற்கு விரைந்தார். பலாலி விமானப்படைத் தளத்தில் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து உரையாடினார். புலிகள் தரப்பில்

நிர்வாகசபை அமைப்பது தொடர்பான ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

அதே தினத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையில் ஒரு இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. 'India's Intervention in Sri-Lanka' என்ற ஆய்வு நூலில், இந்த இரகசிய ஒப்பந்தம் பற்றிய விபரம் வெளியிடப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் சார்பில் பிரதித் தலைவர் மகேந்திரராஜா மாத்தையாவும், இந்திய அரசு சார்பில் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் முதல் நிலை அதிகாரி ''ர்தீப் பூரி'யும், அந்த இரகசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார்கள்.

அந்த ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற விபரங்கள் இவைதான்:

-பின்வரும் அடிப்படையில் வடக்கு கிழக்கிற்கான ஒரு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு, ஸ்ரீலங்காவின் பிரதமர் இந்திய தூதுவரிடம் தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| த.வி.புலிகள் | - 5 |
| த.வி.கூ. | - 2 |
| முஸ்லிம்கள் | -2 (இருவரில் ஒருவர் புலிகளாலேயே நியமிக்கப்படுவார்) |
| சிங்களவர்கள் | - 2 |

மொத்தம் 11 பிரதிநிதிகள். இந்த இடைக்கால நிர்வாக சபையின் தலைவரை புலிகள் ஆலோசனையுடன் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி நியமிப்பார்.

-பெங்களூர் முன்மொழிவுகளின் 10.1, 10.2 பிரிவுகளின்படி, ஜே.ஆர். தனது நிறைவேற்று அதிகாரங்களில் சிலவற்றை, இடைக்கால நிர்வாக சபையின் தலைவருக்கு வழங்குவார்.

-வடக்கு கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரம் இந்த இடைக்கால நிர்வாக சபைக்கு இருக்கும்.

-இந்தியத் தூதுவரிடம் 13.10.1987ம் திகதி புலிகள் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகள், இந்த இடைக்கால நிர்வாக சபை மூலம் நிறைவேற்றப்படும்.

-1987ம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியப் பிரதமரால் புலிகளின் தலைவருக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில், இலங்கை

இடைக்கால நிர்வாகசபை பற்றிய அறிவிப்பை வெளியிட வேண்டும்.

-இந்திய அரசும், இலங்கை அரசும், இந்த இரகசிய ஒப்பந்தத்தின் வெளிப்படையான அம்சங்கள் சிலவற்றை மட்டுமே வெளியிட வேண்டும்.

-இவற்றிற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் தமது உண்ணாவிரதப் போராட்டங்களை முடிவிற்குக் கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு அந்த இரகசிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## துரோகங்களின் அத்தியாயங்கள் - 35

### ஜே.ஆர்.மேற்கொண்ட தந்திரம்:

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக தென் இலங்கையில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பு, சில சந்தர்ப்பங்களில் ஜே.ஆர்.இனது காய்நகர்த்தல்களுக்குத் தொல்லையாக இருந்தாலும், பல சந்தர்ப்பங்களில் அதுபோன்ற எதிர் அலைகள் ஜே.ஆருக்கு உதவவே செய்தன.

தென்பகுதி பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்கு என்று கூறி, ஒப்பந்தத்தின் சரத்துக்களில் ஸ்ரீலங்கா அரசிற்கு சாதகமான அம்சங்களை இணைத்துக் கொள்ளுவதற்கு ஜே.ஆரால் முடிந்திருந்தது.

**- நிராஜ் டேவிட் -**

தென்னிலங்கையில் ஏற்படுகின்ற நெருக்குதல்களைச் சமாளிப்பதற்காகவே இடைக்கிடையே சில கடுமையான முடிவுகளைத் தான் எடுக்கவேண்டி இருப்பதாக, இந்தியத் தரப்பை நம்பவைப்பதற்கும் ஜே.ஆரால் முடிந்திருந்தது. இடைக்கால நிர்வாக சபை ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஜே.ஆர். மிகவும் அழகாக காய்களை நகர்த்த ஆரம்பித்தார்.

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியினாலோ, இந்தியத் தூதுவர் தீட்ஷித்தினாலோ, ஜே.ஆரின் காய் நகர்த்தல்களைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. அவரது தந்திரங்களுக்கு ஈடுகொடுக்கவும் முடியவில்லை. ஜே.ஆரின் தந்திரோபாய நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளும் அனுபவமும் அவர்களுக்கு இருக்கவில்லை. மிகவும் இலகுவாகவே அவர்கள் ஜே.ஆரின் வலையில் வீழ்ந்துவிட ஆரம்பித்தார்கள்.

### இரகசிய விவாதம்:

இது இவ்வாறு இருக்க, ஜே.ஆரின் காய் நகர்த்தல்கள் பற்றிய ஒரு விவாதம் யாழ்ப்பாணத்தின் ஒரு மூலையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள், ஜே.ஆர். மேற்கொள்ள ஆரம்பித்திருந்த சதியை வெற்றிகொள்வது எப்படி என்று ஆராய்ந்துகொண்டிருந்தார்கள்.

ஜே.ஆரின் தந்திர வலைக்குள் புலிகள் சிக்காமல் தப்பி விடுவதுடன், அவரது வலையை எப்படி தமது அடுத்த நகர்வுகளுக்குச் சாதகமாக்கிக்கொள்வது என்றும் அவர்கள் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.


(துரோகம் தொடரும்.....)


# மாவீரர் நினைவு கூரலில் ஒன்றிணைந்து போன தமிழினம்

மாவீரர் தினத்தையொட்டி மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் என்றுமில்லாத வகையில் இந்நிகழ்வு எழுச்சியுடன் இடம்பெற்றமையை இம்முறை காணக் கூடியதாய் இருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் எங்கும் என்றுமில்லாதவாறு சிவப்பு,மஞ்சள் நிறங்களால் அலங்கரிக்கப்பட்டும் பல வீதித் தோரணங்கள் அமைக்கப்பட்டும் வாகனங்களில் மஞ்சள் சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டும், பொதுக் கட்டடங்கள் கடைகள் எல்லா இடங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டும் கட்சியளித்தன.

மட்டுநகரில் தேசியத் தலைவரின் ஆரம்பப் பாடசாலையான மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் கடந்த நவம்பர் 22ம் திகதி தொடக்கம் நவம்பர் 27ம் திகதி வரை சுமார் 6000ம் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அடங்கிய நினைவாலையம் தேசியக் கொடியேற்றலுடன் திறக்கப்பட்டது. அங்கு பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் மாணவர்களும், அரச அதிகாரிகளும் அனைத்துத் கல்வி நிறுவனங்களின் பயிலுனர்கள் விரிவுரையாளர்களும் மாவீரர்களின் புகைப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தினர். இதேபோல் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கலாசர மண்டபத்திலும் சுமார் 4000மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ் முஸ்லிம் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.





> **விடுதலைப் புலிகளும் அரச படையினரும் இடையே மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் புரிந்துணர்வுடன் செயற்படுவது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.**

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாவீரர்களின் நினைவையொட்டிய பல்வேறு சோடனைகள் மாவீரர்களை நினைவு கூறும் பதாதைகள் சுவரொட்டிகள் எல்லாம் பார்கும் இடமெல்லாம் காட்சியளித்து அந்த

**- பாத்திரன் -**

மண்மீட்புப் போரில் வித்தாகிப் போன எமது சொத்துக்களின் நினைவை மீட்டிப்பார்த்தது. மட்டககளப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள சிறிலங்காப் படையினர் உண்மையிலேயே மாவீரர்களின் நினைவு தினத்தை முண்ணிட்டு கட்டப்பட்ட எந்தவொரு அல ங்கார வளைவுகளையும் அகற்றவோ அல்லது இவைக்கு தடைகளையோ ஏற்படுத்தாமல் அவர்களுக்கு பூரண ஒத்துளைப்பு வழங்கியதை காணக்கூடியதாய் இருந்தது.

மாவீரர்களின் நாளை மனதார நினைவுகூர மட்டக்களப்பு மாவட்ட படைத்தரப்பினர் ஒத்துழைத்தமையை நோக்கும்போது விடுதலைப் புலிகளும் அரச படையினரும் இடையே மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் புரிந்துணர்வுடன் செயற்படுவது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ் குடாநாட்டில் உள்ள சிறிலங்காப் படையினர் ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கையில் தொடர்ந்தும் மாவீரர் நாள் பதாதைகளை அகற்றி வந்தமை அவர்களின் கொடூரத்தன்மையை மீண்டும் நிருபித்து விட்டது. இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும் அவர் களை நினைவு கூருவதும் அந்த வீரமறவர்களை ஈன்ற மண்ணில் வாழும் மக்களின் உரிமையாகும்

இவ்வாறான உரிமையையும் இந்த போர் ஓய்ந்த நிலையில்கூட யாழ் மண்ணில் செய்ய முடியாமல் இருக்கும் போது சுயநிர்ணய உரிமையை சிங்கள அரசிடம் இருந்து பேச்சுவார்தைகள் மூலம் எதிர்பார்ப்பது என்பது முடியாத காரியமாகும்

மாவீரர்களை நினைவுகூரவேண்டிய வேளைகளில் கூட சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் யாழ்ப்பாண மக்கள் அந்த வீரமறவர்களுக்கு அஞசலி செலுத்தமுடியாமல் ஆத்திரமூட்டும் செயலாக மாவீரர் பதாதைகளைப் படையினர் வாகனத்தால் அடித்து வீழ்த்திய செயலானது மக்களை



வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

இருந்தும் "பொறுத்தார் அரசாள்வார் பொங்குனவர் காடுறைவார்" என்ற முதுமைமொழிக்கு அமைவாக யாழ் பொதுமக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து மாவீரர் நாளை மனதில் நினைவு கூர்ந்துள்ளனர்.

படைத்தரப்பு அமைச்சு பதைவியை சந்திரிகா அம்மையார் பறித்தெடுத்தபின் ரணில் அரசு சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கமுடியாமல் திண்டாடுகின்றது.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கான சகல ஒத்துளைப்புக்களையும் தாம் வழங்குவதாக உறுதியளித்த சந்திரிகா அம்மையார் உதட்டால் மட்டும் அதனைச் சொல்லி விட்டு உள்ளத்தால் சதிசெய்வதன் ஒரு வெளிப்பாடாகவே யாழ்பாணத்தில் மாவீரர் நினைபுச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள படைத்தரப்பினர் யாழ்ப்பாணத்திலுள்ள படைத்தரப்பினரைப் போன்று குழப்பும் நிலையைத் தோற்று வித்திருந்தால் விபரீதம் காரசரமாகவே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

யாப்பாணத்திலிருக்கும் படையினரின் செயலால் மீண்டும் போர் முழுமோ எனற சந்தேகம் மக்கள் மத்தியில் இப்பொது தோன்றியுள்ளது.

பொறுமைக்கும் எல்லையுண்டு தொடர்ந்தும் வலிந்து சண்டைக்குப் படையினர் இழுக்காவண்ணம் சம்பந்தப்பட்ட சிறிலங்கா படையினரை ஒடுகட்டுக் கோப்புக்குள் வைத்திருக்க வேண்டிய தேவை சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் ஏற்பட்டுள்ளது. இது எந்தவிதத்தில் சாத்தியப்படப் போகிறது என்பதைத் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள ஐந்த துயிலும் இல்லங்களிலும் கடந்த வருடங்களை விட பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் மாவீரர்களின் பெற்றோர்களும் தீபங்கள் ஏற்றியும் மலர்மாலை செலுத்தியும் வித்தாகிப் போனவர்களின் கல்லறைகளைத் தரிசித்தனர்.

இவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளை ஈஸ்டன் பஸ் கம்பனியினரும் மற்றும் தனியார் பேரூந்து உரிமையா ளர்களும் திறம்பட நடாத்தியதுடன் ஐந்து துயிலும் இல்லங்களான அம்பாறை மாவட்டத்திலுள்ள உடும்பங்குளத் துயிலுமில்லம், மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள தரவை, தாண்டியடி, மாவடிமுன்மாரி, வாகரை ஆகிய துயிலும் இல்லங்களைத் தரிசிக்கச்சென்ற பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்துஆலயங்களின் ஒன்றியத்தினாலும் கடந்த நவம்பர் 26,27ம் திகதிகளில் அன்னதானங்களும் தாகசாந்திகளும் வழங்கப்பட்டன.

மொத்தத்தில் இவ்வருட மாவீரர் நிகழவுகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் எந்தவித எதிர்ப்புக்களும் இன்றி மிகவும் திட்டமிட்டமுறையில் நேர்தியாக இடம்பெற்றமையைக் காணக்கூடியதாய் அமைந்தது.

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## அபிலாஷைகளை நிறைவேற்ற ரணிலால் முடியுமா?

*பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கு!*

ஊரெல்லாம் முன்பு உம் பேச்சு. இப்போது யார் பேச்சு அம்மா சந்திரிகா பேச்சுத்தான். சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்ற உணர்வு உங்களிடமிருந்தோ என்னவோ உலகநாடு எல்லாம் வலம் வந்தீர்கள், சமாதானத்தைக் கொண்டு வருவதில் ரணில் அரசு இந்த முறை சுத்தமாக நிற்கின்றது. இப்படித்தான் தமிழினம் நம்பிக்கை வைத்திருந்தது.

அம்மணி உங்கள் அரியாசனத்திற்கு வேட்டு வைக்க நிறைவேற்று அதிகாரக்கத்தியைத் தீட்டிக் கொண்டே இருந்தார். அந்தா இந்தா என்று விடுதலைப் புலிகள் முன்வைத்த தன்னாட்சி அதிகார சபை வரைபு சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களின் கைகளுக்குச் சென்ற மறுகணமே அம்மணியின் வெட்டுக்கு ஆட்சி அதிகாரம் பங்கு போடப்பட்டுள்ளது. இப்போது தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை உருவாக்குவதற்காக அம்மணி உங்களைக் கைக்குள் போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார், மறுபுறம் பேரினவாதக் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் குமிடையில் ஒரு கூட்டு ஒப்பந்தம். சுருக்கமாகக் கூறப் போனால் சிங்கள தேசத்தின் எல்லாக்கட்சிகளும் ஒன்று திரள்கின்றன.

இந்தக் கட்சிகள் எப்பவோ இருந்து தமிழினத்தின் உரிமைகளை வழங்காது பல்லவி பாடிக் கொண்டுதான் இருந்து வந்துள்ளது..

இப்போதும் அதே பல்லவி அதே மேடை ஏற்றம் காட்சிகள் மாறிக் கொண்டிருக்கின்றதே தவிர, கருப்பொருள் ஒன்று தான். ஜே.ஆர்.பிரேமதாஸா விஜயதுங்கா, சந்திரிகா, ரணில் அடுத்து இன்னுமொரு சிங்களத் தலைமை எமது இனத்தின் உரிமையைத் தருவதற்குப் பேரம் பேசும் நிலைக்குத் தமிழினம் தயாரில்லை, விடுதலைப்புலிகளும் அதற்கு விட்டுக் கொடுப்புகளைக் கடுகளவேனும் மேற்கொள்ளமாட்டார்கள.

யானைக்கட்சி, கை, நாற்காலி, மணி இப்படி எத்தனையோ தேர்தல் சின்னங்கள் தமிழினத்தின் வீதிச் சுவர்களிலே புள்ளடி போடுங்கள் எனும் வாசகத்துடன் உலா வந்த காலம் இனிமேலும் வரமாட்டாது.

எமது உரிமையை நாமே ஆளுதல் வேண்டும். அதற்கான புனிதமான போராட்டத்தை எங்கள் தேசியத் தலைவர் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அவர் பாதையில் ஆயிரமாயிரம் போராளிகள். எதிரிகளமாடி எமதின விடுதலைக்கு என்றும் தயார். இந்நிலையில் உங்களுக்குள் தேசிய அரசு நிறுவி கைகோர்த்து பௌத்த மதத்தையும் சிங்கள தேசத்தையும் காப்பாற்றும் நிலைப்பாடு இருந்தால் எமது இனம் இன்னுமொரு முறை களமாடும் நிலைக்குத் தள்ளப்படும் என்பது உறுதி.

எனவே அம்மணியோடு அமர்ந்து அரியாசனத்தை, செங்கோலை தக்கவைக்க இந்த ரணில் முயலக்கூடாது. அது சிறுபாண்மைக் கட்சிகளுக்கு ரணில் ஐயா செய்யும் தேசத் துரோகம்.

ஆசிய நாயகன் என்ற நாமத்தை சூட்டிக் கொண்டு அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் எல்லா நாடும் என் வசம் என்று கூறிக்கூறி காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதில் இலாபமில்லை. சமாதானத்தை அவாக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் எண்ணங்கள் அபிலாசைகளை நிறைவேற்ற இந்த ரணில் முன்வர வேண்டும்.

மாறாக பறிபோன மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் மீள எடுப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தால் அம்மணி தரமாட்டா சும்மா ஏமாந்து போவீர்கள். எனவே உங்கள் பலத்த அதிகாரத்தைப் பலமாகப் பிரயோகித்து வெற்றியீட்ட முயற்சி செய்யுங்கள்.

**இங்ஙனம், அலைமகன்**

# குடும்பத் தலைவிகள் வெளிநாடு செல்லலாமா?



குடும்பத் தலைவிகள் வெளிநாடு செல்வதால் அதிகம் பாதிக்கப் படுவது பெண் பிள்ளைகளே! பல அரிவையர் சொல்லிக் கொள்ளலாம். பிள்ளைகளுக்காகத்தான் வெளிநாடு செல்கிறோம். அவர்கள் கஸ்ரப்படாமல் சந்தோஷமாக வாழ வதற்குத் தான் என்று, ஆனால் பெண்களாகிய நீங்கள் வெளிநாடு செல்வதால் பெண்பிள்ளைகள் சீரழிந்து விடுகின்றனர் என்பதை ஒருநிமிடம் நினைத்துப் பாருங்கள். ஒழுங்கான உணவு, உடை துாக்கமில்லை உறவினர்களாக இருந்தாலும் தந்தையாக இருந்தாலும் தாயைப்போல் பேணி வளர்ப்பது யாராலும் முடியாது என்பதை இன்று தாயற்ற குழந்தைகள் அதிகமாக விடுதிகளில் தங்கிப் படிக்கின்றார்கள். அடக்கம் பணிவு ஒழுக்கம் இவைகளில் தாயைப்போல வளர்ப்பது கஸ்ரம் என்னதான் ஆயிரம் சொந்த பந்தங்கள் இருந்தாலும் ஒருதாய் பக்கத்திலிருந்து பெண்களை வளர்ப்பதுபோல் வராது. பெண்பிள்ளைகள் காதல் திருமணம் செய்துகொண்டு சீரழிந்து போவதற்கெல்லாம் காரணம் தாய் அருகிலிருந்த பாதுகாக்காமல் போனது தான். இன்று கைகுழந்தைகளைக்கூட உறவினர்களிடம் விட்டுவிட்டு குடும்பத் தலைவிகள் வெளிநாடு செல்வது பரிதாப நிலையாக உள்ளது.

பெண் பிள்ளைக்குப் பத்து வயதாகிவிட்டால் வீட்டிலேயே இருந்து தங்கையைத் தம்பியை பார்த்துக்கொள் என்று துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தை நிறுத்தி படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து சிறகு விரித்துப் பறக்கும் வயதில் குழந்தை பார்க்கும் ஆயாவாக பணிபுரியும் வாழ்க்கையில் பிள்ளைகள் தள்ளப்பட்டு விடுகின்றார்கள். இதனால் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விரக்தியுடன் வாழ்ந்து பல தீய பழக்கவழக்கங்களைப் பழகிக் கொள்வது கவலையாக உள்ளது. ''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே" கவிஞர் எழுதியபாடல் இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. சில பெண்கள் நினைக்கிறார்கள் பெண் பிள்ளைகள் அதிகமாகப் படிக்கக்கூடாது என்று இது தவறு. இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு அதிகம் படிப்புத் தேவை. குடும்பத் தலைவிகள் வெளிநாடு செல்வதால் பாதிக்கப் படுவது பெண் பிள்ளைகளின் வாழ்க்கையே. உங்கள் பிஞ்சுக் குழந்தைகள் குரலைக் கேட்க அயல் நாட்டிலிருந்து ஆசைப்படுகின்றீர்கள். அந்தப் பிஞ்சுமனம் உங்கள் அன்பு வார்த்தைக்காக உங்கள் மார்பில் தூங்குவதற்கு எத்தனை ஆசைப்படும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டதில்லையா?

நீங்கள் வெளிநாட்டிலிருந்து உங்கள் பிஞ்சுக்குழந்தையின் முகத்தைப் பார்க்க துடிக்கின்றீர்கள். அவர்களும் உங்கள்பொன்முகம் பார்க்க ஏங்குகின்றார்கள். இந்த வாழ்க்கை தேவையா? பெண்களே சிந்தித்துப் பாருங்கள் வெளிநாடு சென்று உழைப்பதைத் தவிர்த்து பிள்ளைகள் மீது கூடிய அக்கறை எடுத்து சிறந்த மேதைகளாகவும், உலகம் போற்றும் தலைவர்களாகவும் வளர்ப்பது உங்கள் கையில்தான் உள்ளது. எனவே இந்தக் கருத்தை ஏற்று உங்கள் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**சிவலிங்கம்-சுமதி, ஏறாவூர்-04**

## பெண்களைப் பற்றி...

- பெண்களால் அன்பைப்பிரிக்க முடிவதில்லை. அவர்களால் அன்பைப் பெருக்கத்தான் முடியும்.
- பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படையாகும்.
- பெண் என்பவள் ஒரு நாவலைப் போன்றவள் அதில் தாய்மை, தவம், தியாகம் என்ற எத்தனையோ அத்தியாயங்கள் உண்டு.
- பெண்களின் துணிவு பணிவதில் இருக்கிறது. ஆண்களின் துணிவு ஆள்வதில் இருக்கிறது. மௌனமே பெண்களுக்குப் புகழைத் தேடிக் கொடுக்கிறது.
- பெண்களின் இரண்டு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களை விட வலிமை வாய்ந்தது.
- ஆயிரம் படை எடுப்பால் வெற்றி பெற முடியாததை ஒரு பெண் எழிதாகத் தன் புன்சிரிப்பால் வெற்றி பெற்று விடுவாள்.
- கன்னிப் பெண்ணின் அழகு உலகிலுள்ள எல்லாச் சிபாரிசுக் கடிதங்களை விடவும் வலுவானது.
- அழகிய பெண் வாதாடும் போது பேச்சாளர்களும் ஊமையாகி விடுகிறார்கள்.
- பெண் ஒன்றில் ஒரேயடியாக அன்பு செலுத்துவாள் அல்லது ஒரேயடியாக வெறுப்பாள் நடுத்தரமாக இருக்க பெண்ணுக்குத் தெரியாது.
- எனது புத்தகங்கள் எல்லாம் பெண்ணின், பார்வைகள் எனது குற்றங்கள் அவர்கள் கற்பித்துத் தந்ததே.

*விஜயலட்சுமி, விஷ்ணு ஆலய வீதி, கிரான்.*




## பொதுவுடமைச் சமவுடமை

பெண்ணாகப் பிறந்த தெல்லாம்
பெரும்பாவம் என்ற காலம்
மண்ணாகிப் போயாச்சு
மடமைகள் ஒழிஞ்சாச்சு!

✦

ஆணோடு பெண்களெல்லாம்
அந்தஸ்த்தில் சம மென்று
பேனாக்கள் உரைத்தாச்சு
புது உரிமை கிடைச்சாச்சு!

அடுப்பூதப் பெண்க ளென்ற
அவமானம் போயாச்சு
பிரதமராய் அமைச்சர்களாய்
பாவையரும் ஆயாச்சு!

✦

உணர்வுகளை உள்மாய்த்து
உலவும் விதவையர்க்கு
மணவாழ்வு எனும் புனிதம்
மறுபடியும் கிடைச்சாசசு!

✦

மருத்துவத்தில் பொறியியலில்
பிறகலையில் அரசியலில்
பொருத்தமுடன் பெண்களின்று
புகுவதுவே மறுமலர்ச்சி

✦

பெண்ணென்றும் ஆணென்றும்
பிரித்திடுதல் தேவையில்லை
பொன்னான வாழ்விலினி
பொதுவுடமை சம உரிமை!

## பேரீச்சம்பழ ரோல்ஸ்



**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| பேரீச்சம் பழம் | 250 கிராம் |
| சீனி | 250 கிராம் |
| ரவை | 100 கிராம் |
| தேங்காப்பால் | 1 கப் |
| பட்டர் | 50 கிராம் |
| முந்திரிப்பருப்பு | 50 கிராம் |
| ஏலப்பொடி | 1 தே.க |

**செய்முறை:-**

பேரீச்சம் பழத்தை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளுதல் வேண்டும். பால், சீனி என்பவற்றைச் சேர்த்துக் காய்ச்சி சீனி கரைந்தவுடன் பேரீட்சம் பழத்தைச் சேர்த்து கிளறுதல் வேண்டும். பின் பழம் கரையாமல் கலவை தடிப்பாக வந்ததும் பொன்னிறமாக வறுக்கப்பட்ட ரவையைச் சேர்த்துக் கிளறவும், பட்டரையும் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கிளறுதல் வேண்டும். முந்திரிப்பருப்பு, ஏலப்பொடி சேர்த்து கலவை சட்டியில் ஒட்டாத பதத்தில் இறக்கி பட்டர் பூசிய தட்டில் கொட்டி அழுத்திப் பரவி வெட்டி வர்ணக் கடதாசியில் (ரிசு) சுற்றிப் பரிமாறலாம்.

## நோய் தீர்க்க உதவும் அகத்திக் கீரையும் சத்தும்



*சிலருடைய வீடுகளில் கீரைவகைகள் சமைக்கும் பட்சத்தில் கேலிபேசி அவைகளை உண்ண மறுத்து ஒதுக்கி விடுவார்கள். எனவே அதனை அவதானித்து வீட்டில் பொறுப்பாக உள்ள பெண்கள் தங்களைச் சார்ந்த கணவர், பிள்ளைகள், சகோதரர்களுக்கு கீரை வகைகளின் பயன்பாடு பற்றியும் கீரை உடலுக்கு அத்தியாவசிய உணவு என்பது பற்றியும் எடுத்துக்கூறி உண்ண வைக்க வேண்டும்.*

வளரும் குழந்தைகளையும் சிறுவயது முதல் கீரைவகை உண்பதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளுவது நன்று. தினமும் ஒரு வகைக்கீரையைச் சமையலில் சேர்த்துக் கொள்வது சிறந்தது.

எனவே பெண்கள் கீரைவகைகள் பற்றி அறிந்திருப்பது நன்று. ஆகையால் அகத்திக்கீரைபற்றிப் பார்ப்போம்.

அகத்திக் கீரையில் விற்றமின் ஏ, கல்சியம், உப்பு, புரோட்டின் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து உள்ளது. சூடு உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது. பித்தத்தையும் தணிக்கும். கண் எரிச்சலுக்கு கைகண்ட மருந்தாகும்.

அகத்திக்கீரையில் சுண்ணாம்புச் சத்து இருப்பதால் எலும்பு, பல், கண் முதலியவற்றுக்கு ஏற்றது.

இரத்தக் கொதிப்பு, கடைவாய் அவிதல் போன்றவற்றையும் போக்க வல்லது.

வயோதிப காலத்திலும் எலும்பு வலுவுள்ளதாக இருக்கவும் மலச்சிக்கலை நீக்கவும் அகத்திக் கீரை பெரிதும் உதவும்.

தை, மாசி மாதங்களில் அகத்தி நன்றாகப் பூக்கும். அகத்திப் பூவோடு பாசிப்பயறு சேர்த்து கறியாக சமைத்து உண்டுவர இதய நோய் குணமாகும்.

அகத்திப்பூவும் இளம் இலையும் கலந்து சாறு பிளிந்து பருகிவரக் குடல்புண் ஆறும்.

எனவே அகத்திக் கீரை உடலுக்குச் சத்தூட்டி நோய் தீர்க்கும் மருந்தாகும். ஆகவே இவ் அகத்திக் கீரையை வாரத்தில் ஒரு நாள் என்ற முறையிலாவது உணவில் சேர்த்துக் கொண்டு பயன் பெறுவோமாக.

*கி.யோகேஸ்வரி*

## சமையல் செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

- உணவுப் பொருட்களுக்கு அதிகளவு நிறங்களைச் சேர்த்து கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும்.
- கறி வகைகளுக்கு ஆறிய பின்னரே எலுமிச்சம் பழச்சாற்றைச் சேர்த்தல். (மெல்லிய சூட்டிற்கும் உயிர்ச்சத்து அழிந்து விடும்)



- அலுமினியம், இரும்பு, செம்பு போன்ற உலோகப் பாத்திரங்களினாலும் கரண்டிகளினாலும் அமிலத்தன்மையான உணவுகள் சமைப்பதையும், எடுப்பதையும் தவிர்த்தல்.
- துவரம் பருப்பு சீக்கிரம் வேக வேண்டுமானால் 10 நிமிடத்திற்கு ஊறவைத்து தண்ணீர் நன்கு கொதிக்கும்போது பருப்பைப் போட வேண்டும். அப்படிச் செய்தால் பருப்பு விரைவில் வேகிவிடும்.
- தயிரில் அதிகளவு மணமும் புளிப்புத் தன்மையும் காணப்படுமானால் சிறிது சுண்ணாம்பை எடுத்து பொட்டலமாகக் கட்டி தயிரினுள் பொட்டலத்தைப் போட்டுத் தயிரைப் பின்னர் பாவிப்பதன் மூலம் புளிப்புத் தன்மை, மணம் நீங்கிவிடும்.
- உழுந்து அரைக்கும் போது அரைபட்ட பதம் வந்து விட்டதா என அறிவதற்கு அரைத்த உழுந்தை தண்ணீரில் விட்டுப் பார்த்தால் உழுந்து மிதக்கும். அதுதான்

பிதாமகன்'' படத்தை சன் டி.வி. டாப் 10-ல் தவறாக கருத்து சொன்னதை இயக்குனர் பாலா கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

கடந்த தீபாவளி அன்று வெளிவந்த விக்ரம்- சூர்யா நடித்த பிதாமகனை இயக்குனர் பாலா இயக்கி உள்ளார். இப்படத்தின் திரை விமர்சனத்தில் புகழ்ந்து தள்ளிய சன் டி.வி. டாப் 10 நிகழ்ச்சியில் 1 இடத்தை அளித்தது. இதற்கிடையில் கடந்த வாரம் பிதாமகன் படத்தை 2-வது இடத்திற்குக் கொண்டு வந்தது. இதனால் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

# பிதாமகன் பற்றி தவறான கருத்து

## இயக்குனர் பாலா கண்டனம்




இதுகுறித்து இயக்குனர் பாலா நேற்றுக் காலை சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சன் டி.வியின் டாப் 10' நிகழ்ச்சியில் முதல் இரண்டு வாரம் முதல் இடம் கொடுத்து படத்தைப் பற்றி பிரமாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் எந்தப் படத்தைப் பற்றியும் புகழ்ந்து சொல்லிவிட்டு அப்படத்தின் படத்தயாரிப்பாளர் அல்லது வெளிநாட்டு உரிமை பெற்ற விநியோகஸ்தர்கள் படத்தை அடிமாட்டு விலைக்குக் கேட்பார்கள். இதுதான் சன் டி.வியின் யுக்தி.

அதேபோல பிதாமகன் படத்தின் உரிமையையும் அடிமாட்டு விலைக்குக் கேட்டு இருக்கிறார்கள். தராததால் படஅதிபரை மிரட்டல் செய்து இருக்கிறார்கள். விலை படியவில்லை என்பதால் இரண்டாவது இடத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இந்த யுக்தியைக கடந்த பல ஆண்டுகளாக சன் டி.வி. செய்து கொண்டு வருகிறது. இதனால் பாதிக்கப்பட்ட பட அதிபர்கள் பட்டியல் எடுத்தால் தெரியும்.

சினிமா அழிவதற்கு முதல் காரணமே சன் டி.வி.தான். சினிமாவை வைத்து வாழ்ந்து கொண்டு இருக்கும் சன் டி.வி. மற்ற சேனல்களை விட பண பலமும், செல்வாக்கும் உள்ளதால் இந்த மாதிரி முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

மூன்றாவது வாரம் பிதாமகன் படத்தை 2- வது இடத்தில் வைத்து தரக்குறைவாக விமர்சனம் செய்து இருக்கிறார்கள். பெண்கள், குழந்தைகள் படம் பார்க்கப் பயப்படுகிறார்கள் என்று சொன்னால் எப்படி இருக்கும். உடனே என் தரப்பில் இரண்டு பேரை அனுப்பி நியாயமாக இருக்கிறதா? இது பெரிய அவமானமாக கருதி சம்மந்தப்பட்ட மூத்த அதிகாரிகளிடம் பேசினார்கள். பின்னர் மீண்டும் ஒளிபரப்பும் போது எடிட் செய்வதாக கூறினார்கள். ஆனால் சில வார்த்தைகளை தூக்கி விட்டு இரண்டாவது இடத்தைக கொடுத்துவிட்டார்கள். என் படத்தை நியாயமாக விமர்சனம் செய்தால் ஏற்றுக் கொள்வேன். தவறு இருந்தால் ஏற்றுக்கொள்வேன். பிதாமகன் தமிழகம் முழுவதும் 145 பிரிண்ட்டுகள் வெளியிடப்பட்டுள்ளது. மதுரையில் 5 தியேட்டரில் வெளி வருகிறது. சென்னையில் பிதாமகன் ஒரு நாளைக்கு 33 காட்சிகள் திருமலை 22 காட்சிகள் ஓடுகிறது.

சன் டி.வி. விமர்சனத்தால் தியேட்டரில் பாதிப்பு இல்லை. இனிமேல் என்னைப் போல் யாரும் பாதிக்கக்கூடாது என்பதில் இதை சொல்கிறேன். சினிமாவை வைத்து வாழும் சன் டி.வி. சினிமா இல்லாமல் நடத்திக் காட்ட முடியுமா?


இவ்வாறு அவர் கூறினார்.

## திரை பிம்பங்கள்

அண்மையில் நடிகர் கமலஹாசன் தனது பிறந்த நாளையொட்டி தன்னை சந்திக்க வருபவர்கள் மலர் மாலை, பூங்கொத்துக்குப் பதிலாக கல்வி உபகரணப் பொருட்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன்படி திரை உலக பிரமுகர்கள், ரசிகர்கள் நடிகர் கமலஹாசனிடம் ரூ.75 ஆயிரம் மதிப்பிலான கல்வி உபகரண பொருட்களை வழங்கினார்கள்.

இதன்படி சென்னையிலுள்ள நடிகர் கமலஹாசன் அலுவலகத்தில் உதவும் உள்ளங்கள் அமைப்பு தேர்வு செய்த ஆதரவற்ற இல்லங்களான 11 இல்லங்களில் படிக்கும் மாணவ- மாணவிகளுக்கு நடிகர் கமலஹாசன் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

இந்த விழாவில் டாக்டர் ரகுபதி, கமலஹாசன் நற்பணி இயக்க நிர்வாகி குணசீலன், பி.ஆர்.ஓ.நிகில்முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# நடித்துக் கொண்டேயிருப்பேன் அரசியலுக்கு வரமாட்டேன்

விழாவிற்கு பின் நடிகர் கமலஹாசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அதற்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:-

கேள்வி:- 'சண்டியர்' படத்திற்கு புதிய பெயர் எப்போது அறிவிப்பீர்கள்?

பதில்:- அடுத்த மாதம் டிசம்பர் 4 அல்லது 5 தேதிகளில் இதற்கான கேசட் வெளியீட்டு விழா நடக்கிறது. அப்போது பெயர் அறிவிக்கப்படும்.

கேள்வி:- பிரச்சினைக்குரிய பெயராக இருக்குமா?

பதில்:- அப்படி எல்லாம் இருக்காது.

கேள்வி:- சினிமாவிலிருந்து ஓய்வு பெறுவீர்களா?

பதில்:- மக்கள் ஓய்வு கொடுத்தால்தான். அதுவரை நான் நடித்துக் கொண்டு இருப்பேன். இந்த நிலைக்கு வருவதற்கு நான் கெஞ்சிப் கேட்டுத்தான் வந்தேன். யாரிடமும் பறித்து கொண்டு வரவில்லை.

டைரக்டர் பாலசந்தரிடம் நான் பல வாய்ப்புகளை தட்டி பறித்தேன். வாங்கி இருக்கிறேன். அவரது இயக்கத்தில் 40 படங்களில் நடித்து இருக்கிறேன். ஓய்வு பெறும் அளவுக்கு நான் வரவில்லை. சினிமாவில் எனது ஆசை தபசு கேட்டதை விட அதிகம் வரம் பெற்று வந்து இருக்கிறேன். சில நடிகர்கள் நடிக்கும் போதே இறந்து போக விரும்புகிறேன் என்று சொல்வார்கள். இதனால் பாதிக்கப்படுவது படஅதிபர்கள்தான். அப்புறம் எப்படி படத்தை முடிப்பது.

'ஹேராம்' படத்தில் கோகிலே என்பவர் நடிக்கும் போதே இறந்து விட்டார். இதனால் வேறு ஒரு நடிகர் நடித்தார். அவர் விருது பெற்றார். கோகிலே பெற வேண்டிய விருதை அவர் பெற்றார்.

நான் கதாநாயகனாக மட்டுமல்ல வயதானால் தாத்தாவாகக் கூட நடிப்பேன். ஒரு விஷயத்தை சொல்ல வேண்டும் என்றால் நான் நடிக்க வந்தவன் அல்ல. ஒரு சினிமா ரசிகன். இயக்குனர் கே.பாலசந்தரிடம் இருந்து அழைப்பு வந்த போது உதவி இயக்குனர் வேலை என்று நினைத்தேன் ஆனால் நடிகனாகி விட்டேன். தொழில்நுட்ப கலைஞன இருக்க விரும்புகிறேன். அதுதான் எ க்கு ரொம்பப் பிடிச்சமான விஷயம். காரணம் அது மேஸ்திரி மாதிரியான தொழில். அதுதான் எனக்குப் பிடிக்கும்.

எங்கப்பா வக்கீலாக இருந்தவர். அவருக்கு ஓய்வு இல்லை. அதுபோலதான் சினிமாவும். இதுவரை எந்த நடிகரும் 25 ஆண்டை தாண்டவில்லை.

யாத்திரையில் கதாநாயகர்கள் ஓய்விடம் புறப்பட்டு ரொம்பநாள் ஆயிடுச்சு. இப்போ 15 வருடங்கள் ஆயிடுச்சு.

கேள்வி:- 'சண்டியர்' பிரச்சினை தீர்ந்ததா?

பதில்:- அது ஒரு பிரச்சினையாக இல்லை. எல்லாம் தீர்ந்து விட்டது.

கேள்வி:- அரசியலில் ஈடுபடுவீர்களா?

பதில்:- இதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். நான் அரசியலுக்கு வரமாட்டேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வாசகர் இதயம்

தமிழ் அலைக்கு எனது பணிவான வணக்கங்கள்.

எப்படி ஆரம்பிப்ப தென்று தெரியவில்லை. ஆனால் என் உள்ளச்சுமையை, உணர்வை, வெறியை ஆதங்கத்தை உன் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கின்றது. எனக்குள்ளே கண்ணுறக்கமின்றி தவித்து ஏங்கிக் கொண்டிருந்த புரட்சி வெறி இன்று உன் வரவால் உயிர் பெற்றதைப் போல் பெருமிதப்படுகின்றது. 'வாள் முனையால் செய்ய முடியாததையும் பேனா முனையால் செய்து முடிக்கலாம். என்பார்கள். அதற்கேற்ப உனை நான் நாடி நின்றேன் எனக்கு உன் ஆதரவு கிடைக்குமா என்னைப் பெரிய படைப்பாளி என்று கூறவில்லை தமிழ் வெறியூற்று எனக்குள்ளும் ஊறிக்கொண்டிருக்கின்றது. என்றேன். வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். இன்று தான் (29.10.03) என் கைகளால் உன்னைத் தழுவினேன். என் பார்வையாலும் இன்று தான்நீ முதன் முதலாக தென்பட்டாய் (25.10.03) இது ஓசை 30 என்றால் அதற்கு முன்னுள்ள 29 ஓசைகளையும் கேட்க பார்க்க கொடுத்து வைக்காத பாவியோ நானென வேதனைப்பட்டு உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

செட்டியூர் வாசகி

தமிழ் அலையே!

தமிழ் மக்களின் உணர்வலைக்கு எனது முதல் வந்தனம். இலை மறை காய்களாய் இருந்த எங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வரும் ஓர் களமாக அமையும். தமிழ் மக்களின் உணர்வலையாகிய தமிழ் அலையே உன் பணி மென் மேலும் பிரகாசமாக ஒளிர அலை மகனாகிய எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்
அலை ஜெகன், கடற்கரைவீதி,
கதிரவெளி.

அன்பின் தமிழ் அலையே
வணக்கம்

என் அபிமான தமிழ் அலையே நீ சுமந்து வரும் சுமைக்குள் காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு, சிறு கதை, நாவல், கவிதைக் களம், மருத்துவக் குறிப்பு போன்ற அத்தனை அம்சங் களும் வெரிவெரி சுப்பர். ஒவ்வொரு வாரமும் தரணியில் நீ மலர்கையில் தமிழ் பேசும் நெஞ் சங்களில் நீ-மலர்கின்றாய்

அத்தனை நெஞ்சங்களிலும் உன்னை விரும்பி நேசிக்கும். வாசகர்களுள் நான் ஒருவன்.

எனவே உன் இதழின் புகழ் என்றும் வானில் சிறகடித்து புகழ்பரப்ப என்நல்வாழ்த்துக்கள்.

சி.சத்தியகாந்தன்,கதிரவெளி.

தமிழ்பேசும் மக்களின் உணர்வலையாய் உலாவரும் தமிழ் அலையே, உனக்குக் கோடான கோடி வந்தனங்கள். நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அற்புதமானவை. அதிலும் குறிப்பாய் காலத்தால் அழியாத மாவீரர் வரலாறும், வேணிதனின் அரசியல் ஆய்வு, துரோகங்களின் அத்தியாயங்கள் மிகமிக அற்புதமானவை. உன்பணி உலக தமிழர்கள் வாழும் இடமெல்லாம் திகழ்ந்து வரவேண்டு மென்பது எனது அவாவாகும்.

வ.விஜிதன்,புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.


மதிப்பிற்குரிய தமிழ் அலையே!

தமிழ் மக்களின் உணர்வலையாய் வாராவாரம் தவழ்ந்து வரும் தமிழ் அலையே - உன் தரம் உயர் தகவல்கள் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். மென்மேலும் உன் படைப்புக்கள் உயர்ந்து இந்தப் பாரினிலே பவனி வர எனது உளம் கனிந்த பாராட்டுக்கள்.

வி.எம்.சுதா




88 தொன் எடையுள்ள பிரிட்டிஷ் எயார் வேய்ஸ்க்குச் சொந்தமான புதியரக கொஸ்கோட் சுப்பர் சோனிக் ஜெற் விமானம் அமெரிக்காவிலுள்ள சுதந்திர சிலைக்கு மேலாகப் பறக்கும் காட்சி



வான்கூவரில் நடைபெற்ற உலகப் பாரந்தூக்கும் சம்பியன் போட்டியில் உக்ரெய்னைச் சேர்ந்த டெறிஸ்கொட்பிறிட் 195 கி.கிராம் எடையைத்தூக்கும் போது அவரது இடதுகை மூட்டுக்கழன்றுள்ளதைக் காணலாம்

பார்சிலோனியாவிலுள்ள பாலோ சான்ற்ஜோடி என்னுமிடத்தில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த எட்கார் ரொறொன்ரோஸ் என்பவர் தனது மோட்டார் சைக்கிளில் இருந்து ஆகாயப்பாய்சல் பாய்ந்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தும் காட்சி.



# சிறுவர் சிகரம்

## கழுதையின் மூளை

**ஒரு** காட்டில் சிங்கமும் நரியும் நண்பர்களாக இருந்தன. எப்பொழுது பார்த்தாலும் இரண்டும் ஒன்றாகவே வேட்டையாடி உணவு தேடி வந்தன.

திடீரென்று ஒரு நாள் சிங்கம் நோய்வாய்ப்பட்டது. அதனால் சிங்கத்திற்கு வேட்டையாடப் போக முடியாத நிலை ஏற்பட்டது. நரியிடம் '' நண்பா! இன்று என்னால் வேட்டையாடி உணவு தேட முடியாது ஏதாவது ஒரு மிருகம் தானாகக்கிடைத்தால் தான் உண்டு" என்று சிங்கம் நரியிடம் கூறியது.

''சற்றுப்பொறு நண்பா! இதோவருகிறேன்" என்று கூறி நரி ஏதாவது ஒரு மிருகத்தை அசத்திடலாம் என்று எண்ணியவாறு காட்டில் அலையத் தொடங்கியது. நரியிடம் சிக்கியது ஒரு கழுதை மட்டும்தான்.

நரி, '' கழுதையே! உன்னைச் சிங்க ராஜா மந்திரியாக அமர்த்தப் போகிறார். அதனால் உன்னை அழைத்து வர உத்தரவு" என்று நரி கழுதையிடம் கூறியது. கழுதையும் சந்தோசமாகப் புறப்பட்டது.





சிங்கம் கழுதையைக் கொன்றது சிங்கத்திற்கு களைப்பாக இருந்ததால் கைகழுவச் சென்றது. அந்த நேரத்தில் நரி அவசரமாகக் கழுதையின் மூளையைச் சாப்பிட்டு விட்டது. திரும்பி வந்த சிங்கம் நரியிடம் ''எங்கே கழுதையின் மூளையைக் காணவில்லை" என்று கோபமாகக் கேட்டது. நரி பதறாமல் நண்பா! ''கழுதைக்கு மூளை இருந்திருந்தால் இப்படி வந்து மாட்டிக் கொள்ளுமா?" என்று பதிலளித்தது. இன்றும் கூட சிங்கம் விடை தெரியாமல் காட்டில் சுற்றித் திரிகின்றது.

*வ.சிலோஜன் கொக்கட்டிச்சோலை.*

## வாழ்வியல் பற்றிய வைர வரிகள்

*அன்னை, தந்தை, ஆசான் மூவரும் முதல் தெய்வங்கள். இம் மூவரையும் துதியாதவன், மதியாதவன் மிருகத்திற்குச் சமமானவன்.

*இளமையில் எவன் கஸ்ரப்படுகின்றானோ அவன் முதுமையில் சந்தோஷமாக வாழ்வான்.

*இரவில்லாமல்பகலில்லை! துன்பமில்லாமல் இன்பமில்லை! துவண்டு விடாதே துணிந்து நில் வெற்றி நிச்சயம்.

*வாழ்க்கை சுவர்க்கமானது. நீ நினைப்பது போல் அது நரகமானதல்ல.

*உனது கால்களின் கீழ் தடைக்கற்கள் தட்டுப்படுகின்றதா? தயங்காதே... இனித்தான் உனது நடை வேகமாகப் போகிறது. விடியலைக் காணப் போகிறது.

*உனது இலட்சியங்களை அடைய வேண்டுமாயின் வாழ்வியலோடு போராடு!

*எவன் சிறந்த அனுபவசாலியோ அவன் தான் சிறந்த அறிவாளியாவான்!

*வாழ்க்கை சுகமானது! சுவாரஸ்யமானது! அனுபவி.

*வெல்லபதியான் எருவில்*

## எழுத்துப் புதிர்

01. சிரித்துக்கொண்டே இருக்கும் எழுத்து - ஈ
02. கேட்டுக்கொண்டே இருக்கும் எழுத்து - தா
03. துரத்திக் கொண்டே இருக்கும் எழுத்து - போ
04. தொடாமல் சுடும் எழுத்து - தீ
05 எப்போதும் வலியால் துடிக்கும் எழுத்து - ஆ
06. தேனீக்களுக்கு விருந்து கொடுக்கும் எழுத்து - பூ

*த.குகதாஸ், தரம் 08,*
*மட் -கரையாக்கன்தீவு கணேசர் வித்தி*

## நான்

நான் அலோஜிகா. எனது அப்பாவின்பெயர் அமிர்தலிங்கம். அம்மா நிர்மலா. சகோதரி சோபா, எனது கிராமம் அரசடித்தீவு. நான் அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் 1ம் தரத்தில் கல்வி கற்கின்றேன். எனக்குப்பிடித்த பாடம் ஆங்கிலம். எனக்கு எங்கள் எல்லா ஆசிரியர்களையும் மிகவும் பிடிக்கும். எனது எதிர்கால இலட்சியம் நான் வைத்தியராக வந்து உதவி செய்ய வேண்டும் என்பதே.

அ.அலோஜிகா, தரம்-01
அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.

## தகவல் துளிகள

* நம் வயிற்றில் உள்ள சிறு குடலின் மொத்த நீளம் 22 அடி.

* கால் நகங்களை விட கை நகங்கள் வேகமாக வளரும். ''கங்காரு"வின் பால் வெளிறிய சிவப்பு நிறமுடையது.

* மனிதனுக்கு சராசரியாக 40-60 தலைமுடிகள் தினமும் உதிர்கின்றன.

* உலகில் மிக வேகமாக வளரும் மரம் யூக்கலிப்டஸ் ஆகும். பூஜ்ஜியத்தை (0) அறிமுகப்படுத்திய நாடு இந்தியாவாகும்.

* கடல் மட்டத்திற்குக் கீழேயுள்ள ஒரே நாடு டென் மார்க்.

*தே.மதன்ராஜ்*
*தரம் -10*
*மட்-மெதடிஸ்த மத்திய கல்லூரி*
*மட்டக்களப்பு*

## விண்வெளி விந்தைகள்

01. நவீன விண்வெளி யுக த்தின் தந்தை எனப்படுபவர் யார்? சியோல் கோவ்ஸ்கி

02. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்? இவர் எத்தனையாவது விண்வெளி மனிதர்?
ராகேஸ் சர்மா, 133வது வீரர்.

03. பூமிக்கருகிலுள்ள நட்சத்திரக் கூட்டம் எது?
அன்ரோ மீடா என்ற நட்சத்திரம்.


04. சந்திரனுக்கும், பூமிக்குமுள்ள தூரம் எத்தனை கிலோ மீற்றர்?
3.84,400 கிலோமீற்றர்.

05. வியாழனின் உப கோள்களில் மிகப் பெரியது எது?
கனீமீர் என்ற உபகோள்.

06. முதலில் விண்வெளிக்கு ஏவப்பட்ட விண் ஆய்வுக்கூடம் எது?
சல்யூட் 10

07. சந்திரனில் இதுவரை எத்தனை பேர் காலடி எடுத்து வைத்துள்ளனர்?
12 பேர்.

08. விண்வெளியில் முதன் முதலில் உயிர் நீத்தவர்?



கொமசோடா என்பவர்.

09. கோள்களில் எதிர்ப்பக்கமாகச் சுற்றும் கோள் எது? யுரேனசு.

*நா.நிசாந்தினி, தரம் - 06ஏ*
*மட்-புதூர் வி.வி, மட்டக்களப்பு.*

## விஞ்ஞான விளக்கம்

**01. இலையுதிர் காலங்களில் இறப்பர் மரத்தில் இருந்து பால் எடுப்பது உகந்ததல்ல.**

இலையுதிர் காலங்களில் ஒளித்தெறிப்பு வீதம் குறைவாக இருக்கும். எனவே பால் உற்பத்தியும் குறையும். எனவே இறப்பர் மரத்திற்குச் சேதம் ஏற்படும்.

**02. இறப்பர் தொழிற்சாலைகளுக்கு அண்மையாகப் பாயும் நீரோட்டங்களில் இறப்பர் பால் கலப்பதால் துர்நாற்றம் ஏற்படுகின்றது.**

இறப்பர் பாலில் அதிகளவு நீர் சேருமாயின் நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரிக்கும். இதனால் புரதம் பிரிகை அடைவதால் துர்நாற்றம் ஏற்படும்.

**03.பால்வெட்டின்போது மாறிழைய த்திற்குச் சேதம் ஏற்படுதல் கூடாது.**

மாறிழையம் சேதம் அடைவதால் மீள் பட்டை உருவாக்கம் நடைபெறாது. இதனால் பாலின் அளவு குறையும். எனவே பால் எடுக்கும் காலமும் குறையும்.

*க.துஸ்யந்தன், கன்னன்குடா-02*

## சிந்தனைக்கு சில துளிகள்

அறிவால் ஒருவனை அறிந்து கொள!
இல்லை அனுபவித்தாவது புரிந்து கொள்!
!நண்பர் யார் எனத் தெரிந்து கொள்!
அவன் நல்லவன் ஆகிலும் விலகி நில!
தேவையென்றால் கடன் வாங்கு!
கிடைக்கிறதே என்பதற்காக வாங்காதே!
இன்பம் வரும்போது எகிறிக் குதிக்காதே!
துன்பம் வரும்போது சோர்ந்து விடாதே!
அரண்மனையானாலும் அழைக்காமல் போகாதே!
ஆபத்தில் சிக்கிக் கொண்டிருந்தாலும் பாம்புக்கு உதவாதே!
தரக்கூடாதவனுக்கு சன்மானம் தராதே!

*பொ.வனிதா, பழுகாமம்--02*

## விடுகதைகளும் விடைகளும்

01. கழுத்தைச் சீவினால் தான் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
02. வேதனையின்றியே வேகமாய்த் துடிப்பான். அவன் யார்?
03. தீக்குள் புகுந்தாலும் திடமாகவே இருப்பான். அவன் யார்?
04. ஆற்றங்கரையினிலே ஒரு பாம்பு அசைந்து அசைந்து புரண்டாலும் கரையைக் கடப்பதில்லை அது என்ன?
05. ஆண்டுக்கு ஆண்டு அழகாய் உருமாறிவரும். அது என்ன?
06. ஆள் இறங்காத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது அது என்ன?
07. உயிரில்லாமலே உயரப் பறப்பவன். அவன் யார்?
08. ஏறமுடியாத மரம் எட்டாயிரம் காய் காய்க்கும் அது என்ன?
09. வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அது என்ன?
10. ஆடி ஆடி அசைந்து வரும் ஆத்திரம் வந்தால் பொங்கிவரும் அது என்ன?

### விடைகள்

01.இளநீர்
02.கண்இமை
03.செங்கல்
04.நாக்கு
05.உருவம்
06.அகப்பை
07.காற்றாடி
08.கேள்வரகு
09.பாம்பு
10.கடலலை

*ந.துலாஞ்சலி*
*மட்-அரசடித்தீவு வி.ம.வி*

## விஞ்ஞான மேதைகள்

01. கொப்பனிக்கஸ் (1473-1543)
சூரியமையக் கொள்கையை முன் வைத்தவர்.

02. ரைக்கோ டீ பிறாகே (1546-1601)
''மினோவா" எனும் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்தவர்.

03. சாள்ஸ் டார்வின் (1809-1882)
அங்கிகளின் கூர்ப்புக் கொள்கையை முன் வைத்தவர்.

04. மெண்டலிவ் (1834-1907)
ஆவர்த்தன அட்டவணையைத் தயாரித்தார்.

05. மெண்டல் (1822-1884)
பிறப்புரிமையியல் கோட்பாட்டை உருவாக்கியவர்.

06. அலெக்ஸ்சாந்தர் பிளேமிங் (1881-1955)
பென்சிலைக் கண்டுபிடித்தவர்.

07. அரிஸ்ரோட்டில் (384-322 கி.மு)
அளவையியலின் தந்தை.

08. ஜோசப் பிறிஸ்றிலி (1733-1804)
இரசாயனவியலாளர் ஆவார் உதாரணமாக ஒட்சிசன் வாயுவைக் கண்டு பிடித்தவர்.

09. யோன் வெண் (1834-1923)
அளவையியல், மொழியியல், தாவரவியல், கணித அறிஞர் ஆவார்.

10. கிரஹம் பெல் (1847-1922)
தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்.

11. கிரான்ட் பேன்டிங் (1891-1941)
'' டயபிற்றிக்" எனும் கொடிய வியாதிக்கான '' இன்சுலின்" மருந்தைக் கண்டு பிடித்தவர்.


12. சிம்மெல்வைஸ்
நோய்க்கிருமி எதிர்ப்பு முன்னாயத்தங்களைச் செய்யாது விட்டால் வைத்தியர்கள் மூலமாகவே நோயாளிக்கு நோய் பரவும் எனும் கருத்தினை முன் வைத்தவர்.

*க.புவிக்குமார், காயான்மடு கன்னன்குடா.*



# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

**01. குறிகளினால் காட்டப்பட்டுள்ள சதுரத்தின் கேள்வி அடையாளம் இடப்பட்ட பகுதியில் வரும் மிகச்சரியான கோலத்தை (A),(B),(C),(D) ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்க.**




**02. எண் கோலங்கள்**


1. [18 / 05 35 02 / 10] [36 / 10 ----- 04 / 20]

2. [5 4 / 63 / 7] [--- 6 / 65 / 5] [9 8 / 51 / 3]

3. [12 / 3 4] [21 / 3 7] [36 / -- 4]


4. [5 / E] [D / 8] [12 / C] [B / 17] [-- / --]

5.




6. [36 / 9 2] [24 / 4 3] [32 / -- 4]


7.




8. A,C ........ G,I,K
9. ABC ........ GHI JKL
10. ABCD ........ IJKL MNOP


**03. இவ்வுருக்களுக்கு விடை எழுதுக.**

01)




1. இப்படத்தில் நிறம் தீட்டப்பட்டுள்ள பகுதி என்ன பங்கு?
2. இப்படத்தில் நிறம் தீட்டப்படாத பகுதி என்ன பங்கு?

02)




1. இப் படத்தில் நிறம் தீட்டப்பட்டுள்ள பகுதியின் என்ன பின்னம்?
2. நிறம் தீட்டப்படாத பகுதி என்ன பின்னம்?

03) இப்படத்தில் சமச்சீர் அச்சு அற்ற உருவம் எது?




A B C D

04) "N" என்ற ஆங்கில எழுத்தை தளவாடிக்கு முன் வைக்கும் போது தோன்றும் விம்பம் எவ்வாறு இருக்கும்?




**04. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

01) இங்குள்ள உருவில் இருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



1. முகங்கள் எத்தனை?
2. உச்சிகள் எத்தனை?
3. விளிம்புகள் எத்தனை?
4. இவ்வுருவுக்கு சமச்சீர் உள்ளதா? அவ்வாறாயின் எத்தனை?

02) ஒரு தோட்டத்தில் 1050 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. இதேபோல் இன்னுமொரு தோட்டத்தில் 975 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. இவற்றுள் 80 தேங்காய்கள் பழுதடைந்து விட்டன. இதில் 500 தேங்காய்கள் சொந்தப்பாவனைக்கு எடுக்கப்பட்டன. மிகுதித் தேங்காய்கள் விற்கப்பட்டன.

அ) நல்ல தேங்காய்கள் (பழுதடையாத)எத்தனை?
ஆ) விற்கப்பட்ட தேங்காய்கள் எத்தனை?
இ) ஒரு தேங்காய் 12.50 சதப்படி விற்றானாயின் விற்கப்பட்ட தேங்காய்களின் பெறுமதி யாது?


03 ஒரு மணிக்கூட்டின் முகப்பு காட்டப்பட்டுள்ளது.



இம்மணிக்கூட்டு காட்டும் நேரம் என்ன?

2.30

**05. இங்கு தரப்பட்டுள்ள மின்சுற்று ஒன்றின் மின்குமிழ் ஒளிர்வதைக் காட்டுகிறது.**




**1.** [X] எனும் ஆழி துண்டிக்கப்பட்டால் A,B எனும் மின்குமிழுக்கு யாது நிகழும். (Yஆழி தொடுக்கப்படாது உள்ளது)

A மின்குமிழ்...........................
B மின்குமிழ்...........................

**2.** [X] எனும் ஆழி இணைக்கப்பட்டால் A,B எனும் மின்குமிழ்களுக்கு யாது நிகழும் (Yஆழி தொடுக்கப்படாது உள்ளது)

A மின்குமிழ்...........................
B மின்குமிழ்...........................

**3.** இம்மின்குமிழ் தொடராக இணைக்கப்பட்டுள்ளதா? சமாந்தரமாக இணைக்கப்பட்டுள்ளதா? எனக் கூறுக?

**4.** [Z] எனும் அடையாளமிடப்பட்டுள்ளது எதைக் குறிக்கும்.

**06. கீழே காட்டப்பட்டுள்ள சொற்சோடிக்குப் பொருத்தமான சொற்சோடியைக் கண்டு பிடித்து அச்சோடியின் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.**

| 1) சதுரம் | | முக்கோணம் |
|---|---|---|
| 1. வட்டம் | - | அரைவட்டம் |
| 2. நீள்சதுரம் | - | சதுரம் |
| 3. நீள்சதுரம் | - | சாய்சதுரம் |
| 4. வட்டம் | - | சிறுவட்டம் |

| 2) முக்கோணம் | | பிரமிட் |
|---|---|---|
| 1. கூம்பு | - | வட்டம் |
| 2. அறுகோணம் | - | சந்திரவட்டக்கல் |
| 3. சதுரம் | - | பெட்டி |
| 4. குழாய் | - | கூம்புருளை |

| 3) தேசிக்காய் | | ஊறுகாய் |
|---|---|---|
| 1. கிழங்கு | - | மரக்கறி |
| 2. பாண் | - | பட்டர் |
| 3. நிலக்கடலை | - | எள்ளுருண்டை |
| 4. தோடம்பழம் | - | பழச்சாறு |

| 4) மந்தம் | | விரைவு |
|---|---|---|
| 1. வீழ்ச்சி | - | தாழ்வு |
| 2. சோம்பல் | - | சுறுசுறுப்பு |
| 3. ஆமை | - | முயல் |
| 4. மேளம் | - | தாளம் |

| 5) உதைத்தல் | | உதைபந்து |
|---|---|---|
| 1. கொலை | - | ஊசி |
| 2. உளி | - | கத்தி |
| 3. ஊதல் | - | குழல் |
| 4. உடைத்தல் | - | கற்றூன் |

**07) இச் செயற்பாடுகளின் ஒழுங்கு முறையினை நேரே உள்ள பெட்டிக்குள் பொருத்தமான இலக்கம் இடுக.**

**செயற்பாடு -1**

ஊசையும் நூலையும் பயன்படுத்தி உடை ஒன்றிற்கு பொத்தான் (தெறி) பொருத்துதல் தொடர்பான செயற்பாடு இங்கு தரப்பட்டுள்ளது.

1. போதுமான நூலை ஊசியில் கோர்த்து எடுத்தல்( )
2. துணித்துண்டு பொத்தான் ஊசி என்பதைக் கொண்டுவரல்()
3. நூல் கோர்க்கப்பட்ட ஊசியில் பொத்தானைத் துளைத்தல்()
4. சீலையில் பொத்தானை உரிய இடத்தில் வைத்துப்பிடித்தல்()
5. சுயமாகச் செய்து முடித்தல் ( )
6. பொத்தான் தைத்தபின் ஊசி நூலை வேறாக்குதல்( )

**செயற்பாடு -2**

சுற்றாடலில் பயன் தரும் மரம் ஒன்றை நடுதல் தொடர்பான செயற்பாடு இங்கு தரப்பட்டுள்ளது.

1. நிலத்தை நன்கு பயன்படுத்துதல்
2. மரக்கன்று ஒன்றை நடுதல்
3. சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்தல்
4. பசளையிடுதல், நீர் ஊற்றுதல்
5. கிருமி நாசினி தெளித்தல்
6. பயன்பெறுதல்

## விடைகள்

1) 1. D, 2. A, 3. C, 4. B, 5. B

2). 1. 70, 2. 07, 3. 09, 4. $^{19}/_{A,}$ 5. 11, 6. 04, 7. 06, 8. E, 9. DEF, 10. EFGH

3). 1. i. $^{3}/_{7}$ ii. $^{4}/_{7}$ 2. i. $^{5}/_{9}$ ii. $^{4}/_{9}$
3. B 4.

4). 1. i. 09 ii. 05 iii. 16 iv. ஆம், 2
2. அ. 1945 ஆ. 1445 இ. 18062.50
3. 3.50 மணி

5). 1. a).மின்குமிழ் எரியாது(ஒளிராது)
b).மின்குமிழ் ஒளிராது
2. a).மின்குமிழ் ஒளிராது
b). மின்குமிழ் ஒளிரும்
3. சமாந்தரம்
4. Z - மின்கலம்

6). 1. 01, 2. 03, 3. 04, 4. 02, 5. 03

7). (செய.1) 1. 02, 2. 01, 3. 04, 4. 03, 5. 06, 6. 05
(செய.2) 1. 03, 2. 01, 3. 02, 4. 04 5 .05, 6. 06

- சிறுகதை -



# எத்தனை பிரிவுகள்

**வாசுகி குணரத்தினம்**

சரியான அடைமழை பிடித்துக் கொண்டது. இது மார்கழியல்ல, மழை முந்திவிட்டது. பின்னுக்கு மழை இல்லை என்கிறார்கள். வானிலை ஆராய்ச்சி மையங்கள் இது பற்றிக் கவலை கொள்வதில்லை. மழை வருகின்ற அறிவித்தலை மட்டுமே வழங்கும் உரிமை கொண்டவை அவை.

பிரதேச காரியாலயத்தில் கிளார்க்காக வேலைபார்க்கும் கந்தசாமியருக்கு இந்த மழை பற்றிக் கவலை. அவரை யாரும் கிளார்க்கர் என்று முத்திரை குத்துமாப்போல அழைத்துவிடக் கூடாது. அது அவருக்குப் பிடிக்காத ஒன்று. பதவிப் பெயருக்குள் தன்னைத் திணித்துக்கொண்டு சந்தோசம் காண விரும்பாதவர். கந்தசாமிக்கு வயல்தான் முக்கியம். “ இந்த உத்தியோகத்தில இருந்து என்னத்தக் கண்டம், பெரியவன்ட திட்டக்கேட்டதுதான் மிச்சம். அவனுகள்ட பெயருக்கு நாம மரியாத குடுக்கப்பழகினாப் போதும்! பிறகென்ன வேலை செய்தா என்ன செய்யாட்டி என்ன? எல்லாம் ஒண்டுதான். இதவிட வயலுக்க இறங்கினாலும் காலபோக அறுவடய நல்லாக்கிப் போடலாம்” என்பார்.

கந்தசாமியின் பகுதிக்குள் மூன்று ஆண்களும் இரண்டு பெண்களுமாக வேலை பார்க்கிறார்கள் இன்று சந்திரா வரவில்லை இவள் இப்போதுதான் இந்தக் கிளைக்கு மாற்றலாகி வந்தவள். முன்பு வாகரைப்பிரிவில் வேலை செய்தவள். சந்திரா இந்தக் காரியாலயத்திற்கு வந்தபோது மீரா லீவு எடுத்திருந்தாள். அதனால் முதல்நாள் அவளை வரவேற்க முடியவில்லை. மீரா வந்தபோது சந்திராவைப் பார்த்து சிறிய புன்னகை செய்தாள். சந்திராவும் பதிலுக்குப் புன்னகைத்தாள். இருவரும் தமது நட்பை அறிமுகப்படுத்தினார்கள்.

சந்திரா வேலையில் பழையாள் என்றும், ‘சீனியர்’ என்றும் அனுபவம் உள்ளவள். பழகுவதற்கு நல்லவள் என்றும் முதல் நாள் அந்தப் பிரிவுக்குள் உரையாடல்கள் பகிரப்பட்டன.

வானம் இருண்டு கொண்டு வந்தது. மீண்டும் மழை பற்றிய கதைகள் தொடர்ந்தன.

“ இந்தமுற நான் விதைக்கல்ல: இப்பிடி மழை பெய்யிறதப் பார்த்தா எப்படிக் கால் போகஞ் செய்யிறது . அதோட உரத்துக்கும் விலையேத்திப் போட்டானுகள்!”

கந்தசாமியரும் வரதனும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

வரதன் ‘ஏஎல்’ வரை படித்தவன். இதற்கு முன்பு வேறு காரியாலயத்தில் வேலை பார்த்தவன். இங்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இளமையானவன், விவகாரப்படாத கதை பேச்சுக் கொண்டவன். எதனையும் வெளிப்படையாகச் சொல்லி விடுவான். விளைவுகள் பற்றிச் சிந்திக்காதவன். அந்த அலுவலகத்தில் உள்ளவர்கள் அவனைப் பன்னாடை என்பார்கள், சருகு என்பார்கள் ஆனால் அது அவனுக்குத் தெரியாது.

சந்திரா இந்தக் காரியாலயத்திற்கு மாற்றலாகி வந்து இரண்டு வாரங்கள் முடிந்திருந்தது. அவளது கடமைப்பட்டியல் வழங்கப்படவில்லை. இருக்கையும் ஒழுங்கில்லை. அங்கும், இங்கும் தாவித்திரிந்தாள், திருமணம் செய்தவள் இப்போது குழந்தைக்கு இரண்டு வயது. அக்காவிடம் பிள்ளையைக் கொடுத்து விட்டு பஸ் பிடிப்பவள். அக்காவிற்கு ஏதேனும் அலுவல்கள் வரும்போது அவள் லீவு எடுத்துக்கொள்வாள். அடிக்கடி அவளது லீவு குழந்தைக்காகவே இருக்கும்.

“இண்டைக்கு பேப்பர் வரல்லையா” வரதன் கேட்டான்.

வந்தால் நான் எடுக்க மாட்டன். எனக்கு வேண்டாம். என்னோட மிஸ்ரர் வெளியில எடுத்து வாறவர். அதால இங்க வேணாம் ரெண்டு பேப்பர் எடுக்கச் சம்பளம் கட்டுமா? என்றாள் சந்திரா. அலுவலகத்திற்கு விற்பனைக்கு வரும் பத்திரிகை பற்றிக் கதைத்துக் கொண்டனர்.

ஜோன்சனும், ஜெயராஜூம் பெரிய கிளாக்கரின் கையாட்கள் என்று எல்லோரும் கதைப்பார்கள். ஜோன்சன் மெலிந்தவன். உயர்ந்தவன். எந்த நேரமும் சேர், சேர் என்று கொண்டு பெரிய கிளாக்கரின் பின்னுக்குத் திரிபவன். தன்னுடைய சலுகைகளுக்காக பெரிய கிளாக்கரது வீட்டு அலுவல்களையும் முடித்துக் கொடுப்பவன்.

ஜெயராஜ் ஜோன்சனை விட அனுபவத்தில் குறைந்தவன். இருவரும் அண்ணன், தம்பி போல் பழகும் இணைபிரியாதவர்கள். ஜோன்சன் ஜெயராஜூக்கு வேலைகளைக் காட்டிப் பழக்கி விட்டான். இதனால் இருவரும் நண்பர்களாகி விட்டனர்.

ஜெயராஜூம் ஜோன்சனும் சேர், சேர் என வாலைக் குழைத்தபடி பெரிய கிளாக்கரின் பின்னால் திரிவது கந்தசாமியருக்கு பிடிப்பதில்லை.

மீராவுடன் வரதனும் இது பற்றி உரையாடுவார். “ டேய் வரதா பெரிய கிளாக்கனுக்கும் இவனுகள் சேர், சேர் என்று பின்னால் திரிவதில ஒரு சுகம்டா. அதுதான் அவருக்குப் பிடிக்கும். நம்மால ஏலாதுடா அப்படியெல்லாம் கதைக்க. என்ர வேல உண்டு வட்டியுண்டு என்று சீவிக்கிறன். எதுக்குடா இவனுகள காக்கா பிடிச்சி அலையோணும்.”

அப்போதுதான் சந்திரா அந்தப் பக்கம் திரும்பினாள். இங்கிருப்பவர்கள் தன்னைப் பற்றி என்ன கதைக்கின்றார்கள். தான் இவர்களுடன் எப்படி உறவை ஏற்படுத்திக் கொண்டு பழகுவது என்பது பற்றித் திண்டாடிக் கொண்டிருந்தாள் அவள்.

கடமையேற்று இரு வாரங்களாகியும் அவளது கடமைப் பட்டியல் வழங்கப்படாதது பற்றி யாரிடம் கதைப்பது என்பது அவளுக்குப் பயமாகவே இருந்தது. கேட்டு வாங்கி குழைந்து கொண்டு பின்னால் திரியும்படி அவளை வாகரைக் காரியாலயம் பழக்கியிருக்க வில்லை. இதனால் இந்தக் காரியாலயம் அவளுக்குத் தலையிடியாகப் பட்டது. அமைதியைத் தரவில்லை யாருடன் பகிர்ந்து கொள்வது என்பதும் தெரியவில்லை.

இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதுதான் கந்தசாமியரைப் பார்த்தாள். “ என்ன சேர் செய்யிறது நான் என்ர நிலையை ஆரிட்ட சொல்லுவது? இத்தனை நாளும் சும்மாதானே சேர் இருக்கிறன்”

“ அதுதான் பிள்ள சொல்லுறன் நீயும் சேர் சேர் என்று கூப்பிட்டுக்கொண்டு பெரிய கிளாக்கன் பின்னால திரிய வேணும்”

“ என்னால ஏலாது சேர், நான் முதல்ல எல்லாம் அப்படித் திரியல்ல, எல்லாம் ஒழுங்காச் செய்வாங்கள் சேர், நாங்க ஒழுங்கா வேலை செய்வம்.”

வரதனும், கந்தசாமியும் கொக்கரித்துக் கொக்கரித்துச் சிரித்தனர். மழைக்கு அந்தச் சத்தம் வெளியே கேட்க வில்லை.

“ இங்க அப்படி இல்ல நாமதான் போய் எதையும் கேட்டு வாங்க வேணும். அதுக்கும் அவரிட காலடியில பல காலம் தவம் கிடக்க வேணும். நீ அலைய வேணும். நீ அலையிறத அவர் பலதடவை கண்ணாரக் கண்டு சந்தோசம் கொள்ள வேணும். அதுக்குப் பிறகுதான் உன்ட வேலையை உன்னட்டத் தருவார்.

கந்தசாமியர் அறிவுரை செய்ய வில்லை. அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். சந்திராவுக்கு வழிசொல்லிக் கொடுத்தார். பேச்சில் நையாண்டி மேளம் ஒலித்தது.

“ என்ன சேர் இது. இதைவிட தமிழீழத்த எடுத்திடலாம் போல கிடக்கு.”

மீரா இப்படித்தான் கதைப்பாள். அவளது பேச்சில் நகைச்சுவை இருக்கும் நியாயமும் இருக்கும்

“ எல்லா இடமும் இதுதானே அண்ண நடக்குது. கதிரைச் சண்ட, பதவி, அதிகாரப்பிரிப்பு என்டுதானே புதினம்”

“ ஓமடா, வரதன் கனக்க வேணாம் நம்மட இந்த இடத்திலேயே பாரன், இவள் மீரா எப்ப வந்தவள். அவள் வரக்குள்ள என்ன நடந்தெண்டு தெரியுந்தானே உனக்கு.” “ ஓம் ஓம் சீனியர் யூனியர் சண்ட”

மீரா சிரித்தாள். அவள் இந்தக் காரியலத்திற்கு வந்தபுதிதில் இப்போது சந்திராவும் வரதனும் இருக்கிற இடத்தில இரண்டு பழசுகள் இருந்தது. அதுகளுக்கும் மீராவுக்கும் ஒரே சண்டை நடக்கும்.

“ தாங்க சீனியர் எண்டுறதும், இவள் இப்ப வந்தவள் இவ என்ன எங்களுக்கு மேலால எழும்பி ஆடுற எண்டுறதும் அப்பப்பா என்ன பாடத்தான் பட்டன் நான்.” மீரா தனது அனுபவத்தை மீட்டிச் சொன்னாள்.

“ நம்மில யாராவது ஏன் இப்படி இருக்கிறம் என்று கதைச் சிருக்கிறமா, இல்ல இப்படிக் கதைக்கிற நாமும் ஒரு குறூப் மற்றாக்களும் சேர்ந்து இன்னும் பலபல “குறூப்”பாத்தான் திரியிறம். ஒருத்தரும் ஒன்றாச் சேர்ந்து பெரிய கிளாக்கரிட்ட போய் ஏன் இப்படி இருக்கு எண்டு கதைக்கிறல்ல. அப்படியெண்டா எப்படி இந்தப் பிரிவினை மாறப் போகுது! நமக்குள்ளேயே அதுவும் இந்தச் சின்ன அலுவலகத்திற்கு ள்ளேயே இவ்வளவு பிரச்சினை பிரிவுகளெண்டு கிடக்கக்குள தமிழீழத்த எப்படியட அவள் தருவாள்! கிடைக்குமா அது?” என்ற கந்தசாமிக்கிளா க்கரின் உரையுடன் பகற்பொழுது கழிந்தது. எல்லோரும் கலகலத்துச் சிரித்தனர். சந்திரா வும், மீராவும் சாப்பாட்டுப் பார்ச ல்களை எடுத்தபடி வேறு இடம் நோக்கி நகர்ந்தனர்.

*(யாவும் கற்பனை)*

---

## நகைச் சுவை முற்றம்

~ தொகுப்பு: அமிர்தகழியான் ~

‘‘உன்னை எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்க வைத்து பல்கலைக்கழகத்துக்கு அனுப்பினேன். என்னை ஏன்டா இப்படிப் போட்டுச் சித்திரவதை பண்ணுறா?’’
‘‘என்முதல் பாடமே அது தான் அப்பா’’

---

‘‘என்ன நம்ம மகள் மேலாடை இல்லாம தெருவில போய் நிற்கிறாள்?’’
‘‘அவள் படிக்கிற ‘‘யூனிவசிற்றி அல்லவா?’’

---

‘‘என்ன பேராசிரியர் ஐயா அந்தப் பொடிப்பயலைக் கண்டு பயந்து நடுங்கிறீங்க’’?
‘‘உனக்குத் தெரியாது தம்பி, பல்கலைக்கழகத்தில் அவன் என் மாணவன்’’

---

‘‘என்வீட்டில் நான்தான் பிரதம மந்திரி ’’
‘‘அடபரவாயில்லையே!’’
‘‘அட நீயொன்று! உங்க வீட்டில் என் மனைவி தான் ஜனாதிபதி’’

---

‘‘ஏன் இந்த அடைமழையில் குடையுமில்லாமல் நடையில் போகிறீர்?’’
‘‘கந்தோருக்கு நேரமாகிவிட்டது. குளிக்க நேரமில்லை’’

‘மணி’, நல்லையா வீதி,

## இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை

# ஆடித் தீ

2

**வெ**ள்ளவத்தையில் இருக்கும் அவனுடைய வாடகை வீட்டைச் சென்றடைய பொழுதை இருள் கவ்வத் தொடங்கியிருந்தது.

கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் அது 'கிறிச்" என்ற ஓசையை ஏற்படுத்திற்று.

கேற் திறந்த ஓசை கேட்டவுடன் மான் குட்டி போல துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி வரும் தங்கையைக் காணவில்லை. அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு வருவாள் என்று தான் அவன் எதிர்பார்த்தான். ஆனால் விரவேயில்லை. வழக்கத்திற்கு மாறாக வீட்டின் கதவுகளும் யன்னல்களும் இறுக்கிப் பூட்டப்பட்டி ருந்தன.

'இவள்' எங்கே போயிருப் பாள்...?" சிந்தனைக் குழப்பத்துடன் கதவில் மெல்லியதாகச் சத்தம் எழும்பும் படி இரண்டு, மூன்று தடவைகள் தட்டினான்:

பலன் எதுவுமேயில்லை!

மீண்டும் பல தடவைகள் சற்றுப் பலமாகத் தட்டினான். நிண்ட நேரத்தின் பின்பு கதவில் மூன்றாம் பிறை போல ஒரு இடவு பிறந்தது.

அந்த இடவினூடாக அவனைக் கண்டது தான் தாமதம் ''அண்ணா''! என்று ஒரு வித கனிவுடன் அழைத்தாள். அவள் ''அண்ணா''! என்று அழைத்த அழைப்பில் அவள் எவ்வளவு பயந்து போயிருக்கிறாள் என்பது சொல்லாமலே புரிந்தது.

அவன் ''தங்கச்சி!'' என்று கூறி அவளை கட்டியணைத்தான்.

தாயைப் பிரிந்த கன்றுக்குட்டி தாயுடன் சேர்ந்த சுகம்அந்தக் கணப் பொழுதில் அவளது கண்களில் இருந்து வழிந்த சூடான நீர் அவனுடைய சேட்டையே நனைத்தது.

அவளுடைய கைகளும் கால்களும் மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தன.

அந்த அணைப்பிலிருந்து விடுபட்ட மகேந்திரன், கதவைத் தாழ்ப்பாளிட்டுப் பூட்டிக் கொண்டான்.

நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. வெளியே இடையிடையே வெடிச் சத்தங்களும் இரைச்சல்களும் கேட்டுக் கொண்டேயிருந்தன. அந்த வெடிச் சத்தங்களும் இரைச்சல்களும் மாநகருக்கு மாற்றலாகி வந்த மூன்று ஆண்டுகளில் கேட்காத புதுமைகளாகவே இருந்தன. இனம் புரியாத இரைச்சல்கள்....!

நேரம் செல்லச் செல்ல இரைச்சல்களும் உக்கிரமடைந்தன. இரைச்சல்கள்

• ஓ.கே.குணநாதன்

உக்கிரமடைய உக்கிரமடைய பயமும் வலுத்தது.

மகேந்திரனும் நிவேதாவும் அடைக்கப்பட்ட நான்கு சுவர்களுக்கு மத்தியிலே பூனைக்குப் பயந்த எலியைப் போல நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்களுக்குக் கடவுளைத் தவிர வேறு ஒரு துணையும் கிடையாது.!

அப்பொழுது நிவேதா மெல்லிய குரலில் சத்தம் வெளியே வரா வண்ணம், ''அண்ணா நாம எத்தின நாளைக்குப் பயந்து பயந்து இருக்கிறது.. இப்படிப் பயந்து பயந்து வாழுறத விட, இந்த வேலய விட்டுப் போட்டு ஊருக்குப் போய் ஏதாவது ஒரு சின்ன வேலய எடுத்துக் கொண்டு நிம்மதியாக இருந்திடுவமே!" என்றாள்.

அவள் கூறியதும் அவனுக்கு நியாயமாகவே பட்டது. உண்மைதான் காலங்காலமாக வாற இனவாத சக்திகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டு பயந்து பயந்து வாழுறத விட... அவள் சொல்லுறதப் போல ஊருக்குப் போய் ஏதாவது ஒரு சின்ன ·வேலையெண்டாலும் எடுத்துக் கொண்டு இருக்கிறது



தான் மேல்.

கூலி வேலையைச் செய்து கொண்டென்றாலும் ஊர், உறவு சுற்றத்தோட இருக்கிறது போல... இந்த அந்நிய பிரதேசத்தில் இருக்கிறது. வராது.

வேலையை ராஜினாமாச் செய்து கொண்டு ஊருக்கே போவதென்ற முடிவை எடுத்துக் கொண்டான்.

''நிவே'' இந்தக் குழப்பம் ஓரளவிற்குச் சரிவந்தவுடனே வேலய றிசைன் பண்ணிப் போட்டு ஊருக்கே போயிடுவம் நீ கவலப்படாதம்மா...''

ஆறுதல் வார்த்தைகளைக் கூறி சில நிமிடங்கள் கூட கழிந்திருக்காது, 'ஓ' வென்ற இரைச்சலுடன் 'திடுதிடென' சிலர் ஓடி வரும் சத்தம் தெளிவாகவே கேட்கிறது.

மகேந்திரன் மெல்ல எழுந்து நின்று யன்னல் கதவை நகர்த்தி,அதன் இடவினூடாக வெளியே பார்த்தான். இதயம் ஒரு வினாடி துடிக்க மறந்து துடித்தது.

மாநகரமே தீப்பிளம்பாகக் காட்சி யளிக்கின்றது.!

''என்னண்ணா சத்தம்...?''

தணிந்த குரலில் கேட்டாள் நிவேதா. அந்த நேரம் பார்த்தாற் போல் கதவில் யாரோ "கடகட" வென்று தட்டுகிறார்கள்.

யன்னல் கம்பியை இறுக்கிப் பிடித்தபடி, யன்னலின் இடவினூடே உற்று நோக்கினான். வெளியே...கதவின் அருகே தீப்பந்தங்கள்....அலவாங்குகள்.... கத்திகள்.... வாள்கள் .. இரும்புக்கம்பிகள், தடிகள்... பொல்லுகள்.. கற்கள் சகிதம் ஒரு கூட்டமே குழுமியிருந்தது.

இதைக் கண்டதும் அவனுக்குப் பயத்தால் இதயமே காய்ந்து வரண்டு போயிற்று.

நிவே அவனுடைய கையை இறுக்கிப் பிடித்த வண்ணம் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

கணப் பொழுதில்...!

கோடரியின் கூருக்கு இரையான கதவு துண்டு துண்டாகச் சிதறி விழ அக்கூட்டத்தினர் உள்ளே புகுந்து கொண்டனர்.

இது காடையர்களா? அல்லது .. கொள்ளையர்களா சிந்திப்பதற் கிடையில், அக்கூட்டத்திலிருந்த ஒருவன் மின்னல் வேகத்தில் கையில் வைத்திருந்த அலவாங்கினால் அவனை நோக்கி ஓங்கினான். அவன் 'ஆ..' என்று அலறுவதற்கிடையில் மண்டை பிளந்து கொண்டது.

அவன் கண்விழித்துப் பார்த்த பொழுது, அவனருகே அவனுடைய தங்கை நிவேதா கிடந்தாள் - ஆடைகள் சரிந்து விலகிக்கிடக்க கசக்கி எறியப்பட்ட ரோஜா மலராகக் கிடந்தாள்.

அவள் கிடந்த நிலையைக் கண்டதுமே அவனுடைய இதயத்தின் துடிப்புகள் எல்லாம் அடங்கிப் போய் விடும் போல இருந்தது.

தங்கையைப் பார்த்துவிட வேண்டும் என்ற பாசத்துடிப்பு ! தங்கையின் அருகே சென்று பார்ப்பதற்காக உடலை நிமிர்த்தினான் உடல் குருதிச் சகதியில் தூக்க முடியாத வண்ணம் கனத்துக் கிடந்தது.

மெதுவாக உடலை நகர்த்தி... நகர்த்தி... அவளை நெருங்கி அவளுடைய மூக்கினருகே காதை வைத்துப் பார்த்தான். அவளுடைய உடம்பிலிருந்து சுவாசமே வரவில்லை! உடலைப் பலங்கொண்ட மட்டும் அசைத்தான். உடல் உயிரற்று விறைத்துப் போய்க் கிடந்தது.

இருண்ட மனசில் ஏற்றப்படும் ஒரேயொரு கைவிளக்கு. அந்தக் கைவிளக்குக் கூட அணைந்து விட்டது. "ஓ" என்று வானமே அதிரும் படி கத்தினான்... கதறினான். உயிர் மாண்டவர் மீண்டும் உயிர் வரா வண்ணம் கற்சிலையெனக் கிடந்தாள்.

மீண்டும் ... அதே ஓசைகள்! அரவங்கள்! இரைச்சல்கள்!

அவன் வீட்டைச் சுற்று முற்றும் நிமிர்ந்து பார்த்தான். வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டு, வீடு வெறிச் சோடிப்போய்க் கிடந்தது.

தீப்பந்தங்களும் ஆள் அரவங்களும் வீட்டை அண்மித்துக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்கிறது.

இருப்பதனை விட சாவதே மேல் என நினைத்துக் கொண்டு தங்கையை ஒரு தடவை பார்க்கின்றான். காதறுந்து தோடிழந்து... வெறும் மூளியாகவே கிடக்கும் காதுகளுடனும் வெறும் கழுத்துடனும் அவள் பார்க்கும் பார்வை... "அண்ணா, நீ இறக்கவே கூடாது! இனியாவது என்போன்ற கன்னிகள் கற்பிழந்து... உடைமைகளை இழந்து செத்து மடிவதைக் காப்பாற்று! இதுவே நீ எனக்குச் செய்யும் இறுதிக் கிரியை!" என்பது போலத் தென்படவே, எப்படியாவது வாழ வேண்டும். எனக்காக இல்லாவிட்டாலும், எனது தங்கையின் லட்சியத்துக்காகவாவது வாழ வேண்டும் என்ற ஆதங்கம் - ஒரு வித வெறி தலைக்கேறவே மெயின் வீதியால் ஓட ஆரம்பித்தான்.

ஓடிய பாதைகள் எங்கும் எரியும் டயர்களுடன் சேர்ந்து உருகும் மனிதக் கொழுப்புகளின் மணமும் தொடர்ந்து துரத்தியது.

சற்றுத் தூரம் ஓடியதும் திரும்பிப் பார்த்தான்.

அவன் செய்த பாவமோ அல்லது அவனுக்கு வீடு வாடகைக்குக் கொடுத்தவர் செய்த பாவமோ என்னவோ தெரியாது. அவனுடைய வாடகை வீடு எரிந்து கொண்டிருந்தது. அதில் தன் தங்கையின் உயிரற்ற உடலும் கருகிக் கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டு நகரைச் சுற்றும் முற்றும் பார்த்தான். நகரமே எங்கும் இதே தீப் பிழம்பாகக் காட்சியளிக்கின்றது. தீ நாக்குகள் வளர்ந்து கொண்டே சென்றன. வானத்தை நிறைத்துக் கொண்டு கரும்புகைப் படலம் தொங்கியது. இத்தீப் பிழம்பிலும் எத்தனை கன்னிகள் கற்பிழந்து எரிந்து சாம்பலாகின்றனரோ! என்றெண்ணிக் கொண்டு ஓடினான்.. ஓடினான்... ஓடிக் கொண்டேயிருந்தான்.

இறுதியில்....

கால்கள் ஓரிடத்தில் அவனையுமறியாமல் தரித்து நின்றன.

அது - வேறெந்த இடமுமில்லை... தமிழர்களுக்குப் பழக்கப்பட்ட ஒரே இடம். பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டப அகதி முகாம்.

(தொடர்ந்து வரும்)

# தாய்நாட்டின் போராட்டத்துடன் வளர்ச்சி கண்டு மலரும் கலை

எம் நாட்டிலே மண்ணையும் மொழியையும் மீட்டெடுப்பதற்காக இளம் சமுதாயமானது போராட வேண்டியது இன்றியமையாத ஒரு கடமையாக உள்ளது. ஏனெனில் ஒவ்வொரு இனமும் தமக்கென சுதந்திர பூமிஒன்றை அமைப்பதன் மூலம் தான் நிம்மதியாக வாழ முடியும். இதன்பொருட்டே நாமும் புரட்சி கரமான சமூதாயமாக உருப் பெற்று புனித போராட்டப் பாதையிலே அணிவகுத்துச் செல்கின்றோம்.

ஒவ்வொரு இலட்சி யப் போராட்டமானது நிறைவுடன் முன்னெடுத் துச் செல்லப் பட மக்கள் புரட்சி எத்தகைய முக்கியத்துவம் பெற்றுக் கொள்கின்றதோ அதே போன்று போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் மக்களது கலைபண்பாட்டு நிலையும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இவ்வம்சமானது. எமது போராட்டத்தில் புனைப் புடன் திகழ்வதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எமது அன்புத்தலைவர் அவர்கள் கலையும் பண்பாடும் வளம் பெற்று வளர்ச்சியும், உயர்ச்சியும் அடையும் போதே தேசிய இனக்கட் டமைப்பு இறுக்கம் பெறுகி ன்றது என்பதைக் கூறுகின்றார். இதிலிருந்து புரட்சி வீரரான எமது தலைவர் அவர்கள் எந்தளவு தூரத்திற்கு கலைப் பண்பாட்டிற்கு மதிப்பையும் வரவேற்பையும் அழித்து எமது தமிழீழத்திலே போராட்டமின்றி கலையும் பண்பாடுமில்லை.கலையும் பண்பாடும் இல்லாதது எமது போராட்டமும் இல்லை என்ற நிலை உருவாக்கியுள்ளனர் என்பது புரிகின்றது அத்துடன் கலை பற்றியும், ப்ண்பாடு பற்றியும் தனித்தனியான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். அதாவது கலை கலைக்காகவே அல்லாமல் கலை மக்களுக்காகவே படைக்கப்படல் வேண்டும் என்கின்ற கருத்து அதில் ஒன்றாகும்.

பொதுவாக நோக்குவோமானால் கலைப்படைப்புக்கள் யாவும் மக்களிடத்தில் பலவித பயனுள்ள உணர்வுகளை உயர்த்துவதற்காக அமைய வேண்டும். எமது ம்க்களிடையே விழிப்புணர்வையும்

**சி.ஜதா**

விடுதலையுணர்வையும் தூண்டி விடும் கலையே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும். கலைப்படைப்புக்களானது எமது போராட்ட வாழ்க்கையின் உண்மைகளையும், எமது சமூக வாழ்க்கையில் சகல நிகழ்வில் ஊடுருவி நிற்கும் இன ஒடுக்கு முறையின் கொடுரத்தினை யும் சித்திகரிப்பவர்களாக அமைய வேண்டும்.

அடுத்து எமது போராட்டச் சிறப்பினைப் பார்க்கும் போது உலகத் தவரால் தனித்துவமான கருத்தில் கொள்ளப்ப டுவதாக அதாவது தமிழர் பண்பாடு முதலிடம் வகித்துள்ளது. இன்னிலைக்குக் காரணம் எமது தலைவர் தான் ஏனெனில் போராட்டம் மட்டுமே தான் என்ற நிலையில் இல்லாது, போராட்டத்தை எந்தளவிற்கு வளர்த்து வருகின்றோமோ அதே நிலைக்கு எமது பண்பாட்டையும் வளர்க்க ஊக்கமளித்தும் வருகின்றார். மேலும் கலைப்படைப்புக்கள் எவ்வாறு போராட்டக் காலத்தில் உதவுகின்றது என்பதனைப் பார்ப்போமானால்,



தமிழீழப்பிரதேசம் எங்கள் போராட்டம் சம்மந்தமான நிகழ் வுகளிலும் நினைவு நாள் நிகழ்வுகளிலும் நிச்சயமாக ஒரு கலை நிகழ்வு அமையப் பெறும். இதன் போது அக்கலை நிகழ்வுகள் மக்களின் தெளிவான உறுதி உருவாக ஏதுவாக இருக்கின்றது. இதனுடன் தற்காலச் சூழலிலே போர்க்கால கருத்தரங்குகளில் எமது நிலைமையையும், இராணுவக் கொடுமை களையும் சித்திகரிக்கும் நிகழ்வுகளையாக்கும் போது மனதில் சிறை ப்பட்டிருக்கும் போராட்ட உணர்வுகளை கிளர்ந்தெளச் செய்து மக்களின் சிந்தனை யோட்டத்தை இப்புனிதப் போரின் பக்கம் திருப்பக்கூடியதாக உள்ளது. மற்றும் எமது மக்களுக்கு பூரண விளக்கமற்ற போராட்டம் பற்றிய ஆரம்பம், வளர்ச்சி போன்றவற்றை பேச்சுக்கள் மூலம் தெளிவாக்குவதைக் காட்டிலும் காட்சி கொண்ட நிகழ்வுகளினால் தெளிவாக விளக்கச் செய்யலாம்.

இத்துடன் எமது விடுதலை இயக்கமானது தன்னகத்தே கொண்டுள்ள பல பிரிவுகளும் கலை பண்பாட்டுக் கழகம் என்ற பிரிவைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி எமது போராளிச் செல்வங்க ளிடையே பல புதிய போரா ளிக் கலைஞர்கள் உருவா கிக் கொண்டிருக்கின் றார்கள். பல இசையின் ராகத்தில் ஆடற் கலையில், பாடற்கலையில், அழகான கைக்கலை எனப் பல்லா யிரம் கலை வளர்ச்சிகள் இதைப்பார்க்கையில் எமது தேசியத் தலைவர் அவர்களின் பெருமை மிக்க கலைப்பற்றை வெளியுலகும் அறிந்து வரவேற்பதை அறியக் கூடியதாக உள்ளது. ''கலையின்பமே எங்கள் நிலையின்பம''


---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 09-12-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-22**
**தமிழ் அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -22




### இடமிருந்து வலம்

01. முதலாளித்துவத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான போராட்டம் இது சார்ந்த போராட்டம் என அழைக்கப்படும்.
05. இந்தியாவின் பண்டைய பெயர். இப்பெயரில் ஒரு காவியமும் உண்டு.
07. மிகவும், பல போன்ற சொற்களில் பதம் தரும் ஒரு சொல்.
09. செல்வந்தர்களை இது படைத்தவர்கள் என்று கூறுவோம்.
10. விட்டு விட்டுப் பொழியும் மழை ஒவ்வொரு முறையும் பொழிவதைக் குறிக்கும் சொல். (குழம்பியுள்ளது)
12. கணவன் மனைவியைச் சேர்த்துக் குறிக்கும் சொல்.
15. உடலின் அழகைக் கெடுக்கும் சரும நோய்களில் ஒன்று. (திரும்பிவருவதுடன் முதலெழுத்தையும் இழந்து வருகிறது)
16. சுகநலம், ஆற்றல், மாட்சிமை எனப் பல பொருள் படும் ஒரு சொல்.
17. அதிகாலைப் பொழுதை இப்படியும் அழைக்கலாம். (திரும்பியுள்ளது)
18. இறுதி எழுத்தைக் கொஞ்சம் மாற்றினால் நம் தலை எழுத்தை மாற்றும் ஒன்று வெளிப்படும்.

### மேலிருந்து கீழ்

01. எங்கள் தங்கத் தலைவர் அவதரித்த மண்
02. வெற்றிலையோடு சேர்த்துக் குதப்புவது. (இறுதி எழுத்தையும் இழந்து தலைகீழாயும் நிற்கின்றது)
03. வஞ்சகம், களவு எனும் பொருள்படும் ஒரு சொல்.
04. நூறு என்பதை இப்படியும் சொல்லலாம். (தலைகீழ்)
06.உறுதி. நடு எழுத்து இல்லாததினால் உறுதியில்லாமல் தலைகீழாய் நிற்கிறது.
08.சீனிக்குள் தண்ணீரை விட்டுக் கொதிக்க வைக்க வருவது. (தலைகீழ்)
11. விஷ்ணுவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் (தலைகீழ்)
13. பாடலொன்றில் திரும்பத் திரும்ப வருவது.
14. எத்தனை கோடி பணமிருந்தும் சிலருக்குக் கிடைக்காத ஒன்று (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 19ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01.ஏகலைவன்
04.கானகம்
06.சள்ளல்
07.தங்கம்
09.தம்
10.தோகை
11.கிரகம்
13.அம்(மி)
14.பணம்
15.இலை
16.தடம்

**மேலிருந்து கீழ்**

01.ஏகாந்தம்
02.கலைகள்
03.வம்சம்
05.மல்லிகை
08.இங்கிதம்
10.தோரணம்
12.படம்
13.அலை

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

சி.விஜயரூபா
இல:280, விஜயவாசா''
நாவற்குடா மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. திருமதி. ஜெயந்தி உதயகுமார் (ஆசிரியை), மட்/சந்திவெளி சி.வி.வி
02. செல்வி. சி. கலைமதி வைத்தியசாலை வீதி, மண்டூர்- 03.
03. ஜதுஸ்ரிகா- சங்கரலிங்கம் இலக்கம்- 27,3ம் குறுக்குத்தெரு மட்டக்களப்பு.
04. எஸ். விமலா மாவட்ட வைத்தியசாலை திருக்கோவில்.
05. தங்கராஜா நாகேந்திரன் பாரதி வீதி, கோயில்போரதீவு.
06. செ. யோகாந்தன், இல: 74. பிராதன வீதி, நித்தியபுரி திருகோணமலை.
07. மு. சந்திரசேகரம், விபுலானந்தா வீதி, காரைதீவு- 01
08. க. கமால்தீன் புன்னைக்குடா வீதி, ஏறாவூர்.
09. பொ. யுவராஜ் வால் கட்டு, கொக்கட்டிச்சோலை.
10. வை. அருளப்பன் (ஆசிரியர்) தளங்குடா சி.வி வித்தியாலம்

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

## முன்னர் எதிரெதிர் முகாம்களில் இருந்த இந்தியாவும் பாகிஸ்தானும் இன்று ஒரே முகாமிற்குள்

- சண் தவராசா -

"பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்ற அருமையான பழமொழியொன்று தமிழில் உண்டு. இந்த அருமையான பழமொழியை மெய்ப்பிப்பதைப் போலவே இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சிரியாவில் வைத்து வெளியிட்ட கருத்து அமைந்திருந்தது. அவர் தனது விஜயத்தின் போது இந்தியா இஸ்ரேலுடன் கொண்டுள்ள நட்பு தொடர்பாக அரபு உலகம் கவலை கொள்ளத் தேவையில்லை. அரபு உலகிற்கு ஆபத்து ஏற்படும் போது இந்தியா அரபு நாடுகளுக்கு தனது முழு ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்திருந்தார்.

"பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற பழமொழியின் அர்த்தம் தற்பொழுது வாசகர்களுக்குப் புரிந்திருக்கும். இவ்வாறு செய்யப்படுவதுதான் இராஜதந்திரம் என வல்லரசு நாடுகள் கூறிக்கொண்டே இருக்கின்றன. ஏனைய வல்லரசுகளும் அதனை ஆமோதித்தே வருகின்றன.

இந்த வேளையிலே வாஜ்பாய் அவர்களின் கூற்று நடைமுறைச் சாத்தியமானது என ஒரு கணம் சிந்தித்தால் பதிலென்னவோ இல்லையென்று தான் வரப்போகிறது.

இந்தியாவிலேயே சோவியத் முகாமில் இருந்தவரை இந்தியா அரபுலகின் நண்பனாகத்தான் இருந்தது. 67 இல் நடைபெற்ற ஏழுநாள் யுத்தத்தின் போது இஸ்ரேலுக்கு எதிராக அரபு உலகுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தந்த நாடு இந்தியா. பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கைக்கு ஆரம்பம் முதலே காத்திரமாகக் குரல்கொடுத்து வந்த நாடு இந்தியா.

ஐக்கிய நாடுகள் சபையில், இஸ்ரேலுக்கு எதிராக எத்தனையோ பிரேரணைகள் இந்தியாவைக் கொண்டு வந்து சமர்ப்பித்து நிறை வேற்றியுள்ளது. ஏனைய நாடுகள் சமர்ப்பித்த பிரேரணைகளுக்கு ஆதரவும் வழங்கியும்.

பஞ்சசீலக் கோட்பாடுகளை முன்வைத்து ஆசியஜோதி என்ற பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்ட ஜவஹர்லால் நேரு அணிசேராக் கொள்கைக்கு உத்வேகம் வழங்கிய அவர், பின்னாளில் அவர் மகள் இந்திரா என இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எப்போதும் ஏகாதிபத்திய எதிர்ப்புடையதாகவே இருந்து வந்தள்ளது.

ஆனால் அதே இந்தியாவில் வெளியுறவுக் கொள்கை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. சோவியத் யூனியனில் உடைவு சுயபொருளாதார விருத்திக் கொள்கையிலிருந்து திறந்த பொரளாதாரக் கொள்கைக்கு மாறியமை உலக மயமாதல் எனப் பல்வேறு காரணங்கள் இக் கொள்கை மாற்றத்துக்குக் காரணமாக இருந்த போதிலும் பிற்போக்குத் தனமான அடிப்படை மாற்றம் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாததொன்றே.

தேசபக்தி மிகுந்த முற்போக்குச் சிந்தனையுடனான கொள்கை வகுப்பாளர்கள் டில்லியின் சவுத்புளக் பகுதியில் குறைந்தது புதிய தலைமுறை இராஜதந்திரிகள் இப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளமையும் இந்தியாவின் இக்கொள்கை மாற்றத்திற்கு மற்றொரு காரணமாகக் கொள்ளப்படலாம்.

அமெரிக்கா என்றுமே இந்தியாவின் முற்போக்குப் பாத்திரத்தைச் சகித்துக் கொண்டிருக்கவில்லை. அந்த நிலையை மாற்றியமைக்க தொடர்சியாக முயற்சிகளை மேற்கொண்டு ஈற்றில் வெற்றியும் கண்டுவிட்டது. இன்று இந்தியா சர்வதேச பல்கூட்டுக் கம்பனிகளின் தாளத்திற்கு ஏற்ப ஆடும் நிலையிலேயே உள்ளது.

இந்தப் பின்னணியில் இறுதியாக பாகிஸ்தானால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கவனத்தில் கொள்ளத்தக்கதாக மாறியுள்ளது. இந்தியாவுடனான உறவை மேம்படுத்தும் நோக்குடன் இருநாடுகளுக்குமிடையிலான எல்லைக்கோடு நெடுகிலும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

யுத்தம் நிறுத்தப்படுவது அதனால் பெறுமதிமிக்க மனித உயிர்கள் காப்பாற்றப்படுவதுடன் பொருட் செலவு தவிர்க்கப்படுவதும் நல்லதொரு விடயம்.

ஆனால் இங்கு நோக்கத்தக்க விடயம் என்னவெனில் முன்னர்எதிரெதிர் முகாம்களில் இருந்த இந்தியாவும் பாகிஸ்தானும் இன்று ஒரே முகாமிற்குள் வந்துள்ளமையே. இதனால் கூட அவை தமக்குள் சமரசம் செய்யும் முடிவிற்கு வந்திருக்கலாம்.



அமெரிக்காவுடன் கொண்டுள்ள புதிய நட்புக் காரணமாக தனது பரமவைரியான பாகிஸ்தானுடனேயே சமரசம் செய்யமுன் வந்துள்ள இந்தியா இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணிக்கொண்டு அரபுலகிற்கு ஆபத்தில் கைகொடுப்பது என்பது 21ம் நூற்றாண்டின் அதிசிறந்த ஜோக் அன்றி வேறெதுவுமில்லை.

---

# ஆஸியுடனான தொடர் மறக்க முடியாத தொடராக இருக்கும்




ஆஸ்திரேலியா வந்துள்ள இந்திய அணி சில இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டுள்ளதாகவும், அதை அடையும் உறுதியுடன் இருப்பதாகவும் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

4 டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நேற்று தனது முதல் பயிற்சி ஆட்டத்தைத் துவக்கியது. இரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் துவங்குகின்றது. இந்தத் தொடரில் இந்தியா படுதோல்வி அடையும் என்று விமர்சனங்கள் கிளம்பி இருந்தாலும், இந்தத் தொடரில் இந்திய அணி நிர்ணயித்துள்ள இலக்குகளை அடையும் விடயத்தில் மிகவும் ஆர்வமுடன், ஆவலுடன் இருப்பதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சச்சின் டெண்டுகர் தெரிவிக்கையில் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? என்பதைப் பற்றி நான் ஆலோசிக்க விரும்பவில்லை. எங்களுடைய மனதில் என்ன இருக்கிறதோ, அது பற்றி நாங்கள் தீவிர சிந்தனையில் இருக்கிறோம். சிறப்பாக விளையாடி, ரசிகர்களை மகிழ்விக்கவும், சவாலான விளையாட்டைக் கொடுக்கவும் உறுதியுடன் இருக்கின்றோம். எங்களுக்கு என சில திட்டங்களை வகுத்துக் கொண்டு இருக்கிறோம். அணிக்கு என சில இலக்குகளை நிர்ணயித்து உள்ளோம். அந்த இலக்கை அடையும் ஆவலுடன் இருக்கிறோமா என்று கூறினார்.

பௌன்சர் பந்துகளை எதிர்த்து விளையாடுவதில் இந்திய அணி வீரர்கள் சிறப்பானவர்கள் இல்லை என்ற கருத்தில் தனக்கு உடன்பாடு இல்லை என்று கூறிய சச்சின், இது குறித்து கூறுகையில் கடந்த காலத்தைக் கருத்தில் வைத்துக் கொண்டு, இப்போதும் அதே மாதிரி நடக்கும் என்று நினைத்து விடக்கூடாது. எல்லாவற்றிற்கும் திருப்புமுனை உண்டு என்று கூறினார்.

3-நாள் பயிற்சி ஆட்டத்தில் நேற்றைய முதல்நாள் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ரமேஷ், ரன் குவிக்காத ஷேவாக் இருவரையும் டெஸ்ட் தொடரில் ஓபனர்களாக களம் இறக்க சச்சின் விருப்பம் தெரிவித்துள்ளார். இது குறித்து சச்சின் கூறுகையில், "ஷேவாக் ஒரு அபாயகரமான வீரர். போட்டியில் திருப்புமுனை ஏற்படுத்தும் திறமை உடைய வீரர் ஷேவாக். மிகப்பெரிய இன்னிங்சை அவரால் கொடுக்க முடியும். மேட்ச்-வின்னிங் இன்னிங்சை கூட அவரால் தரமுடியும். கடந்த காலங்களில் இதை ஷேவாக் நிருபித்தும் இருக்கிறார். இந்த தொடரில் ஷேவாக்கிடம் இருந்து அபார திறமை வெளிப்படும் என்று நம்புகிறேன். நேற்றைய ஆட்டத்தில் சிறப்பாக விளையாடியதன் மூலம் ரமேஷ் இந்த டெஸ்ட் தொடரில் தனக்கென தனிஇடம் பிடிக்கும் நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அதற்காக ரமேஷ் தான் ஓபனராக விளையாட வேண்டும் என்று நான் கூறவில்லை. இது பயிற்சியாளர், கேப்டனின் முடிவைப் பொறுத்தது என்று கூறினார்.

பயிற்சி ஆட்டத்தில் நேற்றைய தன்னுடைய ஆட்டம் குறித்து சச்சின் கூறுகையில் முதலில் இந்த விக்கெட் மிகவும் ஸ்லோவாக இருந்தது. ஆனால் உணவு இடைவேளைக்குப் பின்னர் ஆடுகளத்தின் தன்மை மாறியது. அருமையான ஷாட்களை அடிக்கும் வாய்ப்பு கிடைத்தது என்று கூறினார்.

மேலும் சச்சின் கூறுகையில் நேற்றைய ஆட்டம் சிறப்பாக இருந்தது. அனுபவித்து, விரும்பி விளையாடினேன். மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் எனக்கு மறக்கமுடியாத நினைவுகள் உண்டு. கடைசியாக நான் இங்கு பேட் செய்த போது சதம் அடித்து இருந்தேன். இதே பார்மை தொடர்வேன். இந்தச் சீசனை துவக்கும் முன்பு சில அருமையான உள்நாட்டுப் போட்டிகளில் விளையாடி உள்ளோம். இது மிகவும் உதவியாக உள்ளது என்று கூறினார்.

இந்தத் தொடருக்காக தனது தனிப்பட்ட இலக்குகள் குறித்து சச்சின் கூறுகையில் தனிப்பட்ட இலக்குகள் என்று ஏதுமில்லை. களம் இறங்கி அணிக்காகச் சிறப்பாக விளையாட வேண்டும். அவ்வளவு தான். தனிப்பட்ட முறையில் இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு நெருக்கடியை ஏற்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. ஓட்டு மொத்தத்தில் இந்தத் தொடர் மறக்க முடியாத தொடராக இருக்கும் என்று கூறினார்.

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

### தமிழாராய்ச்சி மாநாடு (வேறு)

வட்டுக் கோட்டைத் தீர்மானம்

செந்தமிழ் ஈழத் தந்தை
செல்வநாயகனின் முன்னே
குந்தினர் தலைவரெல்லாம்
கொள்கைகள் வகுக்கவென்றே
எந்தவாறாயினும் எம் ஈழ நாடதனை
எங்கள் சொந்த நாடாக்கி அ∴தில்
சுதந்திரம் பெறுவோமென்றே

ஆக்கியோர் தீர்மானத்தை அவனியில்
விடுத்து அ∴தே
நோய்க்கனி மருந்தாம்
என்றார்நொடியினில் அன்னார் பின்னே
தூக்கினார் கொடியை மக்கள்
துயரொழிந்திடற்காய்த் தங்கள்
வாக்கினைத் தருவதல்லலால் வழிவகை
எதையும் காணார்

இத்தகு நிலையில் மக்கள் இருக்கையில்
எம்.பி மார்கள்
வித்தகப் பேச்சினாலும் மேவிய
செல்வத்தாலும்
சொத்தெனப் பறித்தார் வாக்கை. சுகந்தரு
நாடாள் மன்றில் பித்துற அமர்ந்தார்
அன்றிப் பிறிதொரு வழியும் காணார்

செருக்குடன் கொழும்பில் நின்று
செப்பலும் தமிழர் வீரம்
செருப்படி கிடைக்க ஓடித்தப்பலும்
என்றிவ்வாறாய்
உருப்படியாகச் செய்ய ஒன்றுமே
இலராய்த்தங்கள்
வரும்படி தன்னைக் கூட்ட வழிவகை
தேடி நின்றார்

தளர் உடற் தலைவன் தந்தை தமிழ்
மகன் செல்வா மட்டும்
உளமதில் உற்றதுன்ப உணர்வினிற்
தவித்தான் - ஆனால்
களமதில் வில்லங்கஞ் சேர் காரியமான
ஈழத் தளமதை அமைக்க வேண்டித்
தளர்விலும் உழைக்கலுற்றான்.

*எஸ்.கருணானந்தராஜா*
*(யுகசாரதி)*

## இறக்கவும் தயங்கேன்

பிரிவுக்காக நீ அழுவதனால்
நான் பிரியவேமாட்டேன்!
உறவினால்நீ சிரிப்பதானால்
உனக்காக அதை செய்வேன்!
அன்புக்காக நீ ஏங்கினால்
அள்ளிப் பருகிடுவேன்!
ஊட்டி விட நீ கேட்டால்
உணவிலும் விருப்பம் கொள்வேன்!
வார்த்தைகள் உனை தாக்கிடுமானால்
ஊமையாய் வாழ்ந்திடுவேன்!
பார்வைகள் தாக்குமானால்
குருடனாய் இருந்திடுவேன்!
என் இறப்புத்தான் உன்னை
வாழவைக்குமானால்
அதற்கும் தயங்கமாட்டேன்.

*பா.பரந்தரன், கன்னன்குடா*

## நேரிய வழியில் நிற்போம்.!

நிலையான கவிதைகள் - பெரும்
கருத்துக்கள் சுமக்கும்
நிறைவற்ற கவிதைகள்- பெரும்
நிகழ்வெல்லாம் எதிர்க்கும்!

கறை படிந்த மேகங்கள்-எம்
காலத்தை மறைக்கும்
முகில் கருகிப் பெய்தால்-மழை
நாடெல்லாம் செழிக்கும்!

பள்ளிப் பருவம்-எமக்கு
பக்குவத்தை உணர்த்தும்
துள்ளித் திரிந்தால்-பெரும் வயதில்
சோகத்தைக்கொடுக்கும்!

எள்ளி நகையாடும்-நமது
இளைய சமுதாயம்
சொல்லி என்ன கேட்கும்-கொடும்
சோதனைதான் வாட்டும்!

நீதி நியாயம் நேரிய வழி கண்டு
சாதி சமயம் சமத்துவம் காத்து
பாதி வயதிலே பழிகளைக் கடந்து
நேரிய வழியில் நின்று நாம்
வாழ்வோம்.

ஜே.எஸ்.கே.நாதன்
முனைக்காடு தெற்கு

## விடிவை நாளையே காண்போம்!

வங்கக் கடல் ஒலி சூழும்
தங்கத் தமிழீழம், நாங்கள்
வாழ்ந்த பரம்பரை மண்ணிது!
தாழ்ந்து கிடப்பது மானமா?

வீரம் விளைந்திட்ட மண்ணிது
வீணருக்கா இங்கு இடமிது
காரணம் காட்டுவான் ஆயிரம்
கற்பனையே அது வேறில்லை
சிங்களம் என்றொரு இராணுவம்
சித்திரவதைக்கே அவன் குணம்
துப்பாக்கி ஏந்தினான் சோத்துக்கு
துயரிழைத்தான் தமிழ் இனத்திற்கு

தாயகம் காத்திடச் சேருவோம்
தமிழ் மானத்தை உயர்த்திட
நாடுவோம்
விடுதலைப்புலியுடன் இணைகுவோம்
விடிவினை நாளையே காணுவோம்.

கானா மானா, நாவற்காடு.

## அலை மோதும் காட்சி!

மாவீரர் துயில்கின்ற மதில் சூழ கல்லறையில் – கூடி
மனங்கொண்டு சனம் நின்று வலம் வந்து நிரையில்
பூ வானம் தான் பெய்ய புகழ் சொல்லித் தரையில் –
மாண்ட
புயல் வீரர் தமக்கஞ்சல் புவி செய்ய விரைவில் !
துரை மன்னர் பிரபாகரன் ஏற்றத் தீபம் – அங்கு
துணை வந்து இணைந்தோரின் துயர் சொல்ல
மௌனம்
உரையாற்ற விரைந்தங்கு கருத்தேற்கப் புவனம் –
இந்த
உயர் வானில் தவழ்ந்தெங்கும் ஒலிக்கும் சொல்
வசனம்!

உலகெங்கும் கலை வல்ல தலைவர் சொல்லேற்ற –
அங்கு
உயர் வான தொலைக்காட்சி தனை நன்கு பாக்க
நிலை நின்று பிரபாகரன் பேசித் தீர்க்க – பக்கம்
நிலைகொள்வோர் அலை மோதும் நிகழ்விங்கு
கேட்க!

வினாயகமூர்த்தி, கன்னன்குடா.

## நாங்களும் விழித்திருந்தால் மாவீரரே .



நீங்கள் விழித்திருந்த போது
நாங்கள் உறங்கி விட்டோம்
நாங்கள் விழித்துக் கொண்ட போதோ
நீங்கள் உறங்கி விட்டீர்கள்!

உங்களுடன் நாங்களும்
விழித்திருந்தால்
நீங்கள் மீளா உறக்கம்கொண்டிருக்க
மாட்டீர்கள்

*நடராஜா குருஷாமினி*
*மட்டக்களப்பு.*

# தேடலும் பகிர்வும் 17

வடதமிழீழத்திலிருந்து 1990 களிலிருந்து குறிப்பிடத்தக்க பருவ வெளியீடுகள் பல வெளியாகி வந்தன. சிறிலங்கா அரசின் கடுமையான பொருண்மியத் தடைகளுக்கு மத்தியிலும், எண்ணற்ற பல்துறைசார் அச்சூடக வெளியீடுகளும் காத்திரமான படைப்புக்களைத் தாங்கி வெளியாகின. 1995 அக்டோபர் யாழ்.வலிகாமம் பாரிய மனித இடப்பெயர்வின் பின்பு சில தடங்கலுக்கு உள்ளாக, இன்னும் பல இன்றும் திறம்பட வெளியாகின்றன. பரவலான வாசிப்பிற்குக் கிடைகாது விடினும், அவசியமான பதிவுகளைத் தாங்கி வெளியீடுகள் வந்துகொண்டே இருக்கின்றன.

வடபுலம் சென்று வந்த நண்பனின் தாயார் ஒருவர் மூலம் அண்மையில் ''நாற்று'' எனும் சஞ்சிகையைப் பார்க்கக் கிடைத்தது. இரண்டாம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு எனும் முகவரியைக் கொண்டியங்கும் ''தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்'' எனும் அமைப்பு இதனை வெளியிடுகின்றது. 76 பக்கங்களைக் கொண்டு வெளியாகியுள்ள இதன் இதழ்-22(புரட்டாதி) இன் விலை ரூபா 20 மட்டுமே என்பது பிரமிக்க வைக்கிறது. பயனுறுதி வாய்ந்த பல்வேறு படைப்புக்களைக் கொண்டிருந்த இவ்விதழில் இடம்பெற்ற ''மீள் எழுப்பும் கட்டடங்களும் சிதைவுறும் சமூக விழுமியங்களும்'' என்ற ''கொற்றவை'' யின் கட்டுரையிலிருந்து சில வரிகளை மட்டும் சிந்தித்து உணர்வதற்காக முதலில் நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம்.

''இறுக்கமான சட்ட நடைமுறைகளோ அன்றி, கண்டிப்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளோ இல்லாத சமுதாயத்தில் மனித விழுமியங்கள் அதன் நெகிழ்வுப் போக்கிலேயே காணப்படும். இதனை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நேரில் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய இருந்தன. நீண்ட காலங்களாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக இருக்கின்ற தமிழர் பிரதேசங்கள் முன்பு இருந்ததைப் போலன்றி மிக மோசமான சமூக சீரழிவுகளைக் கொண்டு விளங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது.

''முன்பு இது இராணுவத்தின் திட்டமிட்ட செயலாகவே இருந்தது. தமிழர்களின் வாழ்வியல் கலாசாரத்தைச் சீரழிக்கும் திட்மிட்ட செயலாகவே இது இருந்தது''. இன்றும் இது தொடர்கின்றது.

''சமாதானச் சூழல் மீளக் கட்டி எழுப்பப்படும் நகரங்கள், பட்டினங்களால் தமிழர்களின் வாழ்வு, அதன் ஒழுங்குகள் கட்டியெழுப்பப்படுமா? ஸ்ரீலங்கா இராணுவப் பிடிக்குள் இருக்கும் மக்களின் பொருளாதாரங்கள் மேன்மையுறும் தருணம் எமது கலாசாரம் பேணப்படுமா? ஸ்ரீலங்காவின் சட்டங்கள் லஞ்சங்களாலும், ஊழல்களாலும் செயலிழந்து போவது ஒரு பக்கம். இராணுவமே இவற்றிக்குத் துணை போவதால், எவ்வாறு இவற்றைக் களைவது என்பதே மறுபக்கத்தின் உண்மையான நிலைப்பாடாய் இருக்கின்றது.''

பல்வேறு பெயர்களிலும், பல்வேறு தளங்களிலும் நின்று சமூகப் பிரக்ஞையுடன் செயற்படும் தமிழீழத் ''தாயகப் படைப்பாளி'' யின் வரிகளை உரத்துச் சிந்தித்தே ஆக வேண்டும் என்பதைக் காலம் குறிப்பு உணர்த்தி நிற்கின்றது.

*****

''உயிரை விதைத்தோம் அறுவடை இதுதானா?'' என்று முன் அட்டையிலும், ''சந்தையாகின்றதா தமிழீழம்?'' என்று பின்அட்டையிலும் கவலைத் தொனி தெரிவித்து புரட்டாதி -ஐப்பசி,2003 க்குரிய ''வெளிச்சம்'' - கலை, இலக்கிய சமூக இதழ் வெளியாகி இருக்கின்றது. கொழும்பு கலைக் கூடலுக்குச் சென்று வந்த சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் இதனைப் பார்க்கத் தந்திருந்தார். அக்கறையுடைய அவருக்கு நன்றி. ''வெளிச்சம்'' -இதழ் 83ல் இடம்பிடித்த ''திசைகள் வெளுக்கின்றன'' என்ற கவிதையை நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம்.''துவாரகன்''என்பவர் இக்கவிதையை எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

" இப்போதுதான் திசைகள் வெளுக்கின்றன
இதுவரை எங்கள் திசையை
திரைபோட்டு மறைத்தனர்.
மலை முகடுகளைக் காட்டி மறக்கடிக்க முயன்றனர்.
போகும் திசையெல்லாம;"
அகழிகளையும் நெருப்பாற்றையும் ஆக்கினர்.
ஆனாலும் நாம் நடந்தோம்.
எங்கள் சூரியன் வழிகாட்ட
இன்னும் நடந்தோம்.

துயரமலைகளைச் சுமந்து நடந்தோம்.
சிதைந்து போன கூடுகளைச் செப்பனிட்டு நடந்தோம்.
கரைந்து போன வாழ்வை கண்களில் ஏந்தி நடந்தோம்.
எல்லாமே எப்படிச் சாத்தியம்?
உப்பளத்தில் உயிரை விட்டு;
கடலிலே காற்றுடன் கரைந்து;
வெட்ட வெளியிலே வெஞ்சமர் புரிந்து
எல்லைகளை உயிர்களால் தகர்த்து,
எங்கள் செல்வங்கள்
எங்கள் பாதையைச் செப்பனிட்டனர்.

எல்லாமே;எங்களின் ஜீவ ஓட்டத்திற்காக!
எங்கள் பிஞ்சுகளின் வாழ்வுக்காக!
இறுதியில், இந்த மண்ணின் துடிப்பிற்காக
அது வரை நாம் நடப்போம்
எங்கள் திசைகள் வெளுக்கும் வரை நடப்போம்.
யாரும் திரைபோட்டு மறைக்க முடியாது"

**தமிழீழத்தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிருந்து:-**

'' நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகின்றோம். அதேவேளை, சமூகவாழ்விற்கு ஆதாரமான அமைப்புக்கள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே இரு முனைகளில், ஒரே வேளையில் போராட வேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்''.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடாத்திய தமிழீழப் பொதுக்கல்விச் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி தலைவர் அவர்கள் 13.02.1993ல் வெளியிட்ட அறிக்கையிலிருந்து நன்றியுடன் இக்கருத்து பகிரப்படுகிறது.



## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

# கடலன்னையின் பெண்குழந்தை




கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம் ''என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கிறாயா''? என்று கேட்டார். தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது. ''உங்கட அன்பும் அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்'', தாயை நேசிப்பதையும் விட அதற்கு மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள் தான் கரும்புலிகள்.

உயர உயர அலைகளை வீசியெறியும் கடலுடன் நெருங்கிய நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை ஒரே வெண்மணல் பிரதேசம் சாதாரணமாக எந்த ஒரு இளம் பெண்ணுக்கும் இந்த வெண்மணற் பரப்பைப் பார்த்தால் தோழியருடன் ஓடிப்பிடித்து விளையாடத் தோன்றும் நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம் ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன் அந்த மக்களின் நிலை பற்றித் தமக்குள் பேசிக் கொண்டார்கள். அங்கயற்கண்ணியின் மனம் இறுப் பாறையானது ''இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்.''

அந்த நிமிடத்திலேயே மன தளவில் அவள் ஒரு கரும்புலியானல் ஸ்ரீலங்கா கடற்படையின் கப்பல் ஒன்றை கரும்புலித்தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும். என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழ வேரோடியிருக்கவேணும்.

தொடர்ந்தும் எமது மக்கள் சிறீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிவருவதும், அன்று முழுவதும் ( வருமானம் இல்லாததால்) ஒருவேளை கஞ்சிகூடக்குடிக்க வழியில்லாமல் பசியுடன் அழும் தம்குழந்தைகளைச் சமாதானம் பண்ணமுடியாமல் தமக்குள்ளேயே கண்ணீர் விடும் ஏழைத்தாய்களையும், ஏழைத் தந்தைகளையும் அடிக்கடி காண நேர்ந்த போதெல்லாம், தான் எடுத்த முடிவில் மேலும் உறுதி பெற்றாள் அவள்.

தான் ஒரு கரும்புலியாகிப் போக விரும்புவதைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினாள். சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல் மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக் கடந்து விட்டாள். பொறுப் பாளர்களுக்கு அவள்மேல் என்னவென்று சொல்லமுடியாத ஒரு பிரியம். கடற்கரும் புலிகளுக்குரிய பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து அவள், அந்த கடுமையான பயிற்சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே திருப்தியைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில். நாற்பத்தைந்து அடி ஆழங்கொண்ட நீர்ப்பரப்பில் நிலை கொண்டிருந்த வடபகுதித் தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்கமுடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிகளுக்குமே சந்தேகம் இருக்க வில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன், எடையைக் கொள்ளக்கூடியதும் 326.04 அடி நீளமும்- 51.02 அடி அகலமும் கொண்டதும் அதிசக்தி வாய்ந்த ராடர்கள் பொருத் தப்பட்டதுமான நீரில் மிதக்கும் நடமாடும் தலைமையக் கடற்கரைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவில் கூடநினைத்திருக்க வில்லை என்பது பரிபூரண உண்மை.

கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம் இயல்பாகவே ஆளுமைத்தன்மை இருந்தது. ஆரம்பத் திலிருந்து அவள் குழுத் தலைவியாகவே இருந்து வந்தாள். கடற்புலிகளின் பெண், ஆண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தாள். விளையாட்டிலே கெட்டிக்காரியாக இருந்தாள்.

ஆனால் வீட்டிலிருக்கும் வரை இதற்கு நேர்மாறான இயல்பைக் கொண்டிருந்தாள்.

இரவிலே தனியாக வெளியே போகமாட்டாள். எதற்கும் அம்மாவின் துணை வேண்டும். அவளுக்கு என்று தான் ஒரு விடுதலைப்புலியாக வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டாளோ! அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது.

லெப். கேணல் பாமாவுக்கும், மேஜர் சுகன்யாவுக்கும் இவளை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவரிடமும்தான் அவள் நீண்டகாலம் நின்றிருக்கின்றாள். வரலாற்று புகழ்மிக்க ''தவளை நடவடிக்கை'' யின் போது இவள் லெப். கேணல் பாமாவின் குழுவில் ஒருத்தியாகக் கடற் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தாள். அவளது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப்பையுமே அவளிடம் நம்பிக் கொடுக்கலாம் என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்திவிட்டிருந்தாள். இயக்கத்தோடு இணைந்த பின்னர் ஒரு முறை இவள் விடு முறையிலே வீடு சென்றிருந்தாள். தாயும், தந்தையும் சகோதரர்களும் காட்டிய பாசத்திலே நனைந்தவள் நீங்களெல்லாரும் நல்லாப்படிக்கவேணும், படிச்சு முன்னுக்கு வரவேணும், என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாளாம்.

''நான் காத்தோட காத்தாப் போய் விடுவன் அம்மா'' என்று தாயிடம் சொன்னாளாம். எதற்காக தன் மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர் தான் அந்த அன்பான அம்மாவால் புரிந்து கொள்ளமுடிந்தது.

''பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிறமாதிரி வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டி வந்த பிள்ளை''என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்துவிட்டாள் அம்மா. எப்படித் தன் மகளால் இப்படியொரு சாதனையைச் செய்யமுடிந்தது என்று தன்னிடமே கேட்டுக்கொள்கின்றாள் அவள். சொந்தவீடு வாசல் காணிகளை வேலணையில் சிங்கள இராணுவத்திடம் இழந்து ஏதிலியாக நிற்கும் அவளால் இரவிலே வெளியே போகும் போது மகளுக்குத் துணைபோன அவளால், தன் மகளின் வீரத்தை ஆச்சரியத்துடன் தான் பார்க்க முடிந்தது.

கரும்புலித்தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தன் தோழிகளிடம், நான் நல்லூரில் திருவிழா நடக்கின்ற நேரந்தான் சாகவேணும். அப்பதான் திருவிழாவில் அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான் என்ர நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சகபெண் போராளிகளுக்கு) அம்மாவால சாப்பாடு குடுக்க ஏலும் என்று அடிக்கடி சொல்வாளாம். அவளின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம் கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. எத்தனைதரம் கேட்டாலும் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார்கள்.

எல்லாம் தயார்.

கடற்புலிகள் மகளிர் படையணி சிறப்புப் தளபதி லெப் கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம், என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கிறாயா? என்று கேட்டார். தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது உங்கட அன்பும் அண்ணையிர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும். தாயை நேசிப்பதையும் விட அதற்குமேலாக தலைவரையும் தன்னைவளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள் தான் கரும்புலிகள்.

அங்கயற்கண்ணியைக் கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள்.

இலக்கை அடிக்காமல் நான் திரும்பமாட்டேன். என்று சொல்லிவிட்டு அங்கயற்கண்ணி விடைபெற்றாள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும். தூரம் வரை அதன் பின்னரும் கண்கள் வலிக்க வலிக்க வெறும் அலைகளைப் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

1994.08.16 அதிகாலை 12.35 மணியளவில் , காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு, எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக்கொண்டிருந்த மக்களின் செவிகளிலே கூட அந்த ஓசை கேட்டதென்றால் காங்கேசன்துறையில் நின்றிருந்த இராணுவத்தினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால் ஸ்ரீலங்கா இராணுவத் தலைமை பரபரப்படைந்தது.

ஆர் பெத்த பிள்ளையோ? எப்பதான் எங்களுக்கும் பிள்ளையளுக்கும் விடியப் போகுதோ? என்ற ஆதங்கத்துடன் கண்கள் கலங்கியவாறு சுவரோடுசாய்ந்து அமர்ந்து விடியும் வரை

விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

''ரைட், கட்டளைக் கப்பல் அவுட்'' என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டாலும் அங்கயற்கண்ணியின் நினைவு எல்லோர் மனங்களிலும் மோதியது. போராளிகள் பரபரப்படைந்தனர்.

சீறியெழுந்த அலையைஅந்த இருட்டிலேயே மீண்டும் மீண்டும் உற்றுப்பார்த்தார்கள். என்னோடு கலந்து விட்ட என் மகளை எதற்காக நீங்கள் வீணாகத் தேடுகின்றீர்கள்? என்று தம்மைப் பார்த்துக் கேட்பது போன்று ஆர்ப்பரித்த கடலைப் பார்த்து, ஏன் நாங்களெல்லாம் உனக்குப் பிள்ளைகள் இல்லையோ? ஏன் எங்களை மட்டும் விட்டிருக்கிறாய்? என்று மனதிற்குள் கோபப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அடுத்த நிமிடமே கோபம் மாறி எங்கள் தோழிகள், தோழர்களையெல்லாம் சுமக்கின்றவள் இவள்தானே'' என்ற எண்ணமே மேலோங்கியது.

அங்கயற்கண்ணியின் நினைவுப் பாரமாய் அழுத கனத்த இதயங்களோடு திரும்பினார்கள். காங்கேசன்துறை கடற்பரப்பில் காற்றோடு கலந்த அங்கயற்கண்ணி, ஒவ்வொரு போராளியினது குருதிச்சுற்றோட்டத் துடனும் கலந்து கொண்டாள்.

ஆள்மனதிலே அழுத்தமாகப் பதிந்து கொண்டாள். இன்னுமின்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறாக ஆனாள்.

தீவுப்பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் ஸ்ரீலங்கா இராணுவம் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக வேலணையை ஆக்கிரமிக்க முயன்ற போது, தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பருந்திடமிருந்து பாதுகாக்க வேண்டித் தன் சிறகுகளை விரித்து குஞ்சுகளை மூடிக் கொண்டது. இன்று அந்தக் குஞ்சு பருந்தின் கால் ஒன்றையே முறித்துப் போட்டுவிட்டது.இந்திய வல்லாதிக்கத்தால் கேணல் கிட்டு அவர்களும் அவரின் தோழர்களும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட நாளில் தன்னை விடுதலைப்புலி ஆக்கியவள் தன்னையும் சரித்திரமாக்கினாள்.

*நன்றி, எரிமலை.*

## ''தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்''

257) தனிமனிதனாய், புலமைசார் பின்னணி ஏதுமின்றி ஈழத்தமிழ் வரலாற்றுச் சான்றுகளைத் தேடி ஆராய்ந்து பாதுகாக்கும் நிறுவனமாக செயற்பட்டு அண்மையில் காலமான ஒருவருக்கு 1991ல்' தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அரும்பொருள் தொல் பொருள் பாதுகாப்புக்காக மாமனிதர்''விருதினை வழங்கிக் கெளரவித்திருந்தார். தமிழர் வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த அவர் யார்?

**கலைஞானி'' செல்வரட்ணம் (குரும்பசிட்டி, யாழ்)**

258)தமிழீழத்தின் இதயபூமி தொடர்பான மணலாறு'' எனும்வரலாற்று நூல் 1991 இல் தமிழீத்தாய் பதிப்பக வெளியீடாக வந்தது. இந் நூலின் ஆசிரியர்' யார்?

**மணலாறு விஜயன் (ந. விஜயரத்தினம், செம்மலை, மணலாறு மாவட்டம்)**

259) தமிழீழத் தாயகத்தின் உத்தியோகபூர்வ வானோசையான (வானொலி) புலிகளின் குரல்'' தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு எப்போது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது?

**1990 நவம்பர் 21ம் நாள் காலை 9.30 மணிக்கு**



(துு.கோமளமைந்தன்)

260) விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இரண்டாவது பொலிஸ் நிலையத் தாக்குதல் 05-08-1984 இல் மேற்கொள்ளப்பட்டது. ஆயுதங்கள் பலவும் குறிப்பிடத்தக்களவு கைப்பற்றப்பட்ட அத் தாக்குதல் எது?

**வன்னி, ஒட்டிசுட்டான் காவல் நிலையம் மீதான தாக்குதல்.**

261) ஆனையிறவு படைத்தளத்தின் மீதான ஆகாயக்-கடல்- வெளி'' முற்றுகைச் சமரின் போது 11-07-1991இல் வீரச்சாவடைந்த பெண் போராளி ஒருவரின் இலக்கியப் படைப்புக்கள் அவரது பெயரில் 1992 மேயில் வெளியானது. அம் மாவீரர் யார்?

**கப்டன் கஸ்தூரி (வசந்தி, கணேசன் ஊரெழு கிழக்கு, சுன்னாகம், யாழ்)**

262) 1987 அக்டோபர் 21-22களில் இந்திய அமைதிப் படையினர் (I.P.K.F) யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட படுகொலைகளை மையப்படுத்தி நாவண்ணன்'' எழுதிய குறுநாவல் ஒன்று ஐப்பசி 1995இல் முதற்பதிப்பாக வெளியாகியது. தமிழ்த்தாய் வெளியீட்டகம்'' தந்த அவ் வரலாற்றுப் பதிவேட்டின் பெயர் என்ன?

**அக்கினிக் கரங்கள்.**

263) உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்வரிகளைக் கொண்டு தேனிசை செல்லப்பாவின் இசையமைப்பில் புலம்பெயர் தேசமொன்றில் வெளியான தமிழீழ எழுச்சிப்பாடல் ஒலிப்பேழையின் பெயர் என்ன?

**''விடுதலைப் போர்முரசு''**

264) புலிகளின் குரல் வானொலி ஆரம்ப இசை 1990களின் ஆரம்பத்தில் இசைவாணர் கண்ணனின் நெறியாள்கையில் முழுவடிவம் பெற்றது. இவ் இசைவடிவக் கற்பனைக்குக் காரணமான கலைமேதை கடந்த அக்டோபர் ஆரம்பத்தில் இறைபதம் அடைந்தார். அம் மாமேதை யார்?

**வீரமணி ஐயர்.**

265) விடுதலைப்புலிகளால் 'பெயர் சூட்டி நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதலான இயத பூமி -1 நடவடிக்கை'' மணலாற்றில் எந்த ஆக்கிரமிப்புப் படைமுகாம் மீது மேற்கொள்ளப்பட்டது?

**மண்கிண்டிமலை, ஜனகபுர**

266) தமிழீழ விடுதலைப் புலிகள் முதல் தடைவையாக ஓர் இராணுவப் பிரிக்கேட் தளத்தை அழித்த வரலாற்றுச் சிறப்புமிக்க படைநடவடிக்கையின் பெயர் என்ன?

**ஓயாத அலைகள்- 01 (முல்லைத்தீவு விடுவிப்பு நடவடிக்கை)**

(தொடரும்)

# காத்திரன் பதில்

☹ **வாழ்க்கையில் தொடர்ந்து தோல்விகள் வந்தால் என்ன செய்வது?**

*ஏ.ஜெயராஜ் களுதாவளை -04*

மேடு பள்ளம், ஏற்றம் இறக்கம், வெற்றி தோல்வி, அனைத்தும் உள்ளதுதான் வாழ்க்கை. தொடர்ந்து தோல்விகள் வராது. அப்படி வந்தால் நிச்சயம் தொடர்ந்து வெற்றிகள் வரும்.

☹ **காத்திரனே எம்மினம் தமிழீழத்தை எப்போது கட்டியெழுப்பும்?**

*வி.லவன் காரையூர் கன்னன்குடா*

ஈழத்தமிழன் எல்லோரும் பலத்தைக் கூட்டி பங்காளிகளாக மாறும் போது.

☹ **நமது நாட்டின் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடி அமீனுக்கும் என்ன வித்தியாசம்?**

*தங்கராசா-நாகேந்திரன் பாரதி*
*வித்தியாலயம், கோவில்போரதீவு.*

இடி அமீன் பெண்களை நேசிப்பவன். சந்திரிக்கா ஆண்களை நேசிப்பவர் இடி அமீன் மாறாட்டக் கதைகள் கதைப்பதில்லை. சந்திரிக்கா மாறாட்ட கதைகள் கதைப்பவர்.

☹ **அன்புக்குரிய காத்திரனே! தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் தமிழீழ மண்ணிற்கும் என்ன தொடர்பு?**

*ரி.ஜெயா கோப்பாவெளி.*

ஒரு தொடர்பும் இல்லை. அந்த நடிகையைக் காதலிக்க ஈழமண்ணில் எவரும் இல்லையென்ற கவலைதான் அந்த மனிசிக்கு.

☹ **அன்பின் காத்திரனே ஒரு மனிசனுக்கு வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் ஒரு நிலை வந்தால் என்ன செய்யலாம்?**

*பி.ஈஸ்வரி அக்கரைப்பற்று*

நாயாக மாறிக் குரைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

☹ **பெண் என்றால் பேயும் இரங்குமே என்கிறார்கள் அப்படியானால் பெண்கள் தனியே செல்லத்தயங்குவது ஏன் காத்திரனே ?**

*என்.நாதன் அரசையூர்*

பேய்களாக ஆண்களில் சிலர் வாழ்வதால் தான் இதன் உண்மையான அர்த்தம். பெண்கள் இரங்கு தன்மையுள்ளவர்கள் பேய் பெண்பேயாக இருப்பின் அது இரங்கும். ஆண்பேய் இரங்காது இதுதான் உண்மை.

☹ **குழந்தை பிறந்து சில வாரங்களால் தாய்ப்பாலை தமது குழந்தைக்கு ஊட்டாமல் 'கட்' பண்ணும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர் காத்திரனே?**

*ப.பிரசாந்தி கொக்கட்டிச்சோலை*

தாய்ப்பாலை கட் பண்ணுவது தாய்ப் பாசத்தை கட் பண்ணுவதற்கு சமன் தாய்ப்பாசம் இருந்தால் மட்டுமே தாய் நாட்டிற்காக உழைக்க முடியும்.

☹ **நகர்ப்புறங்களில் உள்ள மாணவிகள் சிலர் வகுப்புக்குச் செல்லும் போது சென்றிப் பொயின்ட்டுகளில் உள்ள சிங்கள படையினருக்கு குட் மோனிங் சொல்கிறார்களே ஏன் காத்திரனே?**

*அ.கோணேஸ் பண்டாரியாவெளி*

குட்மோனிங்" சொல்பவர்கள் குட்நைட்" சொல்லாமல் இருந்தால் சரி.

☹ **பெற்றோரை மதிக்காத பிள்ளைகளைப் பற்றி உங்களது கருத்து என்ன?**

*சிவலிங்கம் சுமதி ஏறாவூர்-04*

பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் சமூகத்தில் மதிக்காதவனாய் கருதப்படுவான்.

☹ **சந்திரிக்கா அம்மையார் மூன்று அமைச்சர் களையும் ஏன் பதவியில் இருந்து நீக்கினார்.**

*க.கிருபேஸ்வரன் குறிஞ்சாமுனை*

சமாதானத்தைக் குழப்பி சண்டைக்கு வலிந்திழுப்பதற்காகவும் அழிவதும் பெண்ணாலே என்பதற்காகவும்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்*

# இலங்கையில்........

**(3ம் பக்கத் தொடர்ச்சி)**

பல்வேறு உதவிகளையெல்லாம் பெற ஆரம்பித்திருப்பதைத் தொடர்ந்து, இலங்கையை ஆக்கிரமிக்கும் நோக்கம் இந்திய அரசியல் தலைமையிடம் வலுப்பெற ஆரம்பித்திருந்தது. அதற்கான திட்டமும் தீட்டப்பட்டது.

அதேவேளை, இந்திய இராணுவத்தின் தளபதி பொறுப்பை கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜீ புதிதாக ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இந்தியப் படைகள் நவீனமயப்படுத்தப்பட்டன. புதிய போர் யுக்திகள் வகுக்கப்பட்டன. நவீன ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவம் தனது பலத்தைப் பரீட்சித்துப்பார்க்க விருப்பப்பட்டது. அதேவேளை இலங்கை மீதும் ஒரு ஆக்கிரமிப்பை மேற்கொள்ளவேண்டிய அரசியல் தேவையும் உருவாகி இருந்ததால், இலங்கை மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு இந்தியப் படைத்தளபதி சுந்தர்ஜீயிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை மீது மேற்கொள்ளப்பட இருந்த படையெடுப்பிற்கு யார்யார் தலைமை தாங்குவது, எந்தெந்த இலக்குகளைத் தாக்குவது, எந்தெந்தப் படைப்பிரிவுகள் தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றுவது என்றெல்லாம் திர்மானிக்கப்பட்டிருந்தது. இலங்கை மீது மேற்கொள்ளப்பட இருந்த தாக்குதல் நடவடிக்கைக்கு 'திரிஷக்தி' என்று பெயரும் சூட்டப்பட்டிருந்தது.

ஏதோ காரணத்திற்காக களமிறக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் இலங்கைப் படையினர் எதுவுமே செய்யமுடியாது அடங்கிப்போயிருந்ததால் அதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

அதேபோன்று, 1987-88ம் ஆண்டுகளில் இலங்கையில் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்தபோதும், இலங்கையில் மேற்கொள்வதற்கு என்று இந்திய இராணுவத்தினர் மற்றொரு இரகசியத் திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். இந்தியாவிற்கு எதிராக ஜே.வி.பியினர் தென்பகுதியில் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து வன்முறையில் இறங்கியிருந்த காலப்பகுதியில் இந்தியப் படையினர் ஒரு இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிட்டடிருந்தனர். இந்தியப் பொருட்களைக் கடைகளில் விற்கக்கூடாது என்று உத்தரவிட்டு இந்திய விரோதப் போக்கை ஜே.வி.பியினர் மிக மேசமாக தென்பகுதிகளில் மேற்கொண்டு வந்த வேளையில், மலைநாட்டில் இருந்த இந்தியத் தமிழர்களுக்கு எதிராகவும் ஏதாவது தாக்குதல்கள் இடம்பெற்றுவிடும் என்று இலங்கையில் இருந்த இந்தியப் படையினர் எதிர்பார்த்தார்கள். அப்படி மலையகத்தில் இருந்த இந்தியத் தமிழர்களுக்கு எதிராக ஏதாவது தாக்குதல்கள் இடம்பெறும் பட்சத்தில் மலையகத்தில் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இந்தியப் படையின் அதிகாரி லெப்டினட்




இந்த நடவடிக்கை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. (இந்த நடவடிக்கைக்கும் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு வந்ததற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை)

இதேபோன்று இலங்கைக்கு எதிராக மேற்கொள்வதற்கென்று மற்றொரு நடவடிக்கையும் திட்டமிட்டப்பட்டிருந்தது. ராஜீவ் காந்தியின் பணிப்புரையின் பெயரில் இந்த நடவடிக்கை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்காக இந்திய இராணுவத்தின் பல்வேறு படை அணிகளைக் கொண்ட தனிப் பிரிவொன்றும் 1987ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ~MO-SL'(Mission Of -Sri Lanka) என்று இதற்குப் பெயரிடப்பட்டிருந்தது. 87ம் ஆண்டு ஜுன் மாதம் 4ம் திகதி இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட 'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கைக்கு இலங்கைப் படையினர் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தால் இந்தியப் படையின் இந்த விஷேட பிரிவினர் ஜெனரல் திபீந்தர் சிங்கின் தலைமையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதற்காக பலாலி தளத்தில் ஒரு விஷேட பரசூட் கொமாண்டோ அணி தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஹெலி மூலமாக இவர்களை மலைநாட்டில் தரையிறக்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அதேவேளை மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் 76வது காலட் படைப்பிரிவை மட்-பதுளை ஏ-5 வீதி வழியாக மலைநாட்டிற்கு நகர்த்தும் திட்டத்தையும் இந்தியப்படையினர் கைவசம் தயார் நிலையில் வைத்திருந்தார்கள். ஆனால் மலையகத்தில் இந்தியத் தமிழர்களுக்கு பாரிய அச்சுறுத்தல்கள் எதுவும் ஏற்படாததால் இந்த திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும் போது, இலங்கைக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு இந்தியா பல சந்தர்ப்பங்களிலும் தயார் நிலையில் இருந்துவந்துள்ளது என்பது உறுதியாகின்றது.

இன்றைய கால கட்டத்திலும், இலங்கையைப் பொறுத்தவரையில் மேற்குலகின் நகர்வுகள் அளவுக்கதிகமாக இலங்கையில் இடம்பெற்று வருவதை இந்தியா வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்றே கூறவேண்டும். சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் (International Security Network) என்று ரனில் தன்பாட்டுக்கு வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களாகச் செய்து தள்ளிக்கொண்டு செல்வதை இந்தியா ஒரு வரையறைக்கு அப்பால் நிச்சயம் அனுமதிக்காது என்பது நிச்சயம்.

அமெரிக்கா சென்றிருந்த ரனில் மறுநாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சை சந்தித்து பாதுகாப்பு தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை சைச்சாத்திட உள்ள நிலையிலேயே சந்திரிக்கா அவசர அவசரமாக பாதுகாப்பு அமைச்சைக் கைப்பற்றியிருந்தது இங்கு நோக்கத்தக்கது. Accusationand Cross Service Agreement என்ற ஒப்பந்தத்தை மறுநாள் அமெரிக்காவுடன் பிரதமர் ரனில் செய்து கொள்ள இருந்த விடயம் வெளியானதைத் தொடர்ந்தே சந்திரிக்கா அதிரடி நடவடிக்கையில் இறங்கியிருந்தார்.

ஒரு பலமான அனுசரணையும், பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லாமல் நிச்சயம் சந்திரிக்காவால் இப்படியான ஒரு நடவடிக்கையைத் துணிந்து மேற்கொண்டிருக்க முடியாது. அந்த அனுசரணையையும், உத்தரவாதத்தையும் இந்தியாவே வழங்கியிருக்கின்றது என்பது, அதன் பின்னர் இடம்பெறும் சம்பவங்ளைப பார்க்கும் போது தெளிவாகத் தெரிகின்றது.

இவை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது, இந்தியாவின் தலையீடு இலங்கையில் ஏதோ ஒரு வகையில் இடம்பெறலாம் என்ற வதந்திகளில் ஒருவேளை உண்மையாகிவிடவும் சந்தர்ப்பம் உள்ளது.

அந்தத் தலையீடுகள் இராணுவத் தலையீடாக இருந்துவிடும் பட்சத்தில், அதன் முடிவுகளை நிச்சயம் விடுதலைப் புலிகளே தீர்மானிப்பார்கள்.


## மாவீரர் நாள் உரை:

**(2ம் பக்கத் தொடர்ச்சி)**

செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள் மாவீரர் நாள் உரைக்கான விரிவான வியாக்கியானத்தை வரும் வாரங்களில் தத்துவாசிரியரான எங்கள் ''பிரம்மஞானி'' யிடமிருந்து எதிர்பார்க்கலாம். ''ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி, இலட்சியத்தால் ஒன்று பட்டமக்களை எந்தவொரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது. விடுதலை என்ற எமது சத்திய இலட்சியத்தில் நாம் உறுதி கொள்வோமாக" என்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாவீரர் நாள் உரையை நிறைவு செய்திருப்பதை செயலா ற்றுவதே, மாவீரர் மகத்துவத்தை மாண்புறச் செய்யுமல்லவா?

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)


# அலையின் பார்வையில்




கார்த்திகை 27 தாயக விடுதலைப்போரில் தன்னுயிரை ஈகை செய்த மாவீரர்களின் நினைவு கூரல்கள், வழிபாடுகள் உள்ளடங்கிய ஒரு புனிதமான நன்நாள். விடுதலைப்போரில் வித்துக்களாகிப்போன தமது உறவுகளின் துயிலுமில்லங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மண்ணின் மைந்தர்களை நினைத்து கொட்டும் மழையிலும் கோவென்று கதறி அழும் காட்சிகள்.






## ஓராண்டு அகவை நாள் 30.11.2003

### செல்வன் சூரியதாஸ் சஜீத்தாஸ்



அம்பிளாந்துறையூரைப் பிறப்பிடமாகவும், மட்டு நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சூரியதாஸ்,தேவிகா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் சூ.சஜீத்தாஸ் இன்று 1வது அகவை நாளில் தடம் பதிக்கிறார், அன்னார், சகல சௌபாக்கியங்களுடன், பலகலையும் பயின்று பாரினில் தமிழனாக வாழ வேண்டுமென அன்பு அப்பா சூரியதாஸ், அம்மா தேவிகா, தங்கை அபிலாஷினி, அப்பம்மா தவமணி மற்றும் பாசமிகு மாமாமார், மாமிமார், நேசமிகு சித்தப்பாமார், சித்திமார், நட்புமிகு அத்தான் மார், மச்சாள் மார், பெரியப்பா, பெரியம்மாமார், அம்மம்மா, ஏனைய சகல உற்றார் உறவினர்களும் அம்பிளாந்துறை ஸ்ரீ சித்திவிநாயகர் ,ஸ்ரீ முத்து மாரியம்மன் அருளால் வாழ்த்துகிறார்கள்.

விஜயபுரம், மட்டக்களப்பு.

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள நித்திபதிப்பகத்தில் அச்சிட்டு 30-11-2003 அன்றுவெளியிடப்பட்டது.